# கந்த பவளமலர்



சைவப் புலவர் வல்லிபுரம் கந்தசாமி

அவர்களின்

பவளவிழா வெளியீடு

20-03-2005

921
கந்த
SL/PR

உ
சிவமயம்

# கந்த பவளமலர்

சைவப்புலவர் வ. கந்தசாமி அவர்களின்
பவளவிழா மலர்
1931 - 2005

G21
கந்த
SL/PR

39183

வெளியீடு :
பவளவிழா நாயகர்
சைவபூஷணம், சைவப்புலவர்
வல்லிபுரம் கந்தசாமி அவர்களின்
சேவைநலம் பாராட்டு விழாச்சபை
20.03.2005



# விழாச் சபை

**தலைவர்**

| | | |
|---|---|---|
| திரு. செ. சுப்பிரமணியம், J.P. | - | *சாந்தையர் மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் கோவில் தர்ம பரிபாலனசபை.* |

**உபதலைவர்**

| | | |
|---|---|---|
| திரு. ந. சிவராசா, | - | *நாவலர் ம. வித்தியாலய அதிபர். ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் தர்மகர்த்தாசபை.* |

**செயலாளர்:**

| | | |
|---|---|---|
| திரு. இ. குகதாசன். | - | *திருநெறிய தமிழிசை வெளியீட்டுக்கழகம்.* |

**உபசெயலாளர்:**

| | | |
|---|---|---|
| திரு. இ. விஜயரெத்தினம் | - | *சாந்தையர்மடம் ஸ்ரீகற்பக விநாயகர், சைவசமய அபிவிருத்திக் கழகம்.* |

**பொருளாளர்**

| | | |
|---|---|---|
| திரு. வி. தயாபரன் | - | *யாழ். சைவபரிபாலன சபை* |

**செயற்குழு:**

| | | |
|---|---|---|
| சைவப்புலவர் சு. செல்லத்துரை | - | *அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கம்* |
| பண்டிதர். ம. ந. கடம்பேஸ்வரன் | - | *ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கம்* |
| திரு. வி. மாணிக்கம் | - | *ஸ்ரீ விஸ்வலிங்க மகா கணபதிகோவில், தர்மபரிபாலனசபை.* |
| சைவப்புலவர் க. சத்தியதாசன் | - | *சித்தாந்த பண்டிதர் சங்கம்.* |
| திரு. இ. சங்கர் | | |
| திரு சு. சிறிகாந்தன் | - | *ஸ்ரீ கற்பக விநாயகர், சைவசமய அபிவிருத்திக் கழகம்* |
| திரு. அ. ஜெயராமன் | - | *வண்ணை ஸ்ரீ காமாட்சியம்மன் தேவஸ்தான பரிபாலன சபை.* |
| திரு. சி. கிருஸ்ணமூர்த்தி | - | *அ. இ. திருமுறை மன்றம்* |
| திரு. ந. சதீஸ்குமார் | - | *வண்ணை ஸ்ரீ காமாட்சியம்மன் ச. ச. நிலையம்.* |
| திரு. க. கனகசிங்கம் | - | *அதிபர், யா / பெரியபுலம் மகா வித்தியாலயம்.* |
| திரு. மா. சிவசுப்பிரமணியம் | - | *இசை வேளாளர் சங்கம்.* |

## பவளமலர்க் குழு

சைவப்புலவர் சு. செல்லத்துரை
இ. சங்கர்
பண்டிதர் ம. ந. கடம்பேஸ்வரன்
சைவப்புலவர் கந்த. சத்தியதாசன்

உ
சிவமயம்

# மலர்முகம்

"அன்பர்பணி செய்யவெனை ஆளாக்கி விட்டுவிட்டால்
இன்பநிலை தானேவந் தெய்தும் பராபரமே"

என்ற தாயுமான சுவாமிகளின் வாக்கைத் தன்வாழ்வின் தாரக மந்திர மாகக் கொண்டு வாழ்ந்து கொண்டிருப்பவர் சைவபூஷணம் வ. கந்த சாமி ஐயா அவர்கள்.

பணிதனுக்கு அணிசெய்யும் இப்பெரியாருக்குப் பவளவிழாச் சேவை நலன் பாராட்டுச் செய்வதுபற்றிச் சிந்திப்பதற்காக (16.02.2005) நாவலர் மகா வித்தியாலய மண்டபத்தில் ஒரு சந்திப்பு நடைபெற்றது. 15 சமய நிறுவனங்களைச் சேர்ந்த 25 க்கும் அதிகமானோர் கலந்து கொண்டனர்.

கூட்டத்திற்கு அழைப்பு விடுத்த சாந்தையர்மடம் ஸ்ரீ கற்பக விநா யகர் தர்மபரிபாலன சபைத்தலைவர் திரு. செ. சுப்பிரமணியம் J.P அவர்கள் தலைமை தாங்கினார். வந்தவர்கள் எல்லோரும் பவளவிழா நாயகர் தத்தம் நிறுவனங்களுடாகச் செய்த, செய்து வருகின்ற அளப்பரும் பணிகளை வாயார மனமாரப் புகழ்ந்து பாராட்டியதைக் கேட்க உள்ளம் சிலிர்த்தது.

வாக்கும் வாழ்வும் ஒன்றாக வாழ்ந்து காட்டுகின்ற சைவபூஷணம் அவர்களுக்குக் கோலாகல விழாவெடுத்துப் பவளமலரும் வெளியிட்டுப் பாராட்டுவதென்றும் இதில் எல்லா நிறுவனங்களும் இணைந்து செயற் படுவதென்றும் அதேவேளை தத்தம் தனித்துவத்தைப் பிரதிபலிக்கும் விதத்தில் பொதுவாகவும், தனித்தும் விருதுகள் வழங்குவதென்றும் முடிவாயிற்று.

விழாச் சபையும், பவளமலர்க் குழுவும் தெரிவுசெய்யப் பெற்று எல்லோரும் முழுமனதுடன் முன்னின்றுழைத்ததன் பயனாக இன்று பவள விழாவில் இக் "கந்த பவளமலர்" மலர்கிறது.

"என்கடன் பணிசெய்து கிடப்பதே" என்ற அப்பர் அருள் வாக்கிற் கேற்ப வாழும் விழா நாயகரின் பன்முகப் பணிகளையும் ஆவணப் படுத்தி அடுத்த தலைமுறையினர்க்கும் கையளிப்பதன் மூலம் விழா நாயகருக்கு நன்றி செய்வதோடு, எதிர்காலத்தில் இவர் போன்ற பலர் உருவாக வழி அமைக்கலாம் என்ற பெரியோரின் நல்லெண்ணத்தின் படி "கந்த பவளமலர்" உருவாக்கப்பட்டிருக்கின்றது.

அருளாளர்களின் ஆசிச்செய்திகளும், சான்றோர்களின் சான்றுரை களும், சமய நிறுவனங்களின் போற்றுரைகளும், புலவர்பாடும் புகழ்ப் பாக்களும், விழா நாயகரின் செவ்வியும் ஆக்கமும், அழகிய வண்ணப் படங்களும் மலரை அணிசெய்கின்றன.

"பண்புடையார்ப் பட்டுண்டு உலகு" என்ற வள்ளுவரின் பொய்யா மொழியை மெய்யாகக் காட்டும் செய்திகளை இம்மலரில் முகரலாம். பண்புடையவர்களால் இந்த உலகு வாழ்கின்றது என்பது மட்டுமல்லப் பண்புடையவர்களை அவர்கள் வாழும் காலத்திலேயே இந்த உலகு போற்றவும் தவறுவதில்லை என்பதற்கும் இது சான்றாகின்றது.

பவளவிழா நாயகர் சைவபூஷணம், சைவப்புலவர் வல்லிபுரம் கந்தசாமி ஐயா அவர்களுக்கே இந்தக் கந்தமலரைச் சமர்ப்பணம் செய்வதில் மட்டற்ற மனநிறைவு கொள்கின்றோம்.

சைவப்புலவர் சு. செல்லத்துரை,
மலராசிரியர்.

உ
சிவமயம்

# அருள் ஆசி

**நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்,**
**இரண்டாவது குருமஹாசந்நிதானம்**
**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த**
**பரமாசாரிய சுவாமிகள்**

அன்புள்ளவர்களிற்கு,

சைவப்புலவர் வல்லிபுரம் கந்தசாமி அவர்களின் பவள விழாவையும், சமூக சமய பணியையும் பாராட்டி மலர் வெளியிடுவதையிட்டு மகிழ்ச்சி அடைகின்றோம்.

அரை நூற்றாண்டு காலமாக சைவ தமிழ்பணிக்கு தொண்டாற்றிய பெருமை சைவப் புலவரையே சாரும்.

சைவபரிபாலன சபையின் ஊடாக நடாத்திய சமயபாடப் பரீட்சையை ஒவ்வொரு ஆண்டும் ஒழுங்குபடுத்தி செயற்படுத்திய திறமைசாலி. இந்நாட்டில் சைவமும் தமிழும் வாழ்ந்து கொண்டிருப்பதற்கு இப்பரீட்சை பலவழிகளிலும் உதவியாக அமையும்.

கந்தசாமி ஆசிரியர் அவர்கள் ஆசிரியராகவும், அதிபராகவும், குடும்பத்தலைவராகவும், எளிமையான தோற்றத்தினையுடையவராகவும், எடுத்த கருமத்தை செவ்வனே ஆற்றக்கூடிய திறமையுடையவராகவும் விளங்கியதோடு பல சமயசமூக நிறுவனங்களினூடாகப் பணி யாற்றிய சிறப்பிற்குரியவர்.

சாந்தையர்மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் கோவிலில் சைவசமய அபிவிருத்திக் கழகத்தின் நீண்டகால அமைப்பாளராக இருந்து நற்பணியாற்றிய சிறப்புடையவர்.

ஆசாரம், ஒழுக்கம் முதலான அனைத்தையும் கொண்ட ஆசிரியரவர்கள் நீண்டகாலம் வாழ்ந்து பணிசெய்ய இறைவனைப் பிரார்த்திப்பதோடு விழா சிறப்புற அமைய இறைவன் ஆசீர்வதிப்பாராக.

'என்றும் வேண்டும் இன்ப அன்பு'

உ
சிவமயம்

# ஆசிச் செய்தி

ஸ்ரீ சிவகுருநாத குருபீடம்
ஸ்ரீமத் சோமாஸ்கந்தவேல் சுவாமிகள்
*குருபீடாதிபதி.*

**"எண்பதத்தால் எய்தல் எளிதுஎன்ப யார்மாட்டும்
பண்புடைமை என்னும் வழக்கு"**

*பவளவிழா காண்பதை முன்னிட்டு மகிழ்ச்சி அடைகிறோம். தக்கார் தகவிலர் என்பது அவர் அவர் ஆற்றும் செயல்களில் அறியப்படும். பண்பாளரும், சான்றோருமாகிய திரு. வல்லிபுரம் கந்தசாமி ஆசிரியர் அவர்கள் ஆற்றும் பணிகள் கூறுவதற்கு மிக மிகப் பலவாகும்.*

*அவர் ஒரு தொண்டராகவும் தொண்டு மனப்பான்மையுடனும், பிரதி உபகாரம் கருதாமலும் கடமையாற்றுபவர். அவர்கள் தமது வாழ்க்கையை சைவசமயப் பணிகளுக்கே அர்ப்பணித்து வாழ்பவர். சாந்தையர்மடம் பிள்ளையார் கோவிலில் நீண்டகாலமாக ஆலய வளர்ச்சிக்கும் சிறப்பிற்கும் தொண்டாற்றி வருகிறார்.*

*நாவலரின் அடிச்சுவட்டில் சைவசமய அறிவைப்பெருக்கும் நோக்குடன் சைவபரிபாலன சபையின் கல்விப்பகுதியின் நாடளாவிய அளவில் பரீட்சைகளை நடத்தி வருகிறார்கள். இப்போட்டிகளைத் தனித்து பல இன்னல்களுக்கு மத்தியிலும் தவறாது நடாத்தி வருவது மிகவும் போற்றுவதற்குரியதும் பாராட்டுதற்குரியதுமாகும்.* **எண்ணித் துணிக கருமம்** *என்பதற்கு எடுத்துக்காட்டாக வாழ்பவர். சைவபரிபாலனசபையில் பலதரப்பட்ட பதவிகளை வகித்து தற்போது தலைவராகவும் சேவையாற்றுகிறார்.*

*நாவலரின் பாட நூல்களை வெளியிடுதல், சமய போதனைகள் செய்தல், சிறுவர்களை சமயநெறியில் வழிப்படுத்துதல், சமயதீட்சை முதலியவற்றை வருடந்தோறும் நடாத்தி ஆன்மிகத்தை வளர்த்தல் போன்ற பற்பலபணிகளை ஆற்றிவருகிறார். வாய்மை, தன்னடக்கம், பொறுமை, பணிவு என்பன அவரின் வாழ்க்கையின் குறிக்கோள்.*

*இப்படியான சான்றோராகிய சைவப்புலவர் திரு. வ. கந்தசாமி அவர்களை குருவருளையும், திருவருளையும் பிரார்த்தித்து ஆசிகள் கூறிவாழ்த்துகிறோம்.*

"ஆற்றுவார் ஆற்றல் பணிதல் அதுசான்றோர்
மாற்றாமை மாற்றும் படை"

சுபம்

உ
சிவமயம்

# சைவப் பண்பாட்டின் பெருந்தொண்டன்.

பண்டிதர் சிவஸ்ரீ க. வைத்தீசுவரக்குருக்கள்
ஈழத்துச்சிதம்பரம்.

சமய சேவை செய்வதென்பது இலகுவான செயலன்று. சிலவேளைகளில் கண்டனத்திற்கு ஆளாகவேண்டியிருக்கும்; சவாலுக்கு முகங்கொடுக்க வேண்டிய நிலையும் ஏற்படும். இத்தகைய சந்தர்ப்பத்திலும் துணிச்சலுடன் முன்வந்து பல ஆண்டுகளாகச் சமயப் பணியைச் சிறப்பாகச் செய்துவருகின்ற பெரியார் திரு. வ. கந்தசாமி அவர்கள் சைவப் பேருலகின் பாராட்டுக்கு உரியவர் ஆவர்.

சைவசித்தாந்த சாத்திரங்கள், திருமுறைகள், புராண இதிகாசங்கள் முதலியவற்றில் நிரம்பிய பயிற்சியுள்ள இப்பெரியார், யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபைப் பரீட்சகராக இருந்து சமயபாடப் பரீட்சையை மிகத் திறம்பட நடாத்தி வருவது ஒரு இமாலய சாதனையாகும்.

திரு. வ. கந்தசாமி அவர்களின் வாழ்க்கை முழுவதும் ஊடுருவி நிற்பது அவரின் சமயப் பற்றாகும். அவர், சைவப் பண்பாட்டின் மொத்த உருவமாகத் திகழ்ந்து வருகிறார் என்பது ஒரு சிறிதும் மிகையாகாது.

**'மேன்மைகொள் சைவநீதி'** எங்கும் விளங்கவேண்டுமென்ற வேணவாவுடைய இப் பெரியார், புராண படன விருப்புடையராக வாழ்ந்துவருவதுமன்றி. சமய அரங்குகள், மகாநாடுகள் முதலியவற்றை முன்னின்று நடத்தி, மக்களிடையே ஆன்மீக எழுச்சி மலர்வதற்கு மூலகாரணராகவும் இருந்து வருகிறார்.

சைவசித்தாந்தம் தமிழகத்தையே பிறப்பிடமாகக் கொண்ட உலக தத்துவங்களுள் தனிச் சிறப்புடையதுமாகக் கருதப்படுகிறது. அதன் மேம்பாடுகளை அறிந்த அகில உலக நிறுவனங்கள், அதன் தத்துவநுட்பங்களை மேன்மேலும் நுணுகி அறியும் பொருட்டுத் தமிழ் நாட்டையே நாடுகின்றன.

பிறநாட்டவர்களாலும் போற்றப்படுகின்ற இந்தச் சைவசித்தாந்தக் கொள்கைகளை எமது நாட்டு மக்களும் நன்கு தெளிவாக நுணுக்கமாக அறிந்துகொள்ள வேண்டுமென்ற நோக்குடன் பெரும் பணியாற்றி வருகின்ற, அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கம், சித்தாந்த பண்டிதர் சங்கம் என்பவற்றோடு இணைந்து செயலாற்றி வருகின்ற பெருந்தொண்டர் திரு. வ. கந்தசாமி அவர்களைச் சைவ உலகம் என்றும் நினைவில் வைத்திருக்கும்.

சைவப்புலவர் வ. கந்தசாமி அவர்களுக்கு என் பாராட்டுக்கள். அவர் எல்லா நலன்களையும் பெற்று வாழவேண்டுமென ஈழத்துச் சிதம்பரக் கூத்தப்பிரானைப் பிரார்த்திக்கிறேன்.

உ
சிவமயம்

# தில்லைக் கூத்தன் திருவடி வாழ்க

காரணவாய் ஸ்ரீலஸ்ரீ கை. திருஞானசம்பந்தக் குருக்கள்

சீர்வளர்சீர் பெருந்தகை வ. கந்தசாமி அவர்கட்கு பவளவிழா எடுத்து சேவை நலம் பாராட்டிக் கொண்டாடும் நிகழ்ச்சி குறித்து பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

இந்நிகழ்வு நடப்பது மிகமிகப் பொருத்தமானது. சைவப் பெருமகான்கள் ஒன்றுகூடி எல்லா வகையாலும் பாராட்டுவிழா எடுப்பது சைவசமயத்திற்குச் செய்யும் சிறந்த பணியாகும்.

குருமார், சைவப் புலவர்கள், வித்துவான்கள், பண்டிதர்கள், அறங்காவலர்கள், சைவப் பொதுமக்கள் இவ் விழாவில் கலந்துகொண்டு ஆசியுரை வழங்குவதும் வாழ்த்துவதும் அவர்கள் செய்த சேவைக்கு எடுத்துக்காட்டாக அமைகிறது.

ஆசிரியர் அவர்களைப் பார்க்கும்போது மிக பசுமையாக உள்ளவர் போல் காட்சி அளிக்கிறார்.

ஆன்ம சுபாவமுள்ளவர், ஆஜானுபுருஷர், நாவலர் பெருமானின் வழிநின்று கண்ணிய மாக கடமைகளைச் செய்தும் செய்வித்தும் வந்த பெருமகனார். சமயத்தின் உயிர் போல் விளங்கிய செம்மையான உள்ளமுடைய பெருந்தகை.

சமயவகுப்புகளும், தேர்வுகளும் நடாத்தி ஆலயத்திற்கும், தமிழுக்கும் சமயத்திற்கும் உள்ளத்தாலும் உடலாலும் உழைத்த உத்தமனார்.

எல்லாச் சிறப்புகளும் தன்னகத்தேகொண்டு ஒளியெனப் பிரகாசித்துவரும் சைவப்பெரியார் என் அன்புக்குரிய சைவப்புலவர் கந்தசாமி அவர்களைப் பாராட்டி ஆசி வழங்குகிறேன்.

உ
சிவமயம்

# பவளவிழா தழைக வாழ்க

சித்தாந்த சரபம், பெரும் பேராசான் வை. இரத்னசபாபதி
*சைவசித்தாந்தத் துறை முன்னாள் தலைவர்,*
***சென்னைப் பல்கலைக்கழகம்.***

திருவருளும் குருவருளும் திகழ்ந்தே பொதுளும்
செம்மைநலச் செழுமையுடன் திகழும் தூயர்
இருமையுறு சேவைநலம் புரிந்த பேற்றால்
இசைபொதுளும் வல்லிபுரம் கந்த சாமியார்
தருவெனவே சைவமுடன் தமிழும் காத்து
தகை இலங்கை வல்லிபுரக் கோனாய் நின்று
தருமமெலால் தனைத்துதிக்கச் சமுதா யத்தைத்
தகையுளத்தால் சேவைதனால் வளர்க்கும் பெரியர்.

பலவளத்துப் பவளவிழாக் காணும் பேற்றார்
பகைபேணார் இகல்காணார் பதற்றம் கொள்ளார்
அலருலகில் திருநின்ற செம்மை என்னும்
அரியமனச் செம்மையுறு விறலின் மிக்கார்
வலமாகும் சிவப்பணிகள் தமிழின் பணியும்
வான்மையுடன் வாய்மைபெற வழங்கு நல்லர்
தலம்புகழும் வல்லிபுரக் கந்த சாமியார்
தாள்பணிந்தேன் பவளவிழா தழைக வாழ்க.

உ
சிவமயம்

# வாழ்த்துச் செய்தி

**கலாநிதி சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி**
*தலைவர்*
*ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,*
*தெல்லிப்பழை.*

எமது யாழ் மண்ணையும், ஈழத்திருநாட்டையும் சைவத்தமிழ் பண்பாட்டினால் நன்கு மிளிரச் செய்பவர்களில் சிறப்பிடம் வகிப்பவர் சைவப்புலவர் கந்தசாமி அவர்கள்.

அடக்கமும், பண்பும் கொண்ட இப்பெரியார் சைவசீலத்தோடு என்றும் வாழ்பவர்.

பேச்சிலும், மூச்சிலும், கருமம் ஆற்றுதலிலும் தனியொருவராக நின்று இயங்கக் கூடிய வல்லமை இவருக்குண்டு.

சைவ பரிபாலனசபையைப் பல வருடங்களாகக் கட்டிக்காத்து வருபவர் இவர்.

சபையினர் மேற்கொள்ளும் குருபூசை விழாக்கள், சமயபாடப் பரீட்சைகள், பேச்சுப் போட்டிகள், பண்ணிசைப் போட்டிகள் அனைத்தையும் செம்மையாகவும், சிறப்பாகவும் நடாத்தி மேற்படி சபையின் பெருமை குன்றாது வளர்த்து வருபவர் இவர் என்றால் மிகை யாகாது.

மேலும் சபையின் பணிகளோடு, சாந்தையர் மடப் பிள்ளையார் கோயில் பரி பாலனத்தையும் நன்கு பேணிவருபவர் இவர்.

கற்ற கல்விக்கு ஏற்பவும். பழகிய சைவப்பண்பாட்டுக்கு ஏற்பவும் வாழ்ந்து இன்று பவளவிழா காண்கிறார்.

இப்பெரியாரைப் பாராட்டுவதனால் சேவைநலன் பாராட்டும் சபை பெருமை அடை கிறது. ஆகவே அவர்கள் அனைவரையும் வாழ்த்தி அமைவதோடு சைவப்புலவர் திரு. கந்தசாமி அவர்கள் இன்னும் பல்லாண்டு காலம் தேக நலத்தோடும், பூரண மனநிறைவோடும் வாழ வேண்டும் என்று எல்லாம் வல்ல துர்க்காதேவியைப் பிரார்த்தித்து அமைகிறேன்.

உ
சிவமயம்

# சந்தன நதியாகி பாய்ந்திட வணங்குகின்றேன்

ப. விக்னேஸ்வரன்
*வலயக் கல்விப் பணிப்பாளர்,*
*யாழ்ப்பாணம்.*

தொல்காப்பியம் தூக்கி நிறுத்தல் செய்த....... மணற்றி என்ற யாழ்ப்பாணம் ஆறுமுக நாவலரின் சுவாசக் காற்றில் கந்தபுராண பண்பாட்டில் கோலங்கள் கீறியுள்ளது. வேதங்கள் மறைகள், கோயில்கள் நிறைஒலியில் சைவ வாழ்வில் சமய வாழ்வின் நிறைகுடமாக, ஒளி விளக்காக பவளவிழா நாயகர் சைவப்புலவர் ஆற்றும்பணி மகத்தானவை.

மல்லிகைத் தோப்பாக மணம் கமழ்ந்து அர்த்தமுள்ள இந்து மதத்தின் நிறுவனங் களுடன் இணைந்து, புலவர் ஆற்றும் பணி, ஈழத்து, காலப் பெட்டகத்தால் காக்கப்பட வேண்டிய ஒன்றாகும். சமயங்களின் ஊட்டல்கள் இல்லாதமொழிகள், காலத்தால் கருகி வருகின்றன. ஆனால் இந்து சமயத்தின் தோத்திர, திருவாசக புராண வரிகளால் தமிழ் இன்றும் என்றும் இளமையாக நிமிர்ந்து நிற்கின்றது.

அதற்கு சைவப்புலவர் வ. கந்தசாமி அவர்களின் சந்தன வாழ்வு ஆக்கமும், ஊக்க மும் அளிக்கின்றது. அகரங்களின் கொலுசின் நெறிதவறாத சிகர நிழலாக செந்தமிழையும் சைவத்தையும் பேணிடும் செம்மல் வாழ்வு மாணவ சமூகத்தின் சுவடாகி நீளல்வேண்டும். தோன்றும் புகழோடு தோன்றி வாழும் புலவர் வ. கந்தசாமி அவர்கட்கு, அவரின் கேணியான படைப்புகளுக்கு பவள விழாக்குழு எடுக்கின்ற சேவை விழா மலர்வெளியீடு எல்லோராலும் பாராட்டப்பட வேண்டிய ஒன்றாகும்.

பவளவிழா பாசம் பொழியும் சைவப்புலவர் வ. கந்தசாமி அவர்கள் பல்லாண்டுகள் சைவஆகமத்தின் சந்தன நதியாகி பாய புலவரை ஆலாபனை செய்கின்றேன். விழாக் குழுவிற்கு கல்விச்சமூகத்தின் பாராட்டுக்கள். திருத்தலங்களும், தெய்வங்களும் ஆசிகூறும். இந்த நிலம் - சைவப் புலவரின் பணியில் மகிழ்ந்து வாழ்த்துக்கள் வழங்க இறைவனை வணங்குகின்றேன்.

உ
சிவமயம்

# அவருக்கிணை அவரே

**முனைவர் தமிழப்பனார்**
*உலகத்தமிழ் நூலக அறக்கட்டளை*
*நிறுவனர் தலைவர்,*
*தமிழ்நாடு.*

ஈழத்தமிழர் துயர்காண வந்த நேரத்தில்
எந்தன் நெஞ்சில் புகுந்து அதனை
அப்படியே விழுங்கிக் கொண்டவர்
சைவப்புலவர் வ. கந்தசாமி அவர்கள்.
இளவேனிற் காலத்து ஒளிமுகம், அவர் முகம்.
ஏரி நிறைந்தன்ன இனிய பேச்சு, அவர் பேச்சு.
வயலுக்குப் பாயும் வாய்க்காலின் தொண்டு, அவர் தொண்டு.
கண்டால் இனிக்கும் கரும்பு அவர்.
கைபட்டால் மணக்கும் சந்தனம் அவர்.
விருந்தோம்பலே பிறந்த பிறப்பு.
அருந்தமிழ்த் தொண்டே அவர் சிறப்பு.
பாராட்டிற்கெல்லாம் அப்பாற்பட்ட பண்பாளர்.
பழகுதற்கினிய நட்பாளர்.
அப்பரை நினைவூட்டும் அருளாளர்.
அவருக்கிணை அவரே!

சைவபூஷணம், சைவப்புலவர்

## வல்லிபுரம் கந்தசாமி அவர்களின்

இல்லறவாழ்வின் ஒளிவிளக்குகள்



விழாநாயகர் தம்பதிகள்



விழாநாயகரின் மகன்
பாலேந்திரன் குடும்பம்

விழாநாயகரின் மகன்
இராசேந்திரன் குடும்பம்



உ
சிவமயம்

# சைவப் பாரம்பரியத்தின் ஆதர்ஷபுருஷர்

கலாநிதி ப. கோபாலகிருஷ்ணஐயர்,
இந்து நாகரிகத்துறை முன்னாள் பேராசிரியரும்
கலைப்பீடாதிபதியும்,
யாழ். பல்கலைக்கழகம்.

யாழ்ப்பாணத்தில் நீண்டதொரு சைவப்பாரம்பரியம் நிலைபெற்று வருவது நாம் செய்த தவப்பயனேயாகும். சைவ சமய நியமங்களுடன் சைவவாழ்வு வாழ்ந்து வருவோர் வரிசையில் சைவப் புலவர் வ.கந்தசாமி அவர்கள் ஆதர்ஷ புருஷராக விளங்கி வருபவர். அவருக்குப் பவளவிழா என்பது சைவ சமயத்திற்காக வாழ்ந்து கொண்டிருக்கும் ஒருவருக்கு நாம் காட்டும் உன்னத கௌரவமாகும். முதற்கண் பவளவிழா காணும் சைவப் புலவர் கந்தசாமி அவர்களுக்கு சகல வளங்களுடனும் இனிதே வாழ எம் மனமு வந்த நல்வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்!

சைவப்புலவர் கந்தசாமி அவர்கள் தமது வாழ்வை சைவநெறியின்படி அமைத்துக் கொண்டவர். முறையாக தீட்சை பெற்று சமயபிரவேஞ் செய்து தாமும் அந் நெறியில் நின்று சிறப்புற வாழ்ந்து ஏனை யோரையும் அந்நெறி நின்று பயன்பெற ஆற்றுப்படுத்தி வருபவர். திரு. கந்தசாமி அவர்கள் சிறப்புமிகு சைவக் குடும்பத்தில் பிறந்து சைவச் சூழலில் கல்வி கற்று சைவப்புலவராகவும், நல்லாசிரியனாகவும் பரிணமித்து ஆசிரியராகப்பணி செய்த காலத்திலும் பின்னர் அப்பணியிலிருந்து ஓய்வு பெற்றதன் பின்னரும் தமது முழுவாழ்வையும் சைவசமயத்தின் மேன்மைக்காக அர்ப்பணித்து வருபவர். சீரிய சைவ வாழ்வு வாழவேண்டு மென விழைபவர்களுக்குச் சிறந்த முன் உதார ணமாகத் திகழ்பவர். சைவத்தின் வளர்ச்சிக்கு எவ்வாறு சேவையாற்றலாம் என்று சிந்திப் பவர்களுக்கு அவரது பணிகள் வழிகாட்டி நிற்பன.

நீண்டகாலம் என்மீது கொண்ட அன்பு, அபிமானம் காரணமாக சைவப்புலவர் பட்ட மளிப்பு விழாக்களிலும் சைவபரிபாலன சபை பரிசளிப்புவிழா மற்றும் மகா நாடுகளிலும் என்னை பிரதம விருந்தினராகவும் சிறப்புச் சொற்பொழிவாளராகவும் அழைத்து பங்கு கொள்ளச் செய்த பண்பை அன்புடன் இங்கு நினைவு கூர்வதில் மகிழ்வடைகின்றேன்.

நல்லைநகர் நாவலர் பெருமான் வண் ணார்பண்ணையைத் தளமாகக் கொண்டு எவ் விதம் சைவப்பணிகளை முன்னெடுத்துச் சென் றாரோ அதேபோன்று சைவப்புலவர் கந்தசாமி அவர்களும் வண்ணார்பண்ணையையே தமது சைவப்பணிக்குத் தளமாகக் கொண்டு செயற் பட்டு வருபவர். நாவலர் பாடசாலை, நாவலர் தர்மகர்த்தாசபை, சைவபரிபாலனசபை, சைவப் புலவர் சங்கம், வண்ணை சாந்தையர் மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் கோயில் பரிபாலன சபை, அவ்வாலயத்தை தளமாகக் கொண்டு செயற்படும் சைவசமய அபிவிருத்திக் கழகம்,

வண்ணை பன்றிக் கோட்டுப் பிள்ளையார் ஆலயம் போன்றவற்றில் தம்மை முழுமை யாக இணைத்துக் கொண்டு அரிய பணி யாற்றி வருபவர். சைவப்புலவர் அவர் களது சைவப் பணிகளை நாம் அவதானிக் குமிடத்து, சைவ சமய நிறுவனங்களுடன் இணைந்து நிறுவனப்படுத்தப்பட்ட பின் னணியில் சமயச் செயற்பாடுகளை முன் னெடுப்பதில் பெரும் அக்கறை கொண்டு விளங்குவது தெளிவாகும். அத்தகைய வாய்ப்பு அவருக்கு இறைவன் திருவருளி னாலேயே கிட்டியுள்ளது. தமது குடும்பப் பொறுப்புக்களின் மத்தியிலும் இத்தகைய செயற்பாடுகளுக்கு அவர் தமது வாழ்வில் கூடிய நேரம் ஒதுக்கி வருபவர்.

நாவலர் சிந்தனைகளுக்குச் செயல் வடிவம் கொடுப்பதையே இலட்சியமாகக் கொண்டு செயற்படும் சைவபரிபாலன சபையின் உறுப்பினராக, செயலாளராக, கௌரவ பரீட்சைச் செயலாளராக, தலைவ ராக படிப்படியாகத் தமது தன்னலங் கரு தாத பணி மூலம் உயர்வுகண்டவர். சைவ பரிபாலன சபையின் சார்பில் சைவ சமயப் பரீட்சையை நாடளாவிய நிலையில் நடாத்தி வெற்றி பெற்ற மாணவர்களுக்குப் பரிசில்கள் போன்றவற்றை வழங்கச் செய்து இளந்தலைமுறையினர்க்கு ஊக்க மூட்டிவருபவர்.

பெரியாரைத் துணைக்கோடற் பண் பில் பெரியவர்களை மதிக்கும் பண்புமிக்க வர் சைவப்புலவர். வியாகரண சிரோமணி பிரம்மஸ்ரீ தி. கி. சீதாராமசாஸ்திரிகள், நல்லை ஆதீனகுரு மகாசந்நிதானம், இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி. கண பதிப்பிள்ளை, பேராசிரியர் அமரர் பிரம் மஸ்ரீ கா. கைலாசநாதக் குருக்கள், பிரம் மஸ்ரீ அமரர் ஆத்மநாதசர்மா, வித்துவான் ந. சுப்பையபிள்ளை போன்ற சான்றோர் களின் அன்பையும் ஆதரவையும் பெற்று கடமையாற்றியதன் மூலம் தமது பண்பையும் ஆற்றலையும் வளர்த்துக் கொண்டவர்.

**'அரியவற்றுள் எல்லாம் அரிதே பெரியாரைப்**
**பேணித் தமராக் கொளல்.'**

என்ற வள்ளுவப் பெருந்தகையின் குறள்வழி வாழ்ந்துவரும் பெருமைக்குரியவர். எடுத்த காரியம் நிறைவேறும்வரை உறுதியுடனும் அர்ப்பணிப்புடனும் செயற்படும் கர்மவீரனா கவே அவரை நான் காண்கிறேன்.

வெளி மாவட்டங்களில் ஆசிரியராகப் பணிபுரிந்த காலத்திலும் வார இறுதி நாட்களில் யாழ்ப்பாணம் வந்து தமது சமயக் கடமை களை நிறைவேற்றுவதில் தவறுவதில்லை. சைவநூல்களில் ஆழ்ந்த புலமையாளர். அத் துடன் அமைதியாக எத்தகைய ஆரவாரமு மின்றித் தமது பொறுப்புக்களைச் செவ்வனே நிறைவேற்றும் ஆற்றல்மிக்கவர். எடுத்துக்காட் டாக வண்ணை சாந்தையர்மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் கோயில் சைவசமய அபிவிருத்திக் கழகத்தில் 1953 ம் ஆண்டுமுதல் ஸ்தாபக உறுப்பினராக இருந்து பல்வேறு நிலைகளில் பதவிவகித்து அக் கழகம் வெள்ளிவிழா காண் பதற்கும் பின்னர் 2003 ஆம் ஆண்டு பொன் விழா காணும் வரை அதனைப் பல்வேறு பரி மாணங்களில் வளர்ச்சியுறச் செய்த பெருமை இவருக்குண்டு.

அனைவரையும் அன்புடன் அரவணைத்து சமயப் பணிகளை முன்னெடுப்பதில் வல்லவர். இளந் தலைமுறையினரை கூட்டுப்பிரார்த் தனை, பஜனை போன்றவற்றில் ஆற்றுப்படுத் தல் நூலக சேவை, சிரமதானப்பணி, சமயச் சொற்பொழிவுகள், பரிசளிப்பு விழாக்கள், சமயப் பரீட்சை, புராணப்படிப்பு, மகோற் சவங்கள், குருபூஜைகள், அரியநூல்களை அச்சிடுதல், விதிமுறைப்படி விபூதி தயாரித் தல், முதலிய நற்பணிகள் இக் கழகத்தின்

வாயிலாகச் சிறப்படைய சைவப் புலவர் உந்து சக்தியாக விளங்கி வருபவர். வயது முதிர்ந்த காலத்திலும் தமது துவிச்சக்கர வண்டியின் துணையோடு இளமைத் துடிப்புமிக்கவர் போன்று தமது கடமையை நிறைவேற்றி வருபவர்- சுருங் கக் கூறின் நாவலர் காட்டிய வழியில் சைவ நியமங்களுடன் வாழ்ந்து சைவப் பணி யாற்றிவரும் தொண்டரே சைவப்புலவர் அவர்கள். சைவத் தொண்டே புனிதமானது என்ற கொள்கையுடன் செயற்படுபவர். இத் தகைய பணிகள் மூலம் இளந் தலைமுறை யினரை சிவநெறியில் ஆற்றுப்படுத்தி வரு வது பாராட்டிற்குரியதும் பெருமைக்குரி யதுமாகும். இவர் இல்லாத சைவசமய விழாக்கள் நிறைவு பெறாது எனக் கூறத் தக்க வகையில் தமது பணிகளின் மூலம் முக்கியத்துவம் பெற்று விளங்குபவர்.

**"அன்றறிவாம் என்னாது அறஞ்செய்க மற்றது
பொன்றுங்கால் பொன்றாத் துணை"**

என்ற வள்ளுவப் பெருந்தகையின் வாக்கிற் கேற்ப தம்வாழ் நாளை சைவ சமயஞ் சார்ந்த அறப்பணியில் ஈடுபடுத்திக் கொண்டு சைவச் சான்றோரின் அன்புக்குப் பாத்திரமாக விளங்கி வருகின்றார்.

யாழ்ப்பாணத்தில் பல்வேறு சமய நிறுவ னங்கள் பல்வேறு விழாக்களை காண அயராது உழைத்துவரும் சைவப்புலவர் கந்தசாமிக்கு பவளவிழா என்றவுடன் சைவ உலகம் பூரிப்படைகின்றது. பவள விழாகாணும் சிவ நெறிச் செம்மல் சைவப்புலவர் கந்தசாமி அவர்கள் எல்லாம்வல்ல ஸ்ரீ கற்பக விநாயகப் பெருமானது திருவருளால் அனைத்து வளங் களுடன் பல்லாண்டு காலம் இனிதே நலமுடன் வாழ்ந்து மேன்மைகொள் சைவநீதியை உல கெல்லாம் பரவும் வகை செய்யும் தொண்டில் தொடர்ந்து ஈடுபட்டு மற்றுமொரு தலைமுறை யினர்க்கு வழிகாட்டியாகத் திகழ வேண்டுமென அவரை வாழ்த்துவதில் மிக்க மகிழ்ச்சியடை கின்றோம். இவ்விழாவை நடாத்தமுன்வந்த அமைப்புக்குழுவினர்க்கும் எமது வாழ்த்துக்கள் உரித்தாகுக.

## பவளந் தழுவிய திருமுறைப்பாடல்

### தேவாரம்

**பண் - தக்கராகம்** | **தலம் - திருப்புன்கூர்**

**பவள** வண்ணப் பரிசார் திருமேனி
திகழும் வண்ணம் உறையும் திருப்புன்கூர்
அழகர் என்னும் அடிகள் அவர்போலும்
புகழ நின்ற புரிபுன் சடையாரே.

# சைவபூஷணம் சைவப்புலவர் வ. கந்தசாமி அவரது வாழ்க்கை சிவப்பணியாளர்களுக்கோர் முன்மாதிரி

பேராசிரியர், இ. குமாரவடிவேல்,
விஞ்ஞான பீடாதிபதி,
யாழ். பல்கலைக்கழகம்.

ஒரு மெல்லிய உருவம். வெள்ளை வேட்டி - வெள்ளை மேலங்கி அல்லது உத்தரீயப் போர்வை - நெற்றி நிறைந்த விபூதி - சந்தண குங்குமப் பொட்டுக் களுடன் சாந்தம் நிறைந்த முகம்.

சைவப்பெரியார் சிவபாதசுந்தரனா ரைப் புகைப்படத்தில் பார்த்தவர்கள் இவரது தோற்றம் அவரை ஒத்திருப்ப தைக் காண்பார்கள். இத்தோற்றப் பொலி வைக் கொண்ட அந்த உருவம் மிதிவண்டி யொன்றில் காலை ஏழு மணிக்கு முன் தனது யாழ்ப்பாணம் அரசடி வீதியிலுள்ள இல்லத்திலிருந்து புறப்படுகிறது. மத்தி யான உணவு வேளையில் இரு மணிநேர ஓய்வு தவிர்ந்த மற்றைய வேளையெல் லாம் இரவு ஏழு மணிவரை மிதிவண்டி யில் ஓடித்திரிந்து பல கருமங்களைச் செய்துவருவார்.

அக்கருமங்களில் தொண்ணூற் றொன்பது சதவீதமானவை சைவசமய வளர்ச்சி கருதியவை.

வீட்டில் தங்கியிருக்கும் இரவு வேளையும் அதிகாலைப்பொழுதுங்கூட பிரார்த்தனை, சமய நூல்கள் சஞ்சிகைகள் படித்தல், சமய வளர்ச்சிப் பணிகளைத் திட்டமிடல் போன்றவற்றிற்குத் தான் ஒதுக்கப் பட்டிருக்கும். இந்த உருவத்திற் குரியவர்தான் சைவப்புலவர் வல்லிபுரம் கந்தசாமி அவர்கள்.

சைவப்புலவருடன் நெருங்கிப் பழகு பவர்களுக்குக் கூட அவர் ஆற்றும் பல்வேறு பட்ட பணிகள் பற்றியும் அவரது வாழ்க்கை வரலாறு பற்றியும் அதிகம் தெரியாது.

பெயருக்கும் புகழுக்காகவும் அன்றி தொண்டு மனப்பான்மையுடன் கருமங்கள் ஆற்றுவதால், அவர் தாம் ஈடுபட்டிருக்கும் பணிகள்பற்றித் தேவைக்கதிகமாக எவருக்கும் கூறிக்காட்டுவதில்லை.

அதனால் அவரது தொண்டுகள் இலை மறைகாயாகவே இருந்து வருகிறது. எழுபத் தைந்து வயதைப் பூர்த்தி செய்து விட்ட அன்னாரது தன்னலமற்ற அர்ப்பணிப்பு மிக்க சேவைகளை சைவ உலகம் அறிந்து கொள் வது நல்லது.

சைவப்புலவரது சேவைகளைப் பாராட்டி அகில இலங்கை சைவப்புலவர் சங்கத்தினர் அன்னாருக்கு **'சைவ பூஷணம்'** பட்டமளித்துக் கௌரவித்திருக்கும் இச் சமயத் தில், அவரது வாழ்க்கை வரலாற்றையும் தொண்டுகளையும் எழுத்தில் பதிப்பது நன் றெனக் கருதுகிறோம்.

**இளமைக்கல்வி:**

சைவப்பெரியர் சு. சிவபாதசுந்தரம் பிள்ளை அவர்கள் ஆசிரியப் பணியிலிருந்து இளைப்பாறிய பின் ஆச்சிரமமமைத்து இருபத்தைந்து வருடகாலம் தவசிரேட்டராக வாழ்ந்த பூமி வல்வெட்டித் துறைக்குச் சமீபத்திலுள்ள பொலிகண்டி என்ற கிராமம். அங்கு கந்தவனக் கடவையில் அமைந்த கந்தப்பெருமான் கோவில் பிரசித்தமானது. கந்தவனக்கடவைக் கோவில் வீதியில்தான் சைவப்பெரியார் சிவபாதசுந்தரனார் ஓலைக்கொட்டில் குடிசை அமைத்து வாழ்ந்தார்.

இத்தகு சிறப்புப்பெற்ற கந்தவனக் கடவையிலே 1931 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் பதினெட்டாம் திகதி (சைவப்பெரியார் பிறந்த தினம் 1878 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் பதினேழாம் திகதி. திகதி, மாதத்தில் கூட ஒரு நெருக்கம்) வல்லிபுரம் வள்ளியம்மை தம்பதியினருக்குப் புத்திரனாகப் பிறந்தார்.

தனது ஆரம்பக்கல்வியைக் கரணவாய் வடக்கு சைவ வித்தியாசாலையிற் பெற்றுக்கொண்ட இவருக்கு சைவப் பெரியார் சிவபாதசுந்தரனார் கந்தனக் கடவையில் ஆச்சிரமம் அமைத்திருந்தது பெருவாய்ப்பாக அமைந்தது.

சைவப்பெரியார் இவரைச் சைவ உணர்வுமிக்க ஒருவராக உருவெடுக்க வைத்தார் எனக்கூறலாம். இடைநிலைக் கல்வியை யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணை நாவலர் சைவப்பிரகாச வித்தியாசாலையில் தொடர்ந்த போது, இவரது சைவாபிமானம் மேலும் மெருகு பெற்றது.

அக்காலத்தில் சைவப்பிரகாச வித்தியாசாலையின் அதிபராக வித்துவான். ந. சுப்பையபிள்ளையும் உபஅதிபராக வை. ஆத்மநாதசர்மாவும் கடமையாற்றினார்கள். 1953 முதல் நாவலர் சைவப்பிரகாச வித்தியாசாலையில் சைவத்தமிழ் உயர் நிலைக்கல்வி நடைபெற்றது. அக்கல்வியின் போதனாசிரியர்களாக வித்துவான் ந. சுப்பையபிள்ளை தமைமையில் வித்துவான் கார்த்திகேசு, வித்துவான் வேந்தனார், வித்துவான் க. கி. நடராஜன், பண்டிதர் மு. இரத்தினேஸ்வரஐயர் ஆகியோர் கற்பித்தார்கள். அவர்களிடம் இலக்கிய, சமய நூல்களைக் கற்கும் வாய்ப்பு திரு. கந்தசாமி அவர்களுக்குக் கிடைத்தது.

நாவலர் பெருமான் மீது பெருமதிப்பும் பக்தியும் ஏற்பட நாவலர் பாடசாலைத் தொடர்புகள் வழிவகுத்தன.

**ஆசிரியப்பணி:**

திரு. கந்தசாமி அவர்களின் சமய அறிவையும் சமயவுணர்வையும் தமிழ்ப் புலமையையும் நேரில் கண்டு கொண்ட அவர் கல்வி பயின்ற வண்ணார்பண்ணை நாவலர் சைவப்பிரகாச வித்தியாசாலை (இன்றைய நாவலர் மகா வித்தியாலயம்) முகாமையாளர் திரு. வி. முத்துக்குமாரு அவரை 02.02.1953 இல் அப் பாடசாலையிலேயே ஆசிரியப் பணியில் அமர்த்தினார்கள்.

நாவலர் பாடசாலையில் கல்வி கற்பிக்கும் போது அங்கு நடைபெற்றுவந்த காவிய பாடசாலையிலே பயின்று 1958 ஆம் ஆண்டு சைவசித்தாந்த பண்டிதர் தேர்விலும், 1961 ஆம் ஆண்டு சைவப்புலவர் தேர்விலும் சித்தியடைந்தார். நல்லூர் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையிற் பயின்று 1960 ஆம் ஆண்டில் பயிற்றப்பட்ட ஆசிரியரானார். 1980 ஆம் ஆண்டு கல்வித்திணைக்களத்தினால் கொழும்புத் துறை ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் நடாத்தப்பட்ட பயிற்சிப் பட்டறையில் விசேட சமயப் பயிற்சியும் பெற்றுக்கொண்டார்.

1961 ஆம் ஆண்டு பாடசாலைகள் அரசுடைமையாக்கப்பட்டதைத் தொடர்ந்து வண்ணை நாவலர் பாடசாலையிலிருந்து 1967 ஆம் ஆண்டு இடமாற்றம் பெற்ற திரு. கந்தசாமி அவர்கள் ஏழாண்டுகள் வெளிமாவட்டங்களில் சேவையாற்றினார். ஜனவரி 1967 முதல் மூன்றாண்டுகள் ஹொறவப்பொத்தானை மகா வித்தியாலத்திலும் ஜனவரி 1970 முதல் நான்காண்டுகள் மிகிந்தலை றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையிலும் ஆசிரியராகக் கடமையாற்றி தரம் 10, 11க்கு சைவசமயம், தமிழ் கற்பித்தார். 1974 ஜனவரி மாதத்தில் யாழ்ப்பாணம் பெரியபுலம் மகா வித்தியாலயத்திற்கு இடமாற்றம் பெற்று அங்கு உதவி ஆசிரியராகக் கற்பித்து உபஅதிபராகவும் பதவியுயர்த்தப்பட்டு தரம் 13க்கு இந்துநாகரிகமும் இந்துசமயமும் கற்பித்தார். 17.01.1991 ஆம் திகதி அறுபது வயதில் ஓய்வுபெறும் வரை பெரியபுலம் மகா வித்தியாலயத்திலேயே துணை அதிபராகக் கடமையாற்றினார்.

இவரிடம் கல்வி கற்றவர்கள் சமய உணர்வும், தமிழ் இலக்கண அறிவும் பெற்றவர்களாகத் திகழ்ந்தனர். தாம் ஆசிரியப் பணியாற்றிய பாடசாலைகளிலெல்லாம் சமயகுரவர் குருபூசைகள், சமயவிழாக்கள் ஆகியன சிறப்பாக நடைபெறக் காரணமாகவிருந்தார்.

**ஆலயங்கள் ஊடான சமயப்பணி:**

நாவலர் பாடசாலையில் கல்வி கற்க ஆரம்பித்த காலத்திலேயே திரு. கந்தசாமி அவர்கள் அப்பாடசாலைக்கு முன்னே கோவில் கொண்டு எழுந்தருளியுள்ள சாந்தையர் மடம் கற்பக விநாயகரைச் சிக்கெனப் பற்றிக்கொண்டார். மாறாத பக்தியுடன் ஆலய வழிபாட்டிலும் தொண்டிலும் ஈடுபட ஆரம்பித்த சைவப்புலவர் அவர்கள் தாம் ஆசிரியப் பணியாற்ற ஆரம்பித்த 1953 ஆம் ஆண்டு முதலே 22 வயதிலேயே - சாந்தையர் மட ஆலயத்தில் வார இறுதி சமய வகுப்புக்களை நடத்தத் தொடங்கி விட்டார்.

ஆலயத்துடன் இணைந்ததொரு அமைப்பாகச் சைவசமய அபிவிருத்திக் கழகம் ஒன்றை 1954 இல் உருவாக்கி, அதில் அவ்வாலய சுற்றாடலில் உள்ள பல்வேறு வயதினரையும் தரத்தினரையும் ஈடுபடச்செய்து இளஞ் சிறார்களுக்கு தொண்டு செய்பயிற்சிகள் அளித்து, நூல்நிலையம் நடத்தி, பரீட்சைகள், போட்டிகள் வைத்து சமய, கலாசார விடயங்களில் இளைஞரை ஊக்குவித்து - அவர்களுக்கு பெரியார்களைக் கொண்டு பரிசில்கள் வழங்குவித்து - செயற்றிறன் மிக்கதோர் அமைப்பாகக் கழகத்தை வளர்த்தெடுத்தார்.

1954 ஆம் ஆண்டு முதல் இக்கழகத்தின் தலைவராக, செயலாளராக, பரீட்சைச் செயலாளராக பல்வேறு பதவி நிலைகளை வகித்தபோதும் சரி வகிக்காதபோதும் சரி கழகத்தின் உயிர்நாடியாக சைவப்புலவர் அவர்களே செயற்பட்டு வருகிறார்.

ஆலய தர்மபரிபாலன சபையின் செயலாளராகவும், 1954 ஆம் ஆண்டு முதற் செயற்பட்டு வருகிறார். அவ்வாலய சுற்றாடலில் வேறு பலபெரிய ஆலயங்கள் இருந்தபோதிலும், சமயவளர்ச்சியை மையமாக சாந்தையர் மட ஆலயம் கடந்த நாலு தசாப்தங்களாக விளங்கி வருவதற்குக் காரணமானவர் சைவப்புலவர் அவர்கள்.

ஆலயத்தைப் புனரமைத்து மூன்று தடவைகள் கும்பாபிஷேகங்கள் நிகழவைத்தும் சிவாகம விதிவழுவாது பூசைகளை நடப்பித்தும், திருமுறை பாராயணம், புராண படனங்களை ஊக்குவித்தும் வருகிறார். இவ்

வாலயத்தில் தம்முடன் பல பௌராணிகர் களையும் பங்குபற்ற வைத்து 1974 ஆம் ஆண்டு முதல் - இருபத்தைந்து வருடங் களுக்கு மேலாக - ஆண்டுதோறும் கந்த புராணபடனம் நிகழ்த்துவித்து வருகிறார். இவ்வாலயப் பணிகளில் பிரம்மஸ்ரீ சீதா ராம சாஸ்திரிகள் போன்ற பெருமக்களை ஈடுபடவைத்த பெருமையும் இவரைச் சாரும்.

வண்ணார்பண்ணையில் அமைந் துள்ள மற்றொரு விநாயகராலயமான பன்றிக்கோட்டு விநாயகர் ஆலய நிர்வா கத்தையும் சீர்படுத்தி 1972 முதல் பல வருடகாலம் அதன் நிர்வாக சபைச் செய லாளராகப் பணிபுரிந்துள்ளார்.

வண்ணை வைத்தீஸ்வரன் கோவில் நிர்வாகத்தைப் பரிபாலன சபையொன்று கையேற்று நடத்த வேண்டியதொரு நிலை ஏற்பட்டபோது அப்பரிபாலன சபையின் தலைவராகப் பணியாற்றுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டார். 1991 பங்குனி முதல் 1993 நவம்பர் வரை இவ்வாலய பரிபால னம் இவரது தலைமையின் கீழமைந்த ஒரு பரிபாலன சபையினரால் நடத்தப் பட்டது.

யாழ். வில்லூன்றி புனித தீர்த்த பரி பாலன சபையின் நிர்வாகசபை உறுப்பி னராக 1991 ஆம் ஆண்டு முதலும் பொரு ளாளராக சிறிது காலமும் கடமையாற்றி அதன் அபிவிருத்திக்கு உழைத்தார்.

1967 - 70 களில் ஹொறவப் பொத் தானையில் ஆசிரியராகக் கடமையாற்றிய போது பழமை வாய்ந்த வன்னித் திருக் கோவிலான வவுனிக்குள சிவாலயப் புனர மைப்பு, கலைவிழா, விசேட மலர் வெளி யீடு போன்ற பணிகளில் பெரும்பங்கு வகித்தார்.

**சைவபரிபாலனசபை ஊடான பணிகள்:**

1953 ஆம் ஆண்டிலேயே யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையின் அங்கத்தவராகச் சேர்ந்து கொண்ட சைவப்புலவர் அவர்கள், துடிப்புள்ள இளந்தொண்டராக சபை நட வடிக்கைகளில் பங்குபற்றினார். அக்கால கட் டத்தில் ஏறத்தாழ மூன்று தசாப்தங்கள் வரை சபையின் சமயப்பிரசார அமைச்சராகவிருந்து அருந்தொண்டாற்றிய திரு. மு. மயில்வாகனம் அவர்களுக்கு உறுதுணையாகவிருந்து சைவ மாநாடுகள், குருபூசைகள், புராண படனங்கள், சைவசமய தீட்சை நிகழ்வுகள் ஆகியன சபை நாவலர் மண்டபத்தில் சிறப்புடன் நடைபெறப் பணியாற்றினார்.

சைவபரிபாலன சபையினரால் பல தசாப்தங்களாக யாழ்ப்பாணச் சிறைச்சாலை, கோப்பாய் திறந்த வெளிச் சிறைச்சாலை ஆகியவற்றில் சிறைவைக்கப்பட்டிருந்த கைதி களுக்கு ஞாயிற்றுக்கிழமைகள் தோறும் ஒழுக்கமும், சமயமும் போதிக்கப்பட்டு அறி வுரை வழங்கப்பட்டு வந்தது. சைவப்பிரகாசர் திரு. பொன் அப்புக்குட்டி, பண்டிதர் வே. சங் கரப்பிள்ளை போன்ற பல பெரியார்கள் இதிற் பங்குபற்றியமையை இந்துசாதனப் பழைய ஏடுகள் மூலம் அறிந்துகொள்ள முடிகிறது.

இப்பணியை சைவப்புலவர் அவர்கள் 1968 ஆம் ஆண்டு பொறுப்பேற்று 1986 ஆம் ஆண்டு வரை திறம்பட ஆற்றிவந்தார். 1967 ஆம் ஆண்டு முதல் 1973 ஆம் ஆண்டு வரை யாழ் குடாநாட்டுக்கு வெளியே ஆசிரியர் பணி ஆற்றிய காலங்களில் கூட ஒவ்வொரு வார இறுதியிலும் யாழ் வந்து இப்பணியையும் சாந்தையர் மட கற்பக விநாயகர் ஆலயப் பணி, சைவசமய அபிவிருத்திக் கழகப்பணி களை ஆற்றிவந்தமை குறிப்பிடத்தக்கது.

1978 ஆம் ஆண்டு முதல் இன்று வரை சபையின் பரீட்சைச் செயலாளராக

விருந்து சைவநெறித்தேர்வுகள், சைவ சித்தாந்த பிரவேச பண்டிதர், சைவசித்தாந்த பாலபண்டிதர், சைவசித்தாந்த பண்டிதர் தேர்வுகளை வருடந்தோறும் கிரமமாக நடாத்தும் பாரிய பொறுப்பினை ஏற்றுத் திறம்பட ஆற்றிவருகிறார்.

1991 ஆம் ஆண்டில் சபையின் சமயப் பிரசார அமைச்சர் பொறுப்பினையும் ஏற்றுக்கொண்டு 1994 ஆம் ஆண்டு வரை அப்பதவி மூலம் பல பணிகளை ஆற்றினார். 1998 ஆம் ஆண்டு முதல் சபை உபதலைவராகப் பணியாற்றி வருகிறார். 1995 அக்டோபர் இடம்பெயர்வின் பின், 1996 மே மாதத்தில் யாழ் நகரில் மக்கள் மீளக் குடியேறியபோது - சைவபரிபாலன சபை அதன் பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தில் இயங்கமுடியாத நிலையிலிருந்த போது - தனது இல்லத்தையே சபையின் பரீட்சைப் பகுதியாக மாற்றி, சபையின் பரீட்சைப் பகுதி தடங்கலின்றி நடைபெறுவதை உறுதிசெய்து கொண்டார்.

பரீட்சை நிதியிலிருந்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இந்துநாகரிகம் கற்கும் வசதி குறைந்த மாணவர்களுக்கு நிதியுதவி புரிவதற்காக ஒன்றரை இலட்சம் ரூபா புலமைப்பரிசில் நிதியமொன்றை சைவபரிபாலன சபை ஏற்படுத்த மூல காரணராகவிருந்தார். அத்துடன் பரீட்சை நிதியை முதலாகக் கொண்டு நாவலர் பெருமான், சைவப்பெரியார் சிவபாதசுந்தரனார் போன்றோரின் நூல்கள் பலவற்றை அச்சிற்பதிப்பித்து பலரும் பயனடைய வைத்தார். இச்செயற்பாடுகள் அனைத்தையும் தாம் செய்விப்பதுபோற் காட்டிக்கொள்ளாது மேற்கொண்டமை அவரது தன்னலமற்ற தொண்டு மனப்பான்மையை வெளிப்படுத்தும்.

இவை தவிர சபையினரின் அகில இலங்கைச் சைவ மாநாடுகளின் அமைப்பாளராக, சபை நூற்றாண்டு விழா ஏற்பாட்டாளராக ஆற்றிய பணிகளும் பல.

**நாவலர் பாடசாலைப் பணிகள்:**

நாவலர் பாடசாலைப் பழைய மாணவனான இவர் நாவலர் பாடசாலை பழைய மாணவர் சங்க உபதலைவராகவும் நாவலர் மகா வித்தியாலய நூற்றியைம்பதாவது நினைவு விழாச் செயலாளராகவும் பணியாற்றியுள்ளார். நாவலர்மேல் பெரும் பக்தி கொண்ட இவர், நாவலர் வழியில் பணியாற்றி வருவதோடு ஏனையோரையும் தன்போல் ஈடுபடத்தூண்டுபவர்.

வண்ணார்பண்ணை நாவலர் சைவப் பிரகாச வித்தியாசாலையின் நூற்றாண்டு விழாவைத் தக்கபடி கொண்டாட வேண்டுமென்ற நோக்கோடு தம்முடன் நாவலர் பாடசாலையில் கல்வி கற்பித்துவந்த சக ஆசிரியார் திரு. சி. சீவரத்தினமவர்களோடு சேர்ந்து பெருமுயற்சி செய்து ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சைவப்பிரகாச வித்தியாசாலை நூற்றாண்டு விழாச் சபையை 26.04.1953 அன்று அமரர் சு. நடேசபிள்ளை அவர்கள் தலைமையில் அமைத்து, பல பணிகள் ஆற்றப்படக் காரணமாகவிருந்தார். அதன் விளைவுகளுள் ஒன்றாக வே. கனகரத்தின உபாத்தியாயர் எழுதிய "ஆறுமுகநாவலர் சரித்திரம்" என்ற நூல் 1968 இல் மறுபதிப்பாக வெளிவந்தது.

நாவலரின் வண்ணார்பண்ணை சைவப் பிரகாச வித்தியாசாலை அரசுடைமையாக்கப் பட்டபோது நாவலரின் சொத்துக்கள் பலவும் அரசுடைமையானது. அவற்றை நிர்வகிக்க யாழ். மாவட்டக் கல்விப்பணிப்பாளர் தலைமையில் "நாவலர் தர்மகர்த்தா சபை" யொன்று 1961 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. அச்சபையில், பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள் வகித்த அங்கத்துவம் பண்டிதமணி அமரத்துவமடைந்தபின் 1990 ஆம் ஆண்டு முதல் திரு. கந்தசாமி அவர்களைச் சேர்ந்தது.

இவரது பெருமுயற்சியின் காரணமாகவே நாவலர் பாடசாலை முகப்பு நுழைவாயில் பாடசாலை முன்னாள் அதிபர், அமரர் திரு. ஐயாத்துரை, மாகாண மேலதிகக் கல்விப்பணிப்பாளர் திரு. நா. தணிகாசலம் பிள்ளை ஆகியோரின் உதவியுடன் இன்றைய அழகுக் கோலத்துடன் காட்சியளிக்கிறது.

1960 ஆம் ஆண்டு முதல் நாவலர் சைவப்பிரகாச வித்தியாசாலையில் நாவலர் தர்மகர்த்தா சபையினரால் நடத்தப்பட்டுவந்த பண்டிதர் வகுப்புகளிலும், அகில இலங்கை சைவப்புலவர் சங்கம் நடத்திய வகுப்புகளிலும் இலவசமாக ஆசிரியசேவை ஆற்றியுள்ளார்.

பல்வேறு காலகட்டங்களில் கந்த புராணச்சபை தலைவராகவும் நல்லை அதீனத்து சைவசித்தாந்தப் பேரவையின் பொருளாளராகவும் கடமையாற்றியுள்ளார்.

**அகில இலங்கை சைவப்புலவர் சங்கப் பணிகள்:**

1961 ஆம் ஆண்டில் அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கம் உருவாகக் காரணமாக இருந்தவர்களுள் திரு. கந்தசாமி அவர்களும் ஆசிரியமணி அ. பஞ்சாட்சரம் அவர்களும் முக்கியமானவர்கள். 1961 ஆம் ஆண்டு முதல் சில வருடங்கள் தலைவராகவும் சில வருடங்கள் செயலாளராகவும் 1969 ஆம் ஆண்டு முதல் இன்று வரை சங்கத்தின் கௌரவ தேர்வுச் செயலாளராகவும் பணியாற்றி இளஞ் சைவப்புலவர், சைவப்புலவர் பரீட்சைகளை நடத்திப் பல சைவப் புலவர்கள் உருவாக வழிசமைத்தார்.

**கௌரவங்கள்:**

பட்டங்கள் பதவிகள், பாராட்டு விழாக்களுக்காக அலைந்து, இரந்து வேண்டி நிற்பவர்களுக்குக் குறைவில்லாத இன்றைய காலகட்டத்தில், அவற்றிலிருந்து ஒதுங்கி நிற்பது சைவப்புலவரின் அருங்குணங்களுள் ஒன்று. அவர் பல நிறுவனங்களில் பல பொறுப்பான பதவிகளை வகித்த போதிலும், அவரது செயற்பாடுகள் எப்போதும் இலைமறைகாயாகவே இருந்தன. வன்சொல் பேசுவது கிடையாது. தர்க்கம் புரிவது கிடையாது. யாராயினும் பொருத்தமற்ற செயல்களில் - பேச்சில் - ஈடுபட்டால் அதையிட்டுத் தர்க்கம் செய்யாது ஒதுக்கிவிட்டு, தன்னாலான நற்கருமங்களை இயன்றளவில் முன்னெடுத்துச் செல்வது சைவப்புலவர் அவர்களின் மற்றுமோர் குணவியல்பு.

பட்டங்கள், பாராட்டுகள், கௌரவங்கள் அவரை வலிந்து சென்றடைந்தன.

1975 ஆம் ஆண்டு மதுரை திருஞான சம்பந்தர் ஆதீனம் **"சிவநெறிச் செம்மல்"** என்ற பட்டத்தையும், 1985 இல் சைவ பாதுகாப்புச் சபை **"சிவனடியார் மணி"** என்ற பட்டத்தையும், 2000 ஆம் ஆண்டில் பிரம்மஸ்ரீ க. வை. ஆத்மநாதசர்மா நினைவு விழாக்குழுவினர் **"சிவநெறிக் காவலர்"** எனும் பட்டத்தையும் வழங்கிக் கௌரவித்தனர். இப்போ அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கத்தினர் **"சைவ பூஷணம்"** பட்டம்வழங்கிக் கௌரவித்துள்ளனர்.

அமைதியும் சாந்தமுமே உருவான அடக்க சுபாவமுள்ள சைவப்புலவர் அவர்களின் வாழ்வு அர்ப்பணிப்புமிக்கது. சிவதொண்டு புரிவோருக்கு முன்மாதிரியாக - வழிகாட்டியாக அமைந்துள்ளது. அன்னார் இன்னும் பல்லாண்டுகள் உடல்நலமுடன் வாழ்ந்து சிவத்தொண்டு செய்ய எல்லாம்வல்ல சிவபெருமானை வழுத்துவோமாக.

**நன்றி**

**இந்துசாதனம்**
**03.08.2001**

உ
சிவமயம்

# திரிகரண சுத்தியுடன் தொண்டாற்றும் தூயோன்

**திரு. குமாரசாமி சோமசுந்தரம் அவர்கள்**
**முன்னைநாள் கல்விப் பணிப்பாளர்.**

நான், நல்லூர் வட்டாரக் கல்வியதி காரியாகப் பதவியேற்ற ஒரு சில தினங் களில், ஒரு நாள் பெரியபுலம் மகா வித்தி யாலயத்திற்குக் கடமை நிமித்தம் சென்றி ருந்தேன். அதிபரின் அறையில், அதிப ருடன் ஒருவர் காணப்பட்டார். சிவந்த, மெலிந்த உருவம்; நெற்றியில் திரிபுண் டரமாகக் தரிக்கப்பட்ட திருநீற்றுக்குறிகள், சந்தனப் பொட்டு, குங்குமம், அடக்கம் செறிந்த முகப்பொலிவு, சைவ வாசனை என்பவற்றுடன் திகழ்ந்த அந்த மனிதரை உற்று நோக்கினேன். விடயத்தை விளங் கிக் கொண்ட அதிபர் திரு. குணரத்தினம், " இவர்தான் கந்தசாமி மாஸ்ரர். எனக்குப் பெரும் உதவி. எந்த வேலையையும் விருப்பத் தோடு முன்னின்று செய்பவர். உங்கள் வட்டார வேலைகளுக்கும் அவரை நீங்கள் பயன்படுத்த லாம். மனங் கோணாமல் செய்வார்.'' என்று அவரை எனக்கு அறிமுகஞ் செய்து வைத்தார்.

**'அகத்தின் அழகு முகத்தில் தெரியும்'** என்ற உளவியல் உண்மையை ஒளவை யார் அன்றே சொல்லி வைத்தார். கந்த சாமி மாஸ்ரரின் முகப்பொலிவுக்கு, அவரின் தூய்மையான தொண்டு உள்ளம் தான் காரணம் என்பதை உணர்ந்து கொண்டேன். பின்னர் அவர் செயல்வீரர் என்ப தையும் அநுபவபூர்வமாகத் தெரிந்து கொண் டேன்.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின் பாதையில், அவர் கல்வித் தொண்டு, சைவசமயத் தொண்டு, சமூகத்தொண்டு என்பவற்றைத் திரிகரண சுத்தியுடன் ஆற்றிவருவதை நாம் யாவரும் நன்கறிவோம். அவர் சாதனையாளர்.

தொண்டு என்பது கைம்மாறு கருதாமலும் எதிர்பார்ப்புகள் எதுவும் இன்றியும் ஆற்றப் படும் சேவையாகும். சமூக நன்மை, ஆன்மிக விருத்தி கருதியது தொண்டு. சுயநலம் கரு தாதது தொண்டு. எனவேதான் **' தொண்டர் தம் பெருமை சொல்லவும் பெரிதே'** என்கிறார் ஒளவையார். தொண்டுக்கு ஆசாரசீலம், நல்லொழுக்கம், நற்பண்புகள், மனத்தூய்மை, சொல் தூய்மை, செயல் தூய்மை என்பன ஆதாரமாக அமைகின்றன.

இந்த அடிப்படையில் நோக்கும்போது, தற்காலத்தில் தொண்டு செய்யப் புறப்பட்ட வர்களில், விரல்விட்டு எண்ணக்கூடிய ஒரு சிறு தொகையினரே, மேற்படி நிபந்தனைகளை குறிப்பிடத்தக்க அளவிற்குப் பேணிவருபவர் களாகத் தென்படுகின்றனர். அந்த வரிசை யில், தொண்டுக்குரிய இலக்கணத்துடன் விளங்கும் ஒருவராகச் சைவத்திரு. வல்லிபுரம் கந்தசாமி அவர்கள் உயர்ந்து நிற்கிறார்கள் என்று துணிந்து கூறலாம்.

ஆசிரியப்பணி புரிந்த காலத்தில், ஒரு நல்லாசிரியனாகத் திகழ்ந்தார். மாணவர்களின் ஒழுக்க, ஆன்மிக, பண்பாட்டு விருத்தியில் கண்ணும்கருத்துமாக இருந்தார். தாமே நடை, உடை, பாவனையில் முன்மாதிரியாக விளங்கினார். சைவத்தையும் தமிழையும் இரு கண்களாகப் போற்றினார். இது, கல்வியதிகாரியாகப் பணியாற்றியபோது, அவர் பற்றிய எனது கணிப்பீடு ஆகும்.

அரசாங்க ஆசிரியர் சேவையிலிருந்து ஓய்வு பெற்றமைக்கு அவரது கால வயது காரணமாயிற்று. ஆனால் பரந்துபட்ட தொண்டுக்கு காலவயது ஒரு தடையாக அமையமாட்டாது என்பதைக் கந்தசாமி அவர்களின் தொண்டு வாழ்வு நிருபித்துக் கொண்டிருக்கிறது.

சைவபரிபாலன சபையின் தலைவராகவும், உபசெயலாளராகவும், தேர்வுச் செயலாளராகவும், சைவசமய விருத்திச் சங்கத்தின் செயலாளராகவும் மற்றும் விநாயகர் ஆலய பரிபாலன சபையின் செயலாளராகவும் விளங்கி, சமய சமூகப் பணிகளை செயற்றிறனோடு அவர் ஆற்றி வருதல் போற்றுதற்குரியது.

சைவத் தமிழ் உலகு இன்றைய காலகட்டத்தில் அவரைச் சைவக் காவலர் ஆகப் பெற்றமை பெரும் பேறாகும். அவர் நீண்டகாலம் வாழ்ந்து பணிசெய்ய எம்பெருமான் திருவருள் பாலிப்பானாக.

**"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெலாம்"**

## பவளந் தழுவிய திருமுறைப்பாடல்

### தேவாரம்

**பண் - பியந்தைக்காந்தாரம்** **கோளறு திருப்பதிகம்**

உருவளர் **பவள**மேனி ஒளிநீறணிந்து
உமையோடும் வெள்ளை விடைமேல்
முருகலர் கொன்றை திங்கள் முடிமேலணிந்து
என்னுளமே புகுந்த வதனால்
திருமகள் கலையதூர்தி செயமாது பூமி
திசை தெய்வமான பலவும்
அருநெறி நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியார் அவர்க்கு மிகவே.

உ
சிவமயம்

# காலத்தினாற் செய்த நன்றிக்கு உரியவர்.

பண்டிதர் தி. பொன்னம்பலவாணர்

எமது சைவசமயத்திற்காகத் தம்மை அர்ப்பணித்த பெரியார் பலருள் கிரி தீப மாக விளங்குபவர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர். இவருக்கு முன்னும் பின்னும் பலர் சைவசமயத் தொண்டு ஆற்றியிருக்கின் றார்கள். நம்மவரிடம் அதிர்ஷ்டவசமாக நாவலருக்கு ஆன்மீக பலம் தக்காரின் ஆதரவு, தெய்வத்துணை என்பன கை கொடுத்தன. இப்படியான நாவலரின் ஆதரவில், அனுசரணையில், அபிமானத்தில் பலர் அவரைத் தொடர்ந்து சைவப் பணி ஆற்றியிருக்கின்றார்கள். இப்படிச் சைவப் பணி ஆற்றியவர்களுள் சிறப்பிடம் வகிக்கும் சைவப்பெரியார் சு.சிவபாதசுந்தரம் அவர்களைத் தொடர்ந்து சைவத் தொண்டுக்குத் தம்மை மனப்பூர்வமாக அர்ப்பணித்தவர் பவளவிழாக்காணும் நம் கந்தசாமி ஆசிரியர் அவர்கள்.

சைவப் பணிக்குத் தம்மை ஈடுபடுத்தியபின் தம் பணிகளுக்கு அத்திபாரமாகவும், பக்கத் துணையாகவும் இருக்க வேண்டும் என்று சைவப் புலவரானார். சைவப்புலமை பெற்றதின் விளைவாக இவரது தொண்டுகள் தெளிவும் ஒழுங்கும் திட்டமும் உடையனவாகும் பெருமை பெற்றன. நாவலரின் சைவ அபிமானக் காற்று சைவப் பெரியாருடனும் "இந்து போட்" டுடனும் ஓய்ந்தபின் தனித்த நிலையில் செயற்பட வேண்டிய நிர்ப்பந்தம் இவருக்கு ஏற்பட்டது. இப்படியான நிர்ப் பந்தத்தால் பல சைவ அபிமானிகள் முளையிலே கருகிய பயிர் போல் செயலற்ற வேளையிலும் தம் மனஉறுதியுடனும் சாந்தையார்மடம் கற்பக விநாயகர் அருளுடனும் சைவத் தொண்டைத் தொடர்ந்த பெருமை இவருக்கு உண்டு.

ஒரு சிறுகாலப் பகுதியில் வண்ணை வைத்தீஸ்வரர் ஆலய நிர்வாகத்திலும் தொடர்பு கொண்டு இவர் செய்த சிவத் தொண்டு மகத்தானது. ஒரு சிவாலய பரிபாலனத்தை எப்படி மேற்கொள்ளவேண்டும் என்பதற்கு ஒரு முன்மாதிரியாகச் செயற்பட்டதை அனைவரும் அறிவர்.

இதுமட்டுமன்றி மிகவும் புனிதமான மனப் பான்மையுடன் ஆரம்பிக்கப்பட்ட யாழ். சைவ பரிபாலன சபையின் ஆயுள்தொடர இவரது பங்களிப்பே உண்மையானது என்பதை அறிந்தவர் அறிவர்.

ஒரு காலத்தில் மிகப் பிரசித்தமாயிருந்த கொழும்பு விவேகானந்த சபையின் சமய பாட பரீட்சை ஏதோ காரணங்களால் தடைப் பட்டபோது அதே போன்றதொரு சமயபாடப் பரீட்சை சைவபரிபாலனசபை மூலம் நிகழப் பொறுப்பாக விளங்குபவர் நம் சைவப்புலவர் அவர்களே.

இவருக்கு எடுக்கும் பவளவிழாவும் இவர் சேவைகளை வெளிப்படுத்தும் மலரும் பலரைச் சைவப்பணியில் ஈர்க்கும் என நம்புகின்றேன்.

தண்டவாளத்தில் ஓடும் ரெயில் போல் சமய சாஸ்திரங்களையும், நாவலர் வழியையும் அநுசரித்து செயற்படும் இப்பெரியார் இன்று போல் இளமையுடனும் மன ஊக்கத்துடனும் விளங்க சைவ அன்பர்களது ஆதரவும், வாழ்த்தும், அன்பும், பண்பும் துணை செய்யும் என நம்புகின்றேன்.

வாழ்க சைவப்பெரியார் வ.கந்தசாமி ஆசிரியர்



விழாநாயகரின் மகள்
சிவகிருபா-வரதராசன் குடும்பம்

விழாநாயகரின் மகள் கிருபாகரி
-கைலாசகிரி குடும்பம்





விழாநாயகரின் மருமகள்
பிரியதர்சினி - ரமேஸ்குமார்

உ
சிவமயம்

# பவளவிழா நாயகரின் பண்பு நலம்

கருணைதாசன்
"தமிழ்ப்பாவை" – ஆசிரியர்,
தமிழ்நெறிக் காவலர்,
சென்னை.

ஐயா கந்தசாமிப் புலவரை நான் நினைக்கும் போது **மனிதனை நேசிப்போம் மற்றதை யோசிப்போம்** என்ற மெய்ப் பொருள் (தத்துவம்) என் நினைவுக்கு வருகிறது.

2002 இல் இலக்கிய சுற்றுலாவாக நாங்கள் இலங்கை சென்றபோது யாழ்ப் பாணம் எங்களை வரவேற்றது.

அன்றுதான் இந்தப் புலவரின் பார்வை என்னை ஈர்த்தது. நல்லை திரு ஞானசம்பந்தர் மடத்திற்குள் நாங்கள் கால்வைத்தோம். எங்கள் மதுரையின் ஞானசம்பந்தர் மடமே எங்களை வரவேற் றது போன்ற ஓர் உணர்வு. காரணம் ஐயா கந்தசாமிப் புலவர் அவர்கள் தாம் எங் களை வரவேற்ற பண்பாளர்.

உணவு முடிந்ததும் கோயிலின் மரபுப்படி மண்டபத்தின் தரையில் பாய் விரித்துத் தான் படுக்க வேண்டும். உரை யாடவேண்டும். ஆனால் எனக்கோ ஏற் கனவே கால் முறிவு ஏற்பட்டு தரையில் அமர இயலாத நிலை. படுத்தால் எழுந் திருக்க முடியாது. தொல்லையான நிலை.

ஐயா கந்தசாமிப் புலவர் என் தயக் கத்தையும் நிலைமையையும் உணர்ந் தார். " அவ்வளவு ( சிரமம்) துன்பம் வேண் டாம். என் வீட்டில் கட்டிலும் கழிவறையும் உங்களுக்கு வசதியாக இருக்கும். அங்கு வேறுயாருமில்லை. நான் மட்டும்தான் இருக் கின்றேன். தாராளமாக உங்கள் வசதிப்படி தங்கலாம். அங்கு போகலாம்" என்றார். நான் உடன் வந்தவர்களை விட்டுப்போகத் தயங்கி னேன். அவர்கள் உங்கள் வசதியைப் பாருங்கள். நாங்கள் இங்கே தங்கிக்கொள் கிறோம்" என்றனர். காரணம் வந்தோரில் நான்தான் அகவை முதிர்ந்தவன். எங்களை அழைத்துச் சென்ற முனைவர் தமிழப்பன் அவர்கள். "நானும் உங்களுடன் வருகிறேன் போவோம்" என்றார். இது தான் சைவப்புலவர் அவர்களுக்கும் எனக்கும் ஏற்பட்ட முதல் தொடர்பு.

அழைத்துக்கொண்டு எங்கள் மலையுந் தியில் புறப்பட்டார். புலவர் அவர்கள் இல்லம் சென்றதும் அங்கு அரசடி வீதி என்ற பெயரைப் பார்த்ததும் வியப்படைந்தேன்.

காரணம், நான் வாழும் பகுதி மதுரை யில் அரசடி என்பதாகும். ஆகவே மகிழ்ச்சி யோடு அவர் இல்லம் சென்றோம். தங்கி னோம். தங்கினோம் என்பதை விட அங்கு நடந்த விருந்தோம்பல், காட்டிய அன்பு, புலவர் அவர்களின் பண்புள்ளத்தைக் கண்டேன்.

அங்கு அவருடைய தங்கை மகள் பெயர் பிரியதர்சினி. அவள் என் பேர்த்திக்குச் சமம். எங்களுக்கு என்ன வேண்டுமோ அதை நாங்கள் கூறும் முன்னரே செய்து தரும்

அன்பின் சின்னமாக அவள் நடந்து கொண்டாள்.

அவளின் ஒவ்வொரு செயலும் என்னை மெய்சிலிர்க்க வைத்தது. என் இல்லத்தில் கிடைக்கும் அன்பும் உரிமையும் காட்டி பிரியதர்சினி மகிழ்வித்தாள்.

அந்தப் பெண்ணின் யாழ்ப்பாண மழலைத் தமிழை " ஓ" "ஓ" என்று அவள் கேட்க, நான் சிரித்துக் கேலி செய்ய என் பேர்த்தியுடன் பேசிப் பழகிய தமிழின்பம் எனக்கு அங்கு கிடைத்தது. அந்த நாட்களை இன்றும் கூட என்னால் மறக்க முடியவில்லை.

மதுரைக்குத் திரும்பியதும் கடிதம் மூலம் தொடர்பு வைத்துக்கொண்டேன். திடீரென்று ஒரு நாள் என் தொலைபேசியில் பிரியதர்சினியின் குரலைக் கேட்டேன். கேட்டதும் மகிழ்ந்து போனேன். **"தாங்கள் விட்டுச் சென்ற ஷேவிங் பாக்ஸ்"** இங்கு பத்திரமாக இருக்கிறது. விரைவில் மதுரைக்கு அனுப்பி வைக்கிறோம் என்று கூறியதும், நான் கிண்டலாக " ஓ" , "ஓ" என்று எப்படிப் பேசுமோ அப்படியே பேசினேன். ஐயா நலமுடன் இருக்க விழைவதாகவும் கூறினேன்.

சென்ற ஆண்டு (2004) திடீரென்று பிரியதர்சினி தொலைபேசியில் பேசியது, நானும் மாமாவும் மதுரை வருகிறோம். வந்ததும் உங்கள் வீட்டிற்கு வரவேண்டும். பின்னர் தொடர்பு கொள்கிறோம் என்று கூறியதும் நான் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவேயில்லை.

அந்த அன்பான சைவப்புலரை சந்திக்கப்போகிறோம். பிரியதர்சினியின் மழலையான சொற்களைக் கேட்கப் போகிறோம் என்று நினைத்து மகிழ்ந்தேன். அதற்குக் காரணமும் இருந்தது. பிரியதர்சினிக்கு எப்போது திருமணம் என்று நான் கடிதம் எழுதியிருந்தேன். அதற்குப் புலவர் அவர்கள் ஏற்பாடு செய்கிறார் என்ற செய்தியும் எனக்குத் தெரியவந்தது.

வைகாசித் திங்களில் அவர்கள் மதுரைக்கு வந்தார்கள். அவர்கள் கூறிய செய்தி என்னைப் பெருமகிழ்ச்சியில் ஆழ்த்தியது. அது தான் நான் ஈராண்டாக எதிர்பார்த்த பிரியதர்சினியின் திருமணச் செய்தி. அதில் வேறொரு சிறப்பும் சேர்ந்திருந்தது. மணம் முடிக்கப் போகும் கணவனும், ஐயா கந்தசாமிப் புலவருடன் பிரியதர்சினியின் அண்ணனும் வந்திருந்தனர்.

அவர்கள் கூறிய செய்தி நான் பிரியதர்சினியின் திருமணம் பற்றி எழுதிய கடிதம் கிடைத்த அன்று தான் மாப்பிள்ளையின் திருமணச் செய்தியும் கிடைத்ததாம். ஆகவே முதலில் உங்களிடம் ஆசீர்வாதம் பெறவே வந்தோம் என்று சைவப்புலவர் கூறியது கேட்டு என் உள்ளம் பூரித்தது.

என்வீட்டில் மகள், மருமகள், பேரன் அனைவரும் இது கேட்டுப் பூரித்து நின்றனர். என் இளைய மகள் நீலாவதி ஓடிப்போய் தான் பிறந்தநாளுக்கு எடுத்து வைத்திருந்த ஒரு பட்டுப்புடவையை எடுத்து வந்து என்னிடம் கொடுத்ததும் பிரியதர்சினி மிக மகிழ்ந்து என் காலில் விழுந்து வணங்கியதும் என் கண்கள் கலங்கின. நெஞ்சம் நெகிழ்ந்து வாழ்த்தினேன்.

அந்தப்பெண் தன் தாத்தாவைப் போல எண்ணி, எனக்கு விருந்து படைத்த அந்தக் காட்சிகள் என் கண்முன்னே நின்றன. அடக்கமே உருவான புலவரின் அன்பும், அரவணைப்பும் விருந்தோம்பலும் ஓர் இலக்கணமாகவே அமைந்திருந்தது.

**"அகனமர்ந்து செய்யாள் உறையும் முகனமர்ந்து நல்விருந்து ஓம்புவான் இல்."**

என்ற குறளுக்கு வாழும் நம் சைவப்புலவர் கந்தசாமி அவர்களின் பவளவிழா சிறப்போடு நடைபெற என்நெஞ்சார்ந்த வாழ்த்துக்கள்.

உ
சிவமயம்

# தில்லைக்கூத்தன் திருவருள் கிட்டட்டும்

த. சண்முகலிங்கம்
முத்த உறுப்பினர், சைவபரிபாலன சபை.
யாழ்ப்பாணம்.

**"என் கடன் பணி செய்து கிடப்பதே'** என்பது அப்பர் அருள்வாக்கு. இவ்வாக்கினை தன் வாழ்க்கையின் மகுட வாக்கியமாக வரித்துக்கொண்டு பணியாற்றிய சைவப்பெருமகன் சைவப்புலவர் வல்லிபுரம் கந்தசாமி அவர்கள்.

கந்தவனக்கடவை, அவரது இளமைக் காலத்தைப் புடம் போட்டு எடுத்தது. சைவப்பெரியார் சு. சிவபாதசுந்தரம் அவர்கள் சைவசித்தாந்தத்தையும் சைவப் பணியையும் ஊட்டி வளர்த்துவிட்டார். அந்த வளர்ப்பின் அறுவடையை சைவபரிபாலன சபை முழுமையாகப் பெற்றுக்கொண்டது.

**"பணியை ஆற்று பலனை எதிர் பாராதே"** என்ற பகவத்கீதை வாக்கியம் அவரை எந்தளவு கவர்ந்ததோ தெரியவில்லை. ஆனால் அவரது செயற்பாடும் வாழ்வியல் முறைமையும் அதற்கு அமைவாகவே அமைந்திருந்தது.

சைவப்புலவர் அவர்களை சைவ பரிபாலன சபை ஊடாகவே நான் அறிந்து கொண்டேன். அகவையில் நாம் ஒரே காலத் தவராயினும் சபையில் அவர் என்னை விட மூத்தவர்.

நாற்பது ஆண்டுகளாக நான் அவரைச் சபையில் அருகிருந்து பார்த்து நெருங்கிப் பழகி வருகின்றேன்.

அவர் தமது முப்பத்தைந்தாவது அகவையில் எவ்வாறு இருந்தாரோ அவ்வாறே இன்றும் பணியிலும், பழக்கவழக்க முறைகளிலும் இருந்து வருகின்றார்.

சிதம்பரத்தில் புண்ணியநாச்சி மட தர்மவேலைகள் சுறுசுறுப்பாக நடைபெற்ற காலத்தில் இங்கு எழுந்த விமர்சனங்கள் சிலவற்றை, அவர் "அறியாமையின் வெளிப்பாடு "எனப் புறந்தள்ளினார்.

கடந்த ஆண்டு சபையின் தலைவராக சிதம்பரம் சென்று மடத்தில் தங்கி தில்லைக்கூத்தனைத் தரிசித்துத் திரும்பிய பின்னர், இரு ஆண்டுகளுக்கு முன்னர் தான் புறந்தள்ளிய அக் கூற்றுக்கள் பொய்யுரைகளே என மீண்டும் கூறிக் தன் நிலைப்பாட்டை மேலும் உறுதிப்படுத்திக் கொண்டார்.

சைவப்புலவர் அவர்களின் சேவை நலனைப் பாராட்டும் இவ்வேளை அவரது பணி

சிறக்க தோன்றாத்துணையாக நின்று உதவிய அமரத்துவமடைந்த அவரின் வாழ்க்கைத் துணைவிக்கும் நாம் தேகவியோக நிலையில் பாராட்டக் கடமைப்பட்டுள்ளோம்.

அறம், பொருள், இன்பம், வீடு என்ற தத்துவார்த்த ஒழுங்கில் அவரது வாழ்க்கை அமைந்தது, அல்லது அவர் அமைத்துக் கொண்டார்.

வெளிநாடு செல்லும் சைவப்புலவர் மிகக்குறுகிய காலத்தில் யாழ் வந்து எம்முடன் இணைந்து சைவபரிபாலன சபையினதும் ஏனைய சைவசமய நிறுவனங்களினதும் பணிகளில் தம்மை முழுமையாக ஈடுபடுத்திக் கொள்வார் என்று முழுமையாக நம்புகின்றேன். அவரது சமயப் பணிகள் நீண்டகாலம் தொடர தில்லைக்கூத்தன் அருள்பாலிப்பாராக.

**வாழ்க சைவப்புலவர் பணிகள்**
**வளர்க சைவநெறி**

## பவளந் தழுவிய திருமுறைப்பாடல்

### தேவாரம்

**பண் - காந்தாகம்** **தலம் - திருப்பெரும்புலியூர்**

துன்னுகடல் பவளஞ்சேர் தூயனநீண்டதிண் தோள்கள்
மின்னுசுடர்க் கொடிபோலும் மேனியினாளொடு கங்கைக்
கன்னிகளின் புனையோடு கலைமதி மாலைகலந்த
பின்னுசடைப் பெருமானார் பெரும்புலியூர் பிரியாரே

உ
சிவமயம்

# வியத்தகு விழாநாயகர்

**ஆசிரியமணி அ. பஞ்சாட்சரம் அவர்கள்**
*யாழ். சைவபரிபாலன சபையின் சைவ பிரசார அமைச்சர்*

சைவப்புலவர் வ. கந்தசாமி என்ற பெயரை ஒருவர் செவிவழி மூலம் கேட்டால், பத்திரிகையிலே ஒருவர் வாசித்தால், கேட்டவரதும் வாசித்தவரதும் மனத்திரையில் யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையின் கௌரவ பரீட்சைச் செயலாளர் சைவப்புலவர் வல்லிபுரம் கந்தசாமி அவர்கள் காட்சிகொடுப்பார்.

நூற்றாண்டு கண்ட சைவ பரிபாலன சபை நாவலர் பெருமானின் ஆத்ம சிந்தனையின் வழி வந்த பழம்பெரும் சபையாகும். நாவலர் பெருமானின் சிந்தனை வழியில் உருவான இச்சைவ பரிபாலன சபை சைவத்தமிழ் வளர்ச்சிக்கு ஆற்றிய பணிகள் அமோகமானவை.

பெரியவர்கள் சிறியவர்களுக்கு ஏற்ற வகையில் சைவப் பிரசங்கங்களைச் சைவ மகாநாடுகள் மூலம் நிகழ்த்தியும், பாடசாலைகளிற் கற்கும் சிறுகுழந்தைகள் முதல் மேல் வகுப்பு மாணவர்கள் வரை சமயக் கல்வியில் முன்னேறுவதற்கேற்ற வண்ணம் பரீட்சைகளை நடத்தியும் வருகின்ற சேவை மிகவும் வியக்கத்தக்க வகையில் அமைந்திருப்பதைச் சைவத்தமிழ் உலகு நன்கு அறியும்.

பழைமையும் பெருமையும் வாய்ந்த சைவ பரிபாலனசபையில் அரை நூற்றாண்டுக்கு முன்னரே தன்னை இணைத்துக் கொண்டார் சைவப்புலவர் வ. கந்தசாமி அவர்கள்.

சைவ பரிபாலனசபையின் அங்கத்தவராகச் சேர்ந்த இவர் உப தலைவராக - சமயப் பிரசார அமைச்சராக - அறநெறிப் பாடசாலை அதிபராக - நூலகப் பொறுப்பாளராக - கௌரவ பரீட்சைச் செயலாளராக தலைவராகப் பல்வேறு பதவிகளையும் காலத்துக்குக் காலம் பெற்றுக்கொண்டார். இவ்வாற்றால் சைவ பரிபாலன சபைக்கும் அவருக்குமுள்ள தொடர்பு புலனாகின்றது.

இருபத்தைந்து ஆண்டுகளுக்கு மேலாகக் கௌரவ பரீட்சைச்செயலாளராக இவர் ஆற்றி வரும் சேவை மனங்கொள்ளத்தக்கது. ஆரம்ப காலத்தில் கணிசமான தொகை மாணவர்களே குறித்த சமயபாடப் பரீட்சைக்குத் தோற்றினார்கள். இன்றோ பல்லாயிரக் கணக்கான மாணவர்கள் தோற்றுகின்றார்கள். இதற்கு ஏற்ற வழிவகைகளை வகுத்தவர் பரீட்சைச் செயலர் சைவப்புலவர் வ. கந்தசாமி அவர்கள் தான் என்றால் மிகையாகாது. சைவ பரிபாலனசபையின் நூற்பதிப்புகளுக்கு அச்சாணியாகவும் இருந்தார். சைவபரிபாலன சபையில் தன்னை இணைத்துக்கொண்டதின் மூலம் சபையை நன்கு வளர்ச்சியடையச் செய்தார். சைவபரிபாலன சபைக்கு அன்னவர் செய்த தொண்டுகளின் மூலம் அவரும்

வளர்ச்சியடைந்தார் என்பது குறிப்பிடத் தக்கது.

சைவபரிபாலன சபைத் தொண்டுக ளுடன் வேறுபல நிறுவனங்களின் அழைப் புக்களையும் ஏற்று பல்வேறு துறைகளிற் பணியாற்றியுள்ளார்.

பல்வேறு சங்கங்கள் சபைகளில் முக் கிய பதவிகளில் அமைந்து செய்த சேவை களோ மிகமிக அதிகம். குறித்த சேவை யின் பயனாக இவரை நாடி வந்து சிறப் புப் பெற்ற விருதுகளும் அநேகமானவை.

சிவநெறிச்செம்மல், சிவநெறிக் காவ லர், சிவநெறிக் கலாநிதி, சிவனடியார் மணி, சைவபூஷணம், சைவசித்தாந்த வித்தகர் முதலான பட்டங்களை அலங் கரித்துக் கொண்டிருக்கிறார் சைவப்புலவர் வ. கந்தசாமி அவர்கள்.

திரு. கந்தசாமி அவர்களது இத்து ணைச் சிறப்புக்களுக்கெல்லாம் காரணம் அவர் பெற்றுக்கொண்ட அடிப்படைக் கல்வியேயாகும். அத்துடன் ஆசிரியப் பணி யையும் சேர்த்துக் கொள்ளலாம்.

தாரமுங் குருவும் தலைவிதிப்படி என்பார்கள். இவரது ஆசிரியர்கள் அனை வருமே புகழ்பூத்த கல்விமான்களாவர். சைவப்பெரியார் சு.சிவபாதசுந்தரனார், வித்துவான் ந.சுப்பையாபிள்ளை, வித்து வான் க. கார்த்திகேசு, வித்துவான் க. கி. நடராஜன், வித்துவான் க. வேந்தனார், பண்டிதர் சோ. இளமுருகனார், பண்டிதர் வ.மு. இரத்திநேசுவரையர், வியாகரண சிரோமணி பிரம்மஸ்ரீ டி. கே. சீதாராம சாஸ் திரிகள், பிரம்மஸ்ரீ க. வை. ஆத்மநாத சர்மா என்பவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள்.

நாவலர் பாடசாலைக் கல்வி இவரது கல்வி வளர்ச்சிக்கு மூலகாரணமாயிற்று. நாவலர் சரித்திரத்தை நன்கு அறிந்திருந்த தனால் ஆசிரியராகப் பணிபுரிந்த வண்ணை நாவலர் பாடசாலை, ஹொரவப் பொத்தானை மகா வித்தியாலயம், மிகுந்தலை வித்தியா லயம், பெரியபுலம் மகா வித்தியாலயம் என் பன சைவச்சூழலில் எழுச்சி பெற்றன.

**“பெரியபுலம் மகா வித்தியாலயத்தில் நீண்ட காலம் பிரதி அதிபராகப் பணியாற்றிய காலம் என்றும் நினைவில் இருக்கக் கூடியது”** என்பார் சைவப்புலவர் வ. கந்தசாமி அவர்கள்.

18.01.1991இல் ஆசிரியப்பணியில் இருந்து ஓய்வுபெற்ற பின்னர் இவரது சமய சமூகப் பணிகள் மேலும் வளர்ச்சியடைந்தன. குறிப் பாக நாவலர் மகா வித்தியாலயத்தின் 150 ஆவது ஆண்டு நிறைவைக் கொண்டாடு வதற்கு சைவப்புலவர் அவர்கள் எடுத்துக் கொண்ட முயற்சி பெரும் பாராட்டுக்குரிய தாகும்.

நாவலர் தர்மகர்த்தா சபையில் மதிப் பார்ந்த ஓர் உறுப்பினராக இருந்து ஆற்றும் முன்னேற்றகரமான நல்ல சேவையைக் குறித்த சபையின் மூத்த உறுப்பினர் என்ற வகையில் நான் நன்குஅறிவேன். நாவலர் பெருமானின் நோக்கங்களுக்கு அமைவாக நாவலர் தர்ம கர்த்தா சபை இயங்குவதற்கு அன்னவர் கூறும் காத்திரமான கருத்துக்கள் உயர்ந்தவை யாகவே இருக்கும்.

"யாழ்ப்பாணத்தில் யாராவது ஒருவர் தடுக்கி விழுந்தால் ஒரு தமிழாசிரியர் மீது தான் விழுவார்" என்று கல்கி அவர்கள் அப்பொழுது ஒரு சந்தர்ப்பத்தில் எழுதி இருந்தார்.

கல்கி அவர்கள் இன்றிருந்தால் யாழ்ப் பாணத்தில் ஒருவர் தடுக்கி விழுந்தால் ஒரு சைவப்புலவர் மீதுதான் விழுவார் என்றே குறிப்பிடுவார்.

ஈழமணித் திருநாட்டில் சைவப்புலவர் பட்டத்தினைப் பெற்றவர்கள் தொகை வருடந்தோறும் அதிகரித்துக்கொண்டே வருகிறது. அவ்வாறு பட்டம் பெற்றவர்கள் அதிகரிப்பதற்குச் சைவப்புலவர் சங்கத்தின் மூலம் உழைப்பவர்களில் முக்கியமாகக் குறிப்பிடத்தக்க ஒருவர் வ. கந்தசாமி அவர்கள். குறித்த சங்கப் பரீட்சைகளுக்குத் தேர்வுச் செயலாளரும் இவரே.

**"தம்மின்தம் மக்கள் அறிவுடைமை மாநிலத்து மன்னுயிர்க் கெல்லா மினிது."**

என்கின்றது வள்ளுவர் வேதம். சைவப் புலவர் வ. கந்தசாமி அவர்களது உயர் நிலை கண்டு அவரைப் பெற்றெடுத்தவர்களான வல்லிபுரம் வள்ளிப்பிள்ளை தம்பதியர் தேவர் உலகில் இருந்த வண்ணம் வாழ்த்திக் கொண்டே இருப்பார்கள்.

உழுவன்பரான சைவப்புலவர், சைவசித்தாந்த பண்டிதர் வல்லிபுரம் கந்தசாமி அவர்கள் பவளவிழாக் காணுகின்ற கால கட்டத்தில் அவரது சேவைகள் பற்றிச் சிந்திப்பதற்கு வாய்ப்புக் கிடைத்ததையிட்டு மிகவும் மனப்பூரிப்பு அடைகின்றேன்.

## பவளந் தழுவிய திருமுறைப்பாடல்

### திருநாவுக்கரசு நாயனார் தேவாரம்

**பண் - திருத்தாண்டகம்** **தலம் - திருவாரூர்**

திருமணியைத் தித்திக்கும் தேனைப்பாலைத்
தீங்கரும்பின் இன்சுவையைத் தெளிந்ததேறல்
குருமணியைக் குழல்மொந்தை தாளம் வீணை
கொக்கரையின் சச்சரியின் பாணியானைப்
பருமணியைப் **பவளத்தைப்** பசும் பொன்முத்தைப்
பருப்பதத்தின் அருங்கலத்தைப் பாவந்தீர்க்கும்
அருமணியை ஆரூரிலம்மான் தன்னை
அறியா தடிநாயேன் அயர்ந்தவாறே.

உ
சிவமயம்

# இல்லறஞானி

திருமதி. மங்கையர்க்கரசி திருச்சிற்றம்பலம்
முன்னாள் அதிபர் – இராமநாதன் கல்லூரி.

வண்ணார்பண்ணை சைவத்தின் கோட்டையாக விளங்குகிறது. புகழ்பெற்ற வண்ணை சிவன்கோயில் வரதராஜப் பெருமாள் மற்றும் கதிரேசன் ஆலயங்கள், விநாயகர் ஆலயங்கள் என்பன நீண்டகால மாக அடியார்களை சமய வழியில் ஈடுபாடு கொள்ளச்செய்து வருகின்றன. மேலும் சிவ தொண்டன் நிலையம், நாவலர் ஆச்சிரமம் பக்திபூர்வமான சமய நிகழ்ச்சிகளுக்கு அடித்தளமாக விளங்குகின்றன. சமய அறிவை வளர்ப்பதிலும், மாணவர்களை சைவசமய கலாசாரத்தைப் பின்பற்றி வாழ வழிவகுக்கும் பிரபல்யமான கல்லூரிகளும் வண்ணார்பண்ணையில் அமைந்துள்ளன. வண்ணார்பண்ணையை மையமாகக் கொண்டு பல சமய நிறுவனங்கள் செயற் பட்டு சமயத்தை சாதனை மூலமும் போதனை மூலமும் வளர்த்து வருவது மகிழ்ச்சிக்குரியதாகும்.

யாழ்ப்பாணத்தில் பல சைவசமய மன்றங்கள், சபைகள், கிராமங்கள் தோறும் செயற்படுகின்றன. அவை சைவ சமயத்தைப் பேணிப்பாதுகாத்து வருகின் றன. திரிகரண சுத்தியுடனும், உயர் நோக் கங்களுடனும். பிறர் நன்மை கருதி செயற் படுவதாலும், கருமமே கண்ணாக இருப்ப தாலும் சைவபரிபாலன சபை இன்றுவரை தளர்ச்சியின்றி இயங்குகிறது. சபையின் தூணாக விளங்குபவர் சைவப்புலவர் வ.கந்த சாமி அவர்கள். சைவபரிபாலன சபை என்ற ஆலமரம் ஓங்கி வளர்ந்து எல்லாத் திசைகளி லும் கிளைபரப்பி பல்துறைப் பணியாற்றுவ தற்கு உறுதுணையாக பலர் உள். அவர் களுள் ஆணிவேராக விளங்குபவர் சைவப் புலவர் வ.கந்தசாமி என்றால் மிகையில்லை.

நெற்றியில் வீபூதி, சந்தனப் பொட்டு, கழுத்தில் உருத்திராக்கம், சைவத் தமிழ்ப் பண்பாட்டைப் பிரதிபலிக்கும் தூய ஆடைகள் என்பன அணியத் தவறமாட்டார். இனிமையான அன்பான மென்மையான பேச்சு, நிதானம் தவ றாத செயற்பாடு, உரிய நேரத்தில் கடமை யாற்றுவது ஆகிய பண்புகள் அவரிடம் ஒருங்கே அமைந்திருந்தன. தான் செயற்படுவதோடு நில் லாமல் ஓர் இயக்குனராக ஒரு அறிஞர் குழுவை இயக்கி அரும்பணியாற்றுகிறார். இதனை நான் பலமுறை நாவலர் ஆச்சிரமத்தில் கண்டு வியந்தேன்.

சைவப்புலவருடைய சமயப்பணிகள் கல்விப் பணிகள் எல்லோரும் போற்றத்தக்க முறையில் அமைந்துள்ளன. கடந்த நாற்பது வருடங்களாக கல்வித்துறையில் நம் நாட்டில் பாரிய மாற்றங்கள் விஞ்ஞான, தொழில்நுட்ப வளர்ச்சி காரணமாக ஏற்பட்டுள்ளன. தற் பொழுது கணனித்துறை மிகமுக்கியத்துவம் பெற்றுள்ளது. ஆகவே திருமுறை ஓதுதல், சைவசித்தாந்த நூல்களைக் கற்றல், புராண

படனம், கதாப்பிரசங்கம் என்பன அருகி வரத் தொடங்கிய நிலையில் அவற்றுக்கு முக்கியத்துவம் கொடுத்து வகுப்புக்கள் நடாத்தி பரீட்சைகள் வைத்து பரிசில்கள் வழங்கி மாணவர்களை ஊக்குவித்து அரும் பணியாற்றினார். வண்ணை நாவலர் பாட சாலையில் சைவப்புலவர், இளஞ் சைவப் புலவர், சைவசித்தாந்த பிரவேச பண்டிதர், பால பண்டிதர், பண்டிதர் வகுப்புக்கள் நடை பெறுகின்றன. ஆழமான பரந்த சமய அறிவும், அனுபவமுள்ள பண்டிதர்களும், அறிஞர்களும் வகுப்புகளை நடாத்துகின் றனர். அடியேனுக்கும் சில காலம் வகுப்பு நடத்தும் சந்தர்ப்பம் கிடைத்ததையிட்டு மகிழ்ச்சியடைகிறேன். இவ்வகுப்புக்கள், சபை நடாத்தும் பரீட்சைகள் நடைபெறும் பொழுது இடையிடையே சைவப்புலவர் அவர்கள் கண்காணித்துக் கொள்வது வழக்கம். பரீட்சைகளுக்கும், வகுப்புக் களுக்கும் பருத்தித்துறை, அராலி, மல்லா கம், மானிப்பாய் ஆகிய தூர இடத்திலி ருந்து மாணவர்கள் மிக ஆர்வத்துடன் வந்து கற்றுத் தேறுவதை நான் அவதானித்து சபையின் பணிகளை எண்ணி மகிழ்ந்தேன்.

மேலும் வறுமைக்கோட்டின்கீழ் வாழும் மாணவர்களுக்கு உயர் கல்வி வழங்கவேண்டும் என்ற உயர்ந்த எண்ணம் சைவப்புலவருக்கு ஏற்பட்டது. சைவபரி பாலனசபை 1994 ம் ஆண்டு நடத்திய சைவ மகாநாட்டில் மூன்றாம் நாள் மாலை நிகழ்ச் சிகளுக்குத் தலைமை தாங்கிய சைவப் புலவர் ஓர் நற்செய்தியை வெளியிட்டார். பெரியாருடைய செய்தி வள்ளுவர் வாக் குக்கு ஏற்ப அமைந்திருந்தது.

**"பொருள் கருவி காலம் வினையிடனொ டைந்து
மிருடீர வெண்ணிச் செயல்"**

யாழ். பல்கலைக்கழகத்தில் சைவ பரிபாலன சபை அறக்கட்டளை நிதியம் ஒன்று நிறுவப்பட்டது. இது தொடர்பாக ஒன் றரை இலட்சம் ரூபா நிதி யாழ். பல்கலைக் கழகத்தில் ஒப்படைக்கப்பட்டு அதிலிருந்து கிடைக்கும் வட்டி, இந்துநாகரிகத்தைச் சிறப் புப் பட்டமாகக் கற்கும் மூன்று வறிய மாண வர்களுக்குத் திறமை அடிப்படையில் தெரிவு செய்யப்பெற்று, பல்கலைக்கழகக் கல்வி நிறைவேறும் வரை வழங்கப்படும். 2000 ம் ஆண்டிலும் இவ்வாறு நிதியுதவி வழங்க ஏற் பாடுகள் செய்யப்பெற்றன. வறிய மாணவர் களிடம் சைவப்புலவர் கொண்ட இரக்கம் அன்பு, சேவை மனப்பான்மை, நல்லெண்ணம் என்பவற்றை நாம் அவர்கள் ஆற்றிய பணிகள் மூலம் அறியமுடிகிறது. அவருக்குப் பெருமை யேற்படுத்திய சிறந்த பண்பு பணிவு என்ப தாகும்.

**"பணியுமா மென்றும் பெருமை சிறுமை
யணியுமாந் தன்னை வியந்து"**

என வள்ளுவர் பெருமானும் இதனை நன்கு விளக்கியுள்ளார்.

நாவலர் ஆச்சிரம் ஒரு ஆச்சிரமத் துக்கு ஏற்ப சமய கலாசாரம், சமய வாழ்வு, சமய ஆராய்ச்சி, மற்றும் சமய சம்பந்தமான நிகழ்வுகள் நடைபெற வேண்டும் என்ற மரபும், நியதியும் உண்டு. சைவபரிபாலன சபையின் ஏனைய அங்கத்தவர்களின் ஆதரவோடு மேற் கூறப்பெற்ற நிகழ்ச்சிகளை மேற்கொண்டார். நாயன்மார் குருபூசைகள், ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் குருபூசை பரிசளிப்பு விழாக்கள் என்ப வற்றை கொண்டாடுவதோடு தற்பொழுது ஓர் அறநெறிப் பாடசாலையும் நடாத்துகிறார். எல்லோராலும் சமயம் தொடர்பான பணிகளை வெற்றிகரமாகச் செய்ய முடியாது. முன்நின்று இயங்குபவர் ஓர் சமயியாக விளங்குவது இன்றியமையாதது. இன்று சமயப்பணி ஆற்று பவர்கள் உதட்டளவில் சமயம் பேசுபவர்களா கவும் உள்ளத்தால் சமயத்துக்கு மாறாக வாழ் பவர்களாகவும் இருப்பது கவலைக்குரியது. சேர். பொன் இராமநாதன் பெருநிலக்

கிழாராக விளங்கி பல பணிகளை ஆற்றி னார். அப்பெரியார் **“இவை எல்லாம் பரமேஸ்வரன் சொத்து, இறைவன் தந்த செல்வம் நல்லவழியிலே பயன்படுத்தப்பட வேண்டும், நான் பரமேஸ்வரனின் அடிமை”** என்று எந்த நேரமும் கூறிக் கொண்டே இருப்பாராம். புகழ், பட்டங்கள், பாராட்டு களை விரும்பாது பணியாற்றுபவர்கள் ஒரு சிலரே. சைவப்புலவர் போல பலர் சமய சேவை புரிந்தால் நமது நாட்டிலே சைவ மக்கள் வாழ்வு மிக உயர்ந்த நிலையில் இருக்கும் என்பது உறுதி.

**“அன்புநா ணொப்புரவு கண்ணோட்டம் வாய்மையோ**
**டைந்துசால் பூன்றிய தூண்”**

என்ற வள்ளுவர் வாக்குக்கிணங்க வாழ்ந்த பெருந்தகை சைவப்புலவராவார்.

பாரத நாட்டில் சிதம்பரம் மாலை கட்டித் தெருவில் அமைந்துள்ளது புண்ணிய நாச்சி அம்மையார் மடம், நமது மக்கள் சிதம் பரம் சென்றால் அங்கு தங்குவது வழமை. அதனை தற்பொழுது நவீன வசதிகள் கொண்ட ஒரு மடமாக அமைக்க ஆலோசனை வழங்கி வெற்றிகரமாக நிறைவேற்றியவர் சைவப்புலவர் என்பதில் சைவ மக்கள் பெருமையடைய வேண்டும். வேதாரணியம் கார்த்திகை மட தர்மபரிபாலனப் பொறுப்பு, வேலணையில் சைவபரிபாலன சபையின் கிளை அமைத்தமை, நாவலர் ஆச்சிரமத்தில் நூலகம் அமைக்கப் பெற்றமை, சைவப்புல வரின் அரிய பணிகளாகும். ஒரு பெரிய மரத் தின் வேராக விளங்கி சைவப்புலவர் ஆற்றிய பணிகள் ஏனைய சமய சேவை செய்பவர் களுக்கு ஒரு முன் உதாரணமாக விளங்க வேண்டும்.

## பவளந் தழுவிய திருமுறைப்பாடல்

### தேவாரம்

**பண் - காந்தாரபஞ்சமம்** **தலம் - திருப்பூந்தராய்**

பந்துசேர் விரலாள் பவளத் துவர்
வாயினாள் பனிமாமதி போல்முகத்(து)
அந்தமில் புகழாள் மலைமாதொடும் ஆதிப்பிரான்
வந்துசேர் விடம் வானவர் எத்திசையுந்
நிறைந்து வலஞ்செய்து மாமலர்
புந்திசெய் திறைஞ்சிப் பொழி பூந்தராய் போற்றுதுமே.

உ
சிவமயம்

# நான் கண்டு அனுபவித்த மகான்

சிவசித்தர் - பாலும் தேனும் -
**பண்டிதர் Dr.K.N. நவரத்தினம்.**

**"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெலாம்"** இஃது முன்சொன்ன வார்த்தைகள். அதைமாற்றி - மேன்மை கொள் சைவசமயம் உலகெலாம் விளங்க அவதரித்தவர் புலவர் கந்தசாமி. ஆறுமுக நாவலருக்குபின் அவதரித்த சைவப் பெருமான்.

சத்தியம், பொறுமை, சாந்தம், அடக்கம், குனித்தபுருவம், கொவ்வை செவ்வாயும், பவளம்போல் மேனியும் பால்வெண்ணீறும் மேலாக ஒளிர்கிறது. சிவயோக சுவாமிகள் சிவதொண்டு செய், சிவத்தியானம் செய் என்கிறார். உபாத்தியாயர் அதற்கு மேலாக செய்கிறார். சாந்தையர் மடப் பிள்ளையாரில் கரைந்துவிட்டார். ஆற்றில் உப்பு சேர்ந்தாப் போல் பிரிக்க முடியாது இருப்பவர்.

பிள்ளையாரின் அடியார்கள் அவரை பிள்ளையாரென்றே கணிக்கிறார்கள். மதிக்கிறார்கள். மெய்யாலாகும் மனிதனென்றே கை கொடுத்தார் சைவசமயிகள். சுவாமி விபுலானந்த அடிகளார் பாடிய பாடலுக்கு சைவப் புலவர் வ. கந்தசாமியே எடுத்துக்காட்டு.

**வெள்ளைநிற மல்லிகையோ வேறேந்த மாமலரோ**
**வள்ளல் அடி இணைக்கு வாய்த்த மலரெதுவோ**
**வெள்ளைநிறப் பூவுமல்ல, வேறெந்த மலருமல்ல**
**உள்ளக் கமலமடி உத்தமனார் வேண்டுவது.**

சும்மா போய் நீதிமான் பிள்ளையாரைக் கேட்டுப் பாருங்கள். வாழ்க - வாழ்க பாதங்கள் நூறாண்டு.

## பவளந் தழுவிய திருமுறைப்பாடல்

### சுந்தரமூர்த்தி நாயனார் தேவாரம்

**பண் - குறிஞ்சி** **தலம் - திருவொற்றியூர்**

**பவளக் கனிவாய்ப் பாவை பங்கன்**
**கவளக் களிற்றின் உரிவை போர்த்தான்**
**தவழும் மதிசேர் சடையாற் கிடம்போல்**
**உகளுந் திரைவாய் ஒற்றி யூரே**

உ
சிவமயம்

# நாவலர் பாரம்பரியத்தின் நன்முத்து

**சிவத்தமிழ் வித்தகர் சிவ.மகாலிங்கம்**
*உதவிப் பணிப்பாளர், இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம், யாழ்ப்பாணம்.*

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமான் இந்தப் பூமியிலே 57 ஆண்டுகள் மட்டுமே வாழ்ந்தார். இவர் ஒரு மாணவ பரம்பரையையே உருவாக்கி வைத்தார். வாழையடி வாழையாக இந்த மாணவர் பரம்பரையினர் நாவலருடைய சிந்தனைகளைச் செயற்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டு வருகின்றனர். நாவலர் வழிவந்த திருக்கூட்ட மரபிலே உதித்த கர்ம யோகிகளில் ஒருவராக சைவப்புலவர் திரு.வ. கந்தசாமி ஆசிரியர் அவர்கள் திகழ்கிறார். இவர் தனது வாழ்க்கையின் பெரும் பகுதியினைச் சிவப் பணிக்கே செலவிட்டார். ஆசிரியராக, அதிபராக எல்லாம் இருந்து தனது கற்பித்தல் பணியினைச் சிறப்பாகச் செய்து வந்தார். நல் ஆசிரியனாக இருந்ததினால் பல மாணவர்களின் உள்ளங்களில் வாழ்ந்து வருகின்றார். இவருடைய கோலமும் சீலமும் ஒன்றானவை, வாக்கும் வாழ்வும் ஒருமித்தவை, தூய்மையின் அடையாளமாகிய வெள்ளை நிறத்தையுடைய ஆசிரியரின் உடுப்பும் தூய்மையானதாகவே காணப்படும். வள்ளுவர் சொற்களைப் பயன்படுத்துவது போல இவரும் ஆறுதலாக அமைதியாக அளந்தே பேசுவார். கடமையிலே கண்ணும் கருத்துமாக இருந்து செயற்படும் கர்ம யோகியாகவே திகழ்கின்றார். தன்னை இறைவன் வழி நடாத்துகின்றான் என்ற நம்பிக்கையோடு எந்த வித விமர்சனங்கள் வந்தாலும் சலனப்படாது தனது கடமைகளைச் செய்து வருவார்.

இன்று விலாசத்திற்கும் விளம்பரத்திற்குமாகப் பணியாற்றுபவர்கள் பலரைப் பார்க்கின்றோம். சமயப்பணி என்பது தொண்டிற்குரியதே அன்றித் தொழிலுக்குரியது அல்ல என்பது நாவலர் பெருமான் வகுத்துத் தந்த நெறிமுறையாகும். ஆனால் இன்று சிவபூமியாகிய நமது ஈழமணித் திருநாட்டில் பல சமய வியாபாரிகள் தோன்றிவிட்டார்கள். கொள்கைப் பிடிப்பில்லாத சமயவாழ்வு, பலமில்லாத அத்திபாரத்தில் கட்டப்பெற்ற கட்டிடம் போன்றது ஆகும். வணக்கத்திற்கும் போற்றுதலுக்கும் உரிய பெரியார் சைவப்புலவர் கந்தசாமி அவர்கள் பணத்திற்கும் புகழுக்கும் அகப்படாத கர்ம யோகி. சைவத்தமிழ் உலகத்திற்கு தலைமை தாங்கி வழிகாட்டும் உத்தம புருஷன்.

நாவலர் பெருமானின் அடிச்சுவட்டைப் பின்பற்றி வந்த சைவப் பெரியார் கந்தசாமி அவர்கள். அவர் செய்த சேவைகள் சைவத் தமிழ் மக்களின் உள்ளங்களில் என்றும் நிலைத்து நிற்கும். நோயற்ற அமைதியான வாழ்வு பெற்று நூறாண்டு காலம் சிறப்போடு வாழ எல்லாம் வல்ல பார்வதி சமேத பரமேஸ்வரப் பெருமானின் திருவருள் கந்தசாமி ஐயா அவர்களுக்குப் பூரணமாகக் கிடைக்க வேண்டுமென்று இறையருளைப் பிரார்த்திப்போமாக.

உ
சிவமயம்

# சொல்லப்பட வேண்டிய பண்பாளர்

வை. இரகுநாதமுதலியார்
*சைவபரிபாலன சபை முன்னாள் செயலாளர்.*

*வாழ்க்கை என்பது ஒரு அரியகலை.*

**"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்."**

*இந்நாளில் சைவ மணம், தெய்வ மணம் கமழும் சிவனடியவர் ஒருவரைக் காணுதல் வெகு அருமையிலும் அருமை.*

**"ஊனிலாவி உயிர்க்கும் பொழுதெலாம்
நானிலாவி யிருப்பனென் நாதனைத்
தேனிலாவிய சிற்றம் பலவனார்
வானிலாவி யிருக்கவும் வைப்பரே"**

*என்ற அப்பர் சுவாமிகள், வாழ்ந்த வழியில் வாழ்ந்தவர் சைவப்புலவர் கந்தசாமி ஐயா. எத்தனை ஆண்டுகள் வாழ்வது என்பது பெரிதன்று, எப்படி வாழ்ந்தார் என்பது தான் பெருமையும் சிறப்பும். ஆன்மீகம், பக்திமை, சைவசித்தாந்தத்தில் நிறைந்த சிந்தை, ஆலயத்தொண்டு, சமய விழாக்கள் இவையே அவரது மூச்சு பேச்சு எல்லாம்.*

*ஆசிரியப் பணி தொடங்கி, ஏற்றுக் கொண்ட பணிகள் அனைத்திலும் பரிபூரண ஈடுபாடு, கடுமையான உழைப்பு, உண்மையான உழைப்பில் மகிழ்ச்சி, நேர்மையான உழைப்பில் உயர்வு இவை அவரது பண்புகள். சிலிர்த்துக் கொள்ளாத இன்னொரு வரலாற்றுப் பதிவு அவருடையது.*

*ஐந்தொழில் புரியும் ஆண்டவனே ! " நின் திருவடியை என்றும் மறவாத மனம் வேண்டும்; எளிமையான வாழ்வு வாழவேண்டும்; பயன் கருதாப் பணியில் நெஞ்சம் பதிதல் வேண்டும் ஆலயப் பணிக்கும், சமயப்பணிக்கும் தடைகள் வாராது, இறைபணியில் என் வாழ்க்கை கழிய வேண்டும்; இறக்கும் பொழுது அன்னை காசி விசாலாட்சி மடியில் என் தலை இருக்கக், காதில் காசிவிசுவநாதர் ஸ்ரீ பஞ்சாட்சர மந்திரத்தை ஓத வேண்டும், மரணபயமின்றிச் சிவன் கழலைச் சேரவேண்டும்" என்ற வேண்டுதல்களுடன் வாழும் தொண்டுள்ளம் நிறைந்த உன்னத ஆன்மா.*

**"ஈசனுக்கு அன்பிலார் அடியவர்க்கும் அன்பிலார்
எவ்வுயிர்க்கும் அன்பிலார், தமக்கும் அன்பிலார்"**
**- சிவஞானசித்தியார் -**

*ஆலய வழிபாட்டின் நோக்கம் மனதைப் பாச கரணங்களில் தோயவிடாது, பக்தி, அன்பு கரணத்தில் தோயச்செய்து* **'அஹிம்சா பரமோ தர்மா'**, *என்னும் உயரிய அறத்தைப் பெறுவிப்பதாகும் என்பதைத் தெளிந்து, அன்பை வளர்க்கும் கோயில் பணிகளில் ஈடுபட்டு வாழ்ந்தார்.*

வளரும் சமுதாயத்தில் பொறுப்பு மிக்க ஒருவனாகப் பிறந்து விட்டதை உணர்ந்து, சமுதாயத்திற்கு எந்த அளவிற் குத் தன்னாலியன்றதை வழங்க முடியுமோ, அந்த அளவிற்குத் தன் விடாமுயற்சியால் வாழ்ந்து காட்டியவர். அதனால் அவருக் கென்றே ஒரு மாணவ சமுதாயம் இயங்கி வருகின்றது.

இதனால் காலத்தினால் அவர் செய்த செயல்கள் அவரை மற்றவர்களினின்றும் வேறுபடுத்திக் காண்பிக்கின்றன. அதுவே விருதுகளை விரும்பாத அவரிடம், விருதுகள் பலவும் தேடிவந்து, அவரை அலங்கரித்து, விருதுகளும் பெருமை பெறு கின்றன.

இத்தகைய சிறப்புக்களை அணிகலன் களாகக் கொண்ட பண்பாளர் 1964 ம் ஆண்டு சித்திரைப் புதுவருடத்தன்று பண்டிதர் இ. திருநாவுக்கரசு போன்ற சைவப் பேரறிஞர்களால் தோற்றுவிக்கப் பட்ட **'வடமாநிலச் சைவ இளைஞர் மாமன் றத்தின்'** செயலாளராகவும், பின்னர் பொருளாளராகவும் அரும்பணியாற்றி, **'கொடிக்கவி', 'விபூதியின் பெருமை'** ஆகிய நூல்கள் வெளிவரக் காரண கர்த்தாவாக விளங்கினார். இம்மன்றம் யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையின் பணிகளுக்குத் தோள் கொடுத்தது.

இற்றைக்கு 40 ஆண்டுகட்கு முன் சைவ பரிபாலன சபையில் திருவாளர்கள் மு. மயில் வாகனம், பண்டிதர் இ. திருநாவுக்கரசு. சி. சீவ ரத்தினம் போன்றோருடன் இணைந்து சபை யின் ஆன்மீகப் பணிகளில் தம்மை ஈடுபடுத் திக் கொண்ட காட்சிக்கு எளியவராகவும், மனிதநேயம் மிக்கவராகவும் திகழ்ந்த இவரது நினைவுகள் இன்றும் பசுமையாக என்னுள் உள்ளன.

சுமார் 40 ஆண்டுகளாக அவருடன் உள்ள மிகநெருக்கமான தொடர்பு எனக்கு வளர்பிறையாக அமைந்தது. 75 ஆவது அகவையில் காலடி எடுத்துப் பவளவிழாக் காணும் இனிய நண்பருக்கு என் மனம் நிறைந்த நல்வாழ்த்துக்களையும் பாராட்டுக்

## பவளந் தழுவிய திருமுறைப்பாடல்

## திருநாவுக்கரசு நாயனார் தேவாரம்

**பண் - திருத்தாண்டகம்** **தலம் - திருநாகைக்காரோணம்**

பாரார் பரவும் பழனத்தானைப்
பருப்பதத்தானைப் பைஞ்ஞீலியானைச்
சீரார் செழும்பவளக் குன்றொப்பானைத்
திகழுந்திருமுடிவேல் திங்கள்சூடிப்
பேராயிரமுடைய பெம்மான் தன்னைப்
பிறர்தன்னைக் காட்சிக்கரியான்தன்னைக்
காரார் கடல்புடைசூழ் அந்தண்நாகைக்
காரோணத்(து) எஞ்ஞான்றுங் காணலாமே.

உ
சிவமயம்

# கந்தா வந்தாய் குருவாய்

இரா. செல்வவடிவேல்
விழாநாயகரின் மாணவன்

**"செயற்கு அரிய செய்வார் பெரியர்:
சிறியர்
செயற்கு அ(உ)ரிய செய்கலாதார்."**
- குறள் 26

இன்று பெரியோர்கள் என்று சொன்னால் வயது முதிர்ந்தவர்கள், பெரும் பணக்காரர்கள், பெரும் பதவியிலிருப்பவர்கள் என்ற அளவோடு அச்சொல்லின் பொருள் முடிந்து விடுகிறது. **"செயற்கு அரிய செய்வார் பெரியர்"** என்று தான் பெரியோர்களுக்கு இலக்கணம் வகுக்கிறான் வள்ளுவன்.

இன்றைய 21ம் நூற்றாண்டில் இதய சுத்தியுடன் **"மக்கள் சேவையே மகேசன் சேவை"** என்கிற எண்ணத்துடன் என் கடன் பணி செய்து கிடப்பதே என்று வாழ்வது செயற்கு அரிய காரியம் என யான் கருதுகிறேன். **பெரியவர், சைவப்புலவர் திரு. வல்லிபுரம் கந்தசாமி** அவர்கள் இப்படியான இறை தொண்டர் ஆவார்கள்.

சிவந்த உடல், உதட்டில் புன்சிரிப்பு, நெற்றி நிறைய திருநீறு. இதுதான் திரு. வல்லிபுரம் கந்தசாமி அவர்களின் கம்பீர தோற்றம். நாற்பது ஆண்டுகளுக்கு முன்னர் கண்ட அதே தோற்றம் - அவர் என்றும் இளமையுடையார். பொதுத்தொண்டு செய்தல் என்பது முட்பாதையாக மாறியுள்ள இன்றைய காலத்தில் பொறுப்புக்களை தன்னந்தனியனாக சுமந்து செயற்படும் செயல்வீரர்.

வண்ணை சாந்தையர்மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலயம், பன்றிக்கோட்டுப் பிள்ளையார் கோயில், யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபை, வண்ணை சிவன் கோவில், வில்லூன்றிப் பிள்ளையார் கோவில், அகில இலங்கை சைவப் புலவர் சங்கம் இப்படி பல அமைப்புக்களை அலங்கரிப்பவர் சைவப் புலவர் திரு. வ. கந்தசாமி அவர்கள்.

எனக்கு கல்வி தந்த ஆசிரிய தெய்வங்களின் நல்லாசிகள் தான் எனது இன்றைய நிலைக்குக் காரணம் ஆகும். ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரினால் ஆரம்பிக்கப்பட்ட வண்ண ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சைவப் பிரகாச வித்தியாசாலை எனக்கு ஆரம்பக்கல்வியூட்டிய கோயில் ஆகும். திரு. வ. கந்தசாமி ஆசிரியர் அவர்கள் இந்தக் கோயிலின் பூசகராக இருந்து அடியேனுக்கு ஆரம்பக் கல்வி தந்த வித்தகர் ஆவார். என் ஆசான் சைவப் புலவர் திரு. வ. கந்தசாமி அவர்கள் என் சிறுபராயத் துடுக்கடக்கி ஆத்மீக தத்துவங்களுக்கு அத்திபாரம் இட்டு வைத்தார். **"வாக்குண்டாம்"** என அவர் இட்டு வைத்த பிள்ளையார் சுழி, **"திருமந்திரத்தை"** படிக்கும்

நிலைக்கு அடியேனை உயர்த்தி இருக்கிறது.

திரு. வ.கந்தசாமி ஆசிரியர் அவர்களின் செயற்றிறன் கண்டு வியந்து வருகிறேன். தனிநபர் ஒருவர் இத்தனை கருமங்களை, நேர ஒழுங்கு தவறாமல் எப்படிச் செய்ய முடிகிறது? இறையருள் என்பதுதான் இதற்கு விடையாக முடியும். திட்டமிட்டுக் கொள்ளும் சிறந்த நடைமுறை அவரிடம் கற்றுக்கொள்ள வேண்டிய முக்கிய பாடமாகும். கூட்டங்களை தலைமை ஏற்று நடத்தும் பொழுது உறுப்பினர்களின் கேள்விக் கணைகளுக்கு மௌனமாகவே இருந்து பதில் கூறும் ஆற்றல் என்னை நெறிப்படுத்தியிருக்கிறது.

சிலரின் கண் மூடித்தனமான குற்றச்சாட்டுக்களைக் கூட சிரிப்பினால் உதாசீனம் செய்யும் ஆற்றல் மிக்க பெரியவர். எனக்கும், அவருக்கும் சில சந்தர்ப்பங்களில் **"கருத்து முரண்பாடு"** ஏற்பட்டுள்ளது. ஆனால் அவை கருத்து முரண்பாடே தவிர பகைமை உணர்வு அல்ல! என்றும் என் மனதில் மதிப்புக்குரிய ஆசானாகவே வீற்றிருக்கிறார். அவரிடமிருந்து கற்றுக் கொண்ட பொறுமை என்பதும், அமைதியாக இருந்து இறுதியாக விடையளித்து அனைவரையும் அடக்கும் தன்மையும் இன்று அடியேன் தலைமை ஏற்கும் சந்தர்ப்பங்களில் உதவுகிறது.

சைவப்பெரு மக்களின் முதன்மை அமைப்பு யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையாகும். இச்சபையின் உயர்வுக்கு ஆசிரியப் பெருமகனார் ஆற்றியுள்ள அரிய சேவையை நினைவு கூறுவதற்கு கடமைப்பட்டுள்ளேன். சைவபரிபாலன சபையின் அடையாளமாகத் திகழ்வது சைவ சமயபாடப் பரீட்சை ஆகும். இக்கட்டான சந்தர்ப்பங்களில் கூட பரீட்சையை சிறந்த முறையில் நடத்திய பெருமை அவருக்குரியது. சகல பொறுப்புக்களையும் சுமந்து செயற்படுவது சில சந்தர்ப்ங்களில் எனக்கு எரிச்சல் ஊட்டியிருக்கிறது. பொறுப்புக்களை பகிர்ந்து கொடுக்க வேண்டியது தானே! என்று கேட்டும் இருக்கிறேன்.

அதற்கு அவரிடமிருந்து சிரிப்பை பதிலாகப் பெற்றபொழுது இளமைத் துடிப்புடன் கோபப்பட்டிருக்கிறேன். பொறுப்புக்களைத் தன்வசம் வைத்து செயற்பட்டிருக்காவிடின் எந்தக் காரியமும் சீராக நடைபெற்றிருக்காது என்பதை உளப்பூர்வமாக உணர்ந்துள்ளேன். ஆனால் அவருக்குப் பிறகு அவரது பணிகள்...? வெறுமைதான் என எனக்குத்தென்படுகிறது.

திருமுறைச் சிவபூசை நியமம் தவறாத திரு. வ. கந்தசாமி அவர்கள் ஓடு நீங்கிய பழம். அந்தப் புண்ணியரிடம் கல்வி கற்கும் பேறு பெற்றமைக்காக இறைவனுக்கு நன்றி சொல்கிறேன். அகவை எழுபத்தைந்தில், எழுபத்தைந்தை மக்கள் சேவைக்கு மகேசன் சேவைக்கு அர்ப்பணித்து சிறப்பாகச் செயற்பட்டுவரும் தூய மனிதர் பல்லாண்டு வாழ இறைவனைப் பிராத்தனை செய்கிறேன்.

**"பண்புடையார்ப் பட்டுண்டு உலகம்**
**அதுவின்றேல்**
**மண்புக்கு மாய்வது மன்."**

- குறள் 996

உ
சிவமயம்

# ஏகனாகி இறைபணி நிற்கும் அடியார்க்கும் அடியான்

சித்தாந்த பண்டிதர் செ. சிவபாதம்
பண்ணாகம்

நாவலர் பரம்பரையில் இப்போது வாழ்பவர்களுள் ஒருவராக இருப்பவர் தான் ஏகனாகி இறைபணி நிற்கும் சைவப் புலவர் வ. கந்தசாமி ஐயா அவர்கள். இவர் சைவத்தினதும், தமிழினதும் பாது காவலர் . ஐந்தாவது சமயகுரவர் என்று சொல்லப்படும் ஆறுமுகநாவலர் பெருமா னின் அடிச்சுவட்டைப் பின்பற்றி வாழ்பவர்.

ஐயா அவர்கள் தாம் மானிடப் பிறவியின் பயனை அடையும் நோக்கமாக இலக்கணம், இலக்கியம், திருமுறை, சைவ சித்தாந்தம், புராணம் ஆகியவற்றைப் படித் தும் குருமூலம் கேட்டு, சிந்தித்தும் தெளி வடைந்தும் மண்ணில் நல்லவண்ணம் வாழ்ந்து கொண்டிருப்பவர்.

சாந்தையர் மடம் கற்பகவிநாயகர் கோயிலில் தைப்பூசத்தில் கந்தபுராணப் படிப்பை ஆரம்பித்து வைகாசி விசாகத்தில் பூர்த்தி செய்பவர் இந்தத் தினத்தில் புராண படனத்திற்கு பயன் சொல்பவரையும், வாசிப்பவர்களையும், கேட்போர்களையும் விதிமுறை தவறாமல் கௌரவிப்பார். இதை நாம் பலமுறை அனுபவித்ததுண்டு. இப்படிப்பட்ட பல பண்புகளையும் புகழை யும் தன்னிடத்தே கொண்ட சைவப்புலவர் கந்தசாமி ஐயாவின் இறைபணியால் தமிழ், சைவசமயம், சமூகம், கலாசாரம் ஆகிய யாவும் சிறப்படைகின்றன.

இவருடைய இறைபணி மேலும் வளரவும் இதனால் எம் மக்கள் இவரைப் பின்பற்றி பயன் பெறவும் இவர் இந்தப் பூமியிலே இந்திரன் போல் வாழ்ந்து மன திலே எதை விரும்புகிறாரோ அது எல்லாம் கைகூடப்பெற்று சிவஞானபோதம் பன்னி ரண்டாம் சூத்திரம் **"மாலற நேயம் மலிந் தவர் வேடமும் ஆலயம் தானும் அரனெனக் தொழுமே"** என்ற மெய்கண்ட தேவர் வாக்குக்கு இலக்கியமாய் வாழ எல்லாம் வல்ல சிவன் அருள் பாலிப்பாராக என்று சொல்லி வாழ்த்துகிறேன்.

## பவளந் தழுவிய பதினோராம் திருமுறைப்பாடல்

### திருவீங்கோய்மலை எழுபது

**அம்பவள** வாய்மகளிர் அம்மனைக்குத் தம்மனையைச்
செம்**பவள**ந் தாவென்னச் சீர்க்குறத்தி - கொம்பின்
இறுதலையி னாற்கிளைக்கும் ஈங்கோயே நம்மேல்
மறுதலைநோய் தீர்ப்பான் மலை.

# கற்பக விநாயகர் கோயிலும் வ. கந்தசாமி அவர்களின் தொண்டும்

செ. சுப்பிரமணியம் *J.P*
தலைவர்,
சாந்தையர்மடம் கற்பக விநாயகர் கோவில்,
தர்மபரிபாலனசபை.

"என் கடன் பணிசெய்து கிடப்பதே" என்ற அருள்வாக்கை முதன்மைப்படுத்தி அவ் வழியிலே நின்று சைவப்பணி செய்து வருபவர் சைவப்புலவர் வல்லிபுரம் கந்தசாமி என்றால் அது மிகையாகாது. அவர் ஆற்றும் சைவப்பணியினைப் பாராட்டி எடுக்கப்படும் சேவைநலம் பாராட்டுவிழா மிகப்பொருத்தமானதாகும்.

அவர் தனது உயர் கல்வியை யாழ்ப்பாணத்து ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சைவப் பிரகாச வித்தியாசாலையில் பயின்றார். வித்வான் ந. சுப்பையபிள்ளை, பிரம்மஸ்ரீ ஆத்மநாதசர்மா முதலிய ஆசான்களிடம் தனது கல்வியை நிறைவுசெய்து சைவப் புலவரானார்.

அந்தக் காலகட்டத்தில் நாவலர் பாடசாலையின் அருகிலிருக்கும் சாந்தையர் மடம் கற்பகவிநாயகர் கோவிலிற்கு பாடசாலை மாணவர்களை வரச்செய்து வெள்ளிக்கிழமைகள் தோறும் மாலையில் கூட்டுப்பிரார்த்தனை செய்து, மாணவர்களுக்கு பிரசாதம் வழங்கி சமயக் கிரியைகளை ஊக்குவித்தார். அத்துடன் சிறைச்சாலைகளுக்கு ஞாயிறு தினங்களில் விஜயம் செய்து அங்கும் கைதிகளுக்கு உபன்னியாசங்கள் செய்து வந்தார்.

இவரது பணிகளைக் கண்ணுற்ற கோவில் தர்மபரிபாலன சபையினர் சபையின் செயலாளராக நியமித்தனர். அன்று முதல் இக்கோவிலின் நித்திய, நைமித்திய, காமிய கிரியைகளையும் முறைப்படி செய்வித்து சபையின் நிர்வாகத்திற்கு உறுதுணையாக செயற்படுகின்றார். இக்கோவிலில் கும்பாபிஷேகங்களை மூன்றுமுறை செய்வித்த பெருமை அவரையே சாரும்.

இங்கு கோவிலில் எல்லோரும் கந்தசாமி மாஸ்டர் என்று அன்பாக அழைப்பார்கள். வெளி மாகாணங்களில் இவர் கடமைபுரியும் போதும் கோவில் தேவைகளை குறைவின்றிச் செய்துவந்தார். இவர் இப்பணிகளைச் செய்வதற்கு இவரது மனைவி, பிள்ளைகள் உறுதுணையாக இருந்து வந்தனர்.

1965 ஆண்டு இவரினால் ஆரம்பிக்கப்பட்ட சைவசமய அபிவிருத்திக் கழகம் சைவப் பணிகள் செய்வதற்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்து வந்தார். கழகத்தின் பலபணிகளில் முக்கிய இடம் வகிப்பது சைவசமய அறிவுப் பரீட்சை. பரீட்சையில் பல மாவட்ட

மாணவர்களை இணையச்செய்து சித்தி யெய்திய மாணவர்களுக்கு தங்கப்பரிசு, வெள்ளிப்பரிசு இன்னும்பல பெறுமதி வாய்ந்த பரிசில்களை வழங்க வழிசெய் திருக்கிறார்.

இக்கழகத்திலே இவர்செய்யும் பரீட்சை முறைகளைக் கண்ணுற்ற சைவ பரிபாலன சபையினர் இவரை தமது பரீட்சை செயலராக ஆக்கிக்கொண்டனர். இவரது சைவப்பணியை வேறுபல கோவில் களும், சனசமூக நிலையங்களும் பெற்றனர், பெறுகின்றனர்.

எமது கோவிலில் கிரியைகள் சிறப்புற நடைபெறவும், இன்னும் எதிர்காலத்தில் ஒழுங்காகத் தொடரவும் வழிவகை செய் துள்ளார். கோவில் உடமைகள், உரிமைகள் முதலியவற்றை ஆவணப்படுத்தியுள்ளார்.

அவர் பணிதொடர அவருக்கு நீண்ட ஆயுளையும், ஆரோக்கியமான தேகத்தையும் கொடுக்கும் வண்ணம் எல்லாம் வல்ல கற்பக விநாயகரை வேண்டிநிற்கின்றேன்

## பவளந் தழுவிய திருமுறைப்பாடல்

### தேவாரம்

**பண் - பழந்தக்கராகம்** **தலம் - திருத்தோணிபுரம்**

சிறையாரும் மடக்கிளியே இங்கேவா தேனொடுபால்
முறையாலே உணத்தருவன் மெய்பவளத் தொடுதரளம்
துறையாரும் கடல்தோணி புரத்தீசன் துளங்கும்இளம்
பிறையாளன் திருநாமம் எனக்கொருக்கால் பேசாயே.

உ
சிவமயம்

# சைவபரிபாலனசபையும் சைவப்புலவர் வ.கந்தசாமி அவர்களும்

மு. திருஞானசம்பந்தபிள்ளை
கௌரவ செயலாளர்.
சைவபரிபாலனசபை,
யாழ்ப்பாணம்.

யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபை 1888 ம் ஆண்டு அன்றைய சைவப்பெரியார்கள் பலர் சேர்ந்து சமயப்பணிகள் செய்வதை நோக்கமாகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட நிறுவனமாகும்.

கடந்த நூற்றுப் பதினாறு வருடங்களாக இச்சபையின் மதிப்பார்ந்த உத்தியோகத்தர்களாகச் சைவப்பெரியார்கள் பலர் தலைவர்களாக, செயலாளர்களாக, பொருளாளர்களாக, சமயப்பிரசாரகர்களாக பரீட்சைச் செயலாளர்களாக கடமையாற்றிச் சபையின் உயர்நோக்கங்களைச் செவ்வனே நிறைவேற்றிச் சபையைப் போற்றத்தக்க வகையில் பணியாற்றிச் சென்றுள்ளனர்.

தற்போது சைவபரிபாலன சபைத் தலைவராக 2003 ம் ஆண்டு தெரிவு செய்யப்பெற்ற சைவப்புலவர் திரு. வ. கந்தசாமி அவர்கள் இச்சபையில் கடந்த ஐம்பது வருடங்களுக்கு மேலாக இணைந்து சபைப் பணிகளில் தம்மை முழு அர்ப்பணிப்புடன் ஈடுபடுத்தி வருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

சபையின் ஆயுள் அங்கத்தவராக 1953 ம் ஆண்டில் சேர்ந்த இப்பெரியார் ஆரம்பத்தில் சமயப்பிரசாரக் குழுவிலும், நூலகம், நூல்வெளியீட்டுக் குழுவிலும், பரீட்சைக்குழுவிலும் உறுப்பினராய் இருந்து பணியாற்றி நிர்வாக உறுப்பினருக்கு மேலான அனுபவங்களைப் பெற்றார்.

மூத்த உறுப்பினர்களுடைய பாராட்டையும், அபிமானத்தையும், நம்பிக்கையையும் பெற்ற இவர் சபையின் பரீட்சைச் செயலாளராக 1978 ம் ஆண்டில் பொறுப்பேற்றார்.

பல ஆண்டுகளாக பாடசாலை மாணவர்களுக்காகச் சபை நடத்திவந்த சைவசமய பாடப்பரீட்சை, இவருடைய முயற்சியினால் வருடாவருடம் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர் தொகையில் அதிகரிப்பினையும், பாடசாலைச் சமுகத்தின் பேராதரவையும், உயர்ந்த மதிப்பினையும் சபைக்குத் தேடிக் கொடுத்துள்ளது.

இவ்வகையில் கடந்த ஆண்டில் இலங்கையின் பலமாவட்டங்களில் இருந்து எண்பத்தையாயிரத்துக்கு மேற்பட்ட மாணவர்கள் சைவநெறித் தேர்வுக்குத் தோற்றினர் என்பது அறியத்தக்கது.

பாடசாலை மாணவருக்கு மாத்திரமன்றி வயது வந்தவர்களும் சைவசமய உயர் அறிவு பெற்றிருக்க வேண்டுமென்ற நோக்குடன் சைவசித்தாந்த பாலபண்டித, பண்டிதர் பரீட்சைகளையும் நடத்த ஆரம்பித்தமையும் இவருடைய காலப்பகுதியே.

புண்ணியநாச்சியம்மையார் தினம், நாவலர் குருபூசைத்தினம் என்பவற்றை முன்னிட்டு முறையே பண்ணிசைப் போட்டியையும், பேச்சு, கட்டுரைப் போட்டி களையும் நடத்தி முதல் மூவிடங்களுக் கும் தங்கம், வெள்ளி, வெண்கலப் பதக் கங்களைப் பரிசாக வழங்குவதற்கு கால் கோள் இடப்பட்டதும் இவரது முயற்சி யாலேயே. இவ்வொழுங்கு இற்றைவரை நடைபெற்றுவருவதும் குறிப்பிடப்பட வேண்டியது.

பாடசாலைகளில் சைவசமய பாடங் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கும் வலய ரீதி யாக சமய பாட சேவைக்காலப் பயிற் சியை வழங்க நெறிப்படுத்தியமையும் இவரின் பணிகளில் ஒன்றே.

கிடைத்தற்கரிய சைவசமய நூல் களைச் சபையின் வெளியீடாக அறிமுகப் படுத்தும் பணிக்குப் பொறுப்பாக அமைந் திருப்பதும் இவர் செயலாளராகவிருக்கும் பரீட்சைப்பகுதி நிதி வளமே.

இப்பெரியார் சபையின் பிரதிநிதியா கப் பல நிறுவனங்களிலும் சமூகநலப் பணி களிலும் ஈடுபட்டு அனுபவம் பெற்றவர். முன்னாட்களில் கோட்டையில் இருந்த சிறைச்சாலைக்கும், கோப்பாய் திறந்த வெளிச்சிறைச்சாலைக்கும் சென்று சிறை யில் இருந்தவர்களுக்கு நற்போதனை, நல்வழி காட்டலை பல ஆண்டுகள் செய் தவர்.

1995 ம் ஆண்டில் யாழ் குடாநாட்டில் ஏற்பட்ட மக்கள் இடப்பெயர்வு சைவபரி பாலனசபையின் செயற்பாட்டினை, சமூகத் தொடர்பாட்டினை முடக்கிவைத்தது. எனி னும் அக்காலத்திலும் பின்னர் தொடர்ந்த இரண்டு மூன்று ஆண்டுகளிலும் திரு. வ. கந்தசாமி அவர்கள் தம்பணியினைத் தனித்து பொறுப்புடன் ஆற்றியதால் சபை தொடர்ந்து முகிழ்த்தெழ அச்சாணியாக இருந்தார் என்பதை அனைவரும் ஏற்றுக் கொள்வர்.

சைவபரிபாலனசபைக்கு ஒப்படைக்கப் பட்ட தருமசாதனங்கள் பலவுள. எனினும் இக்காலகட்டத்தில் அவற்றால் வரும் வருமா னம் குறிப்பிடத்தக்க அளவு இல்லாதபோதி லும், பரீட்சைப்பகுதியால் வரும் நிதிவளம் சபை பல பணிகளை ஆற்ற உதவுவதற்கு இவ ரின் நடவடிக்கைகள் துணை செய்கின்றன.

சைவப்புலவர் திரு. வ.கந்தசாமி அவர்கள் சைவபரிபாலன சபையின் நீண்ட கால மூத்த உறுப்பினராக உள்ளதனால் சபை முன்னோர்களுடைய நோக்கங்களையும், வழி காட்டல்களையும், மரபுகளையும் பிறழவிடாது இற்றைவரை தம்மாலியன்றவரை கடைப் பிடித்து கருமமாற்றி வருவதோடு, இக்காலத் திலும் இனி எதிர்வருங்காலத்திலும் சபை உறுப்பினர்கள், நிர்வாக உத்தியோகத்தர்கள் அனைவரும் செயற்படவேண்டிய ஆலோ சனைகளையும், வழிகாட்டல்களையும் வழங்கி வருகின்றார்.

இப்பெரியாரின் சமயப்பணியை அள விட்டு நன்றி கூறுவது எம்மனோருக்கு எளி தன்று. எனினும் அவர் மேலும் பல் லாண்டுகள் உடல் உளநலத்துடன் மகிழ்வாக வாழ்ந்து, தொடர்ந்தும் சைவசமயத்தவர்க்கும் குறிப்பாகச் சைவபரிபாலன சபையினர்க்கும் மதிப்பார்ந்த ஆலோசனைகளை வழங்க அருள்பாலிக்க வேண்டுமென எல்லாம்வல்ல பார்வதி பரமேசுவரன் திருவடிகளை வாழ்த்தி வணங்குவோமாக.

# சேவைக்கு ஒரு மனிதர் "வ.கந்தசாமி"

அ. சிறிக்குமாரன்
அதிபர்,
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி.

தமிழ்மொழி சைவத்தில் ஊறிக் கிடக்கிறது.

சைவத்தை வளர்ப்பதன் மூலமே தமிழையும் வளர்க்கலாம் என்பதே ஆன்றோர் கருத்து. அதற்கமைய சைவத்தையும் தமிழையும் போற்றி வளர்த்தவரே சைவப்புலவர் கந்தசாமி ஐயா ஆவார்.

தனது வாழ்வில் எழுபத்தைந்தாவது வயதைப் பூர்த்தி செய்யும், ஆசான் அவர்கள் அல்லும் பகலும் சமயத்தை வளர்க்க வேண்டும் என்பதிலே அசையாத ஈடுபாடு கொண்டவராகக் காணப்பட்டார். இதனால் சைவபரிபாலன சபையில் தம்மை இணைத்துக் கொண்டு ஆரம்ப வயது மாணவர்கள் முதல் உயர்தர மாணவர்கள்வரை பயன்பெறும் வகையில் பரீட்சைகளை நடாத்தி மாணவர்களுக்கு சமயத்தில் ஆர்வத்தை ஏற்படுத்தினார்.

கடந்த ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக யாழ்ப்பாணத்திலும் இலங்கையின் எப்பாகத்திலும் சைவபரிபாலன சபையின் பெயர் விளங்குகின்றதென்றால் இவருடைய தன்னலமற்ற சேவையே அதற்கு காரணமாகும்.

ஆசிரிய சேவையில் இருந்து ஓய்வு பெற்ற பின் தன்னை முழுமையாக இப்பணிக்கு இணைத்துக் கொண்டார் சைவசித்தாந்த பண்டிதர் பரீட்சை நடாத்தி, சித்தாந்தம் பற்றிய உண்மைகள் மக்கள் மனதில் இடம்பெற வழிசமைத்தார்.

மாணவர்களிடையே, இயற்கையாக அமைந்துள்ள நுண்ணறிவு சக்தியற்று அமிழ்ந்து போகா வண்ணம் அவற்றிற்கு புத்துயிர் அளிக்கும் வகையில் பண்ணிசைப் போட்டி என்பவற்றை நடாத்தியதுடன் இந்து ஆலயங்கள் பலவற்றிலும் தீட்சை வைப்பதற்கு உந்து சக்தியாக விளங்கினார்.

இளைஞர்களிடையே மதப்பற்றை ஏற்படுத்தும் வழிகளை ஆராய்ந்து வேண்டிய நடவடிக்கைகளை எடுக்கவேண்டிய கடமை நம் எல்லோருடையதாகும். இதனை நாமும் ஐயா வழியில் நின்று செய்யவேண்டும் என வேண்டுகிறேன்.

உ
சிவமயம்

# கைம்மாறு கருதாப் பெரியோன்

சைவப்புலவர்மணி இ. செல்லத்துரை
சைவப்புலவர் சங்கப் போஷகர்

"கல்லால் நிழன்மலை
வில்லார் அருளிய
பொல்லார் இணைமலர்
நல்லார் புனைவரே."

நாவலர் சைவப் பிரகாச வித்தியா சாலை மண்டபத்தில் முன்னொருநாள் நாவலர் அவர்கள் இறுதியாக நிகழ்த்திய இறுதிப் பிரசங்கத்தின் இறுதிப் பகுதி ஒன்றை நினைவு கூர்ந்தேன். அஃது இதுவே -

"நான் உங்களிடத்திலே கைம் மாறு பெறுதலைச் சிறிதும் எண்ணாது, நம் சமயத்தவர்களோடும், புறச்சமயத்தவர் களோடும் பெரும் பகைமையெடுத்து, முப் பத்திரண்டு வருஷ காலமாக உங்களுக் குச் சைவசமயத்தின் உண்மையைப் போதித்து வந்தேன். எனக்குப் பின் சைவ சமயம் குன்றிப்போம் என்று பாதிரிமார்கள் சொல்லுகிறார்கள். ஆதலால், நான் உயி ரோடு இருக்கும் போதே உங்களுக்கு சைவப்பிரசாரகர் ஒருவரைத் தேடிக் கொள் ளுங்கள். இன்னும், என்னைப் போலவே படித்தவர்களும் சன்மார்க்கர்களுமாய் அநேகர் வருவார்கள். ஆனால், உங்களு டைய **'வை' வைக் கேட்டுக் கேட்டு , கைம் மாறு கருதாது, சமயத்தைப் போதிக்க என்னைப் போலவே ஒருவரும் வரார்.'**

இதில், " தகுதியான சைவப்பிரசாரர் பணிக்கு முன்வருவோர் பலராய் இருந்தாலும், சைவ மக்களிடத்திலும் நிந்தனைகளைக் கேட்டுக்கேட்டுக் கொண்டு கைம்மாறு பெறா மலும் பணி செய்ய மாட்டார்கள்" என்ற நாவலர் அவர்களது கருத்து, இன்றைய **'நாட்டு நடப்புகளின்'** இயல்புகளும் செயல்களுமாய் நிகழ்வனவாம்.

இப்பணிக்குச் சென்றவர்களுள் சிலர், வை வைச் சந்திக்கமாட்டாமல் கை விட்டுப் போனதையும், இன்னும் சிலர், கைம்மாறு பெறாததால், செயல்படாமல் இருப்பதையும் கண்டும் கேட்டும் அறிந்திருக்கிறோம்.

ஆனால், நாவலர் அவர்களைப் போல "வை" வைக் கேட்டுக் கேட்டுக் கொண்டும், கைம்மாறு பெறாமலும், சைவத்தின் குறிக் கோள் தளராமலும், மனஉறுதியோடு நின்று, நீண்டகாலமாக நிலைபெற்று, சைவத் துறை யான ஒரு நிறுவனத்தில் மாத்திரமன்று.- அதன் தொடர்பான பல்வேறு நிறுவனங்களி லும் பணியாற்றி, அவற்றின் பிரசாரம் அபிவி ருத்தி முதலான பல்வகை நற்பயன்களையும் தரக்கூடியவராய்த் திகழ்ந்து நிற்பவர் ஒருவர் உளர். அவரே சைவப்புலவர் திரு. வ. கந்த சாமி அவர்கள் தாம். இஃது எனது ஆய்வுக்

கண்டுபிடிப்பின் முடிபு மாத்திரம் அன்று, சைவச் சான்றோர்களான ஆசிரிய - மாணவ மக்களது அன்பு- அநுபவங்களின் முடிபுமாம். இதற்குச் சான்று :- சைவத்தின் ஆபரணமான **"சைவபூஷணமே."**

மேலும், நாவலர் அவர்கள் **'என்னைப் போலவே ஒருவரும் வரார்'** என்று சொன்ன மறைப் பொருளை, - **'அப்படியான ஒருவரே வரவேண்டும்'** என்ற அந்தரங்கத்தை - அதன் ஆராமையான அங்கலாய்ப்பை, - அவற்றின் அபிலாசைகளைக் குறிப்பறிந்துகொண்டு, அவர் பணியே தம் பணியாய்ச் செய்திருந்தும், பரபரப்பின்றிச் சும்மா இருக்கின்றன **'திரு. வ. க'.** அவர்களின் பெருமை, முந்திய பெருமையிலும் பெரிதென்ற முடிபையும் காணலாம்.

இத்தகைய பெருந்தகையாளரான அவர்கள், **'பெரியோரைச் சார்ந்திரு'** என்ற முதுமொழிக்கும் சைவநெறி வாழ்வுக்கும் நிலைபெற்றுக் கலங்கரையாய் நின்று, இவ்விடத்திலும் அவ்விடத்திலும் எவ்விடத்திலும் நற்றொடர்பாகவே நிலவிப் பரவி விளங்கி, ஆவனவான வளங்கள் யாவும் பொலிந்து, பல்லாண்டாக நலமுடன் இன்புற்று வாழும்படி எல்லாம் வல்ல விநாயகப் பெருமானது திருவடிகளைப் பிரார்த்திக்கின்றேன்.

## பவளந் தழுவிய திருமுறைப்பாடல்

### கருவூர்த்தேவர் திருவிசைப்பா

**பவள**மே மகுடம் **பவள**மே திருவாய்
**பவள**மே திருவுடம்(பு) அதனில்
தவளமே களபம் தவளமே புரிநூல்
தவளமே முறுவல் ஆடரவம்
துவளு மேகலையும் துகிலுமே ஒருபால்
துடியிடை இடமருங்(கு) ஒருத்தி
அவளுமே ஆகில் அவரிடங் களந்தை
அணிதிகழ் ஆதித் தேச்சரமே.





உடுவில் இந்து இளைஞர் மன்றம் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் 1.12.2002 இல் நடத்திய நாவலர் விழாவில் யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் பொன் பாலசுந்தரம்பிள்ளை சைவப்புலவர் வ.கந்தசாமிக்கு பொன்னாடை போர்த்தி கௌரவிப்பதை படத்தில் காணலாம்.



நாவலர் மகாவித்தியாலயத்தில் அதிபர் ந.சிவராசா அவர்கள் தலைமையில் நடைபெற்ற ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் நினைவுப் பேருரை பரிசுத்தின விழாவில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்ட சைவப்புலவர் வ. கந்தசாமி அவர்களுக்கு யாழ்.வலயக்கல்விப்பணிப்பாளர் ப. விக்னேஸ்வரன் மலர்மாலை சூட்டிப் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கிறார்.



நல்லையாதீனப் பாராட்டு விழாவில்
"சித்தாந்தவித்தகர்" பட்டம் பெற்றபோது
சுவாமிகளுடன் - 1966



யாழ். சைவபரிபாலன சபையால் நிறுவப்பட்ட
சிதம்பரம் புண்ணியநாச்சி அம்மையார் மடத்தின்
முன்றலில் சைவபரிபாலனசபைத் தலைவர்
சைவப்புலவர் வ.கந்தசாமி அவர்கள்
காட்சி தருகிறார் (2004)



துணைவியாரின் பின்
உடனிருந்து
உறுதுணை புரிந்துவரும்
மருமகள்
பிரியதரிசினியுடன்

உ
சிவமயம்

# தன்னலமற்ற கர்மயோகி

ந. சிவராஜா —(அதிபர்)
ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்
தர்மகர்த்தா சபைச் செயலர்.

**கர்ம யோக மொன்றே - உலகில்**
**காக்கு மென்னும் வேதம்:**
**என்றனுள்ள வெளியில் - ஞானத்**
**திரவி யேற வேண்டும்:**
**நன்றை நாடு மனமும் - நீயெந்**
**நாளு மீதல் வேண்டும்**
**யானெதற்கு மஞ்சேன் - ஆகி**
**எந்த நாளும் வாழ்வேன்.**

கனிவொடு கூடிய தீட்சண்ணியமான பார்வை. பாரதியின் இச் செய்தியைக் கூறிக் கொண்டிருக்கும் மாறாத புன்சிரிப்பு, நுதலில் இலங்கிடும் திருநீற்றுப் பூச்சு, சிறியதான மெலிந்த சிவந்த உருவம் அகவை கூடுதல் என் உடலுக்கேயன்றி, உளத்திற்கல்ல என்பதை உணர்த்தும் உறுதியான உரையாடல், கபடமற்ற வெள்ளை மனதொத்த வெள்ளை வேட்டி, சட்டை. இதுவே எமது சைவப்புலவர் கந்தசாமி ஐயா அவர்கள்.

மதுரை திருஞானசம்பந்தர் ஆதீனத்தினால் **'சிவநெறிச் செம்மல்'** என்றும், சைவ பாதுகாப்புச் சபையினால் **'சிவனடியார் மணி'** என்றும், பிரம்மஸ்ரீ க.வை ஆத்மநாத சர்மா நினைவு விழாக்குழுவினரால் **'சிவ நெறிக்காவலர்** என்றும், அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கத்தினால் **'சைவ பூஷணம்'** என்றும் கௌரவிக்கப்பட்ட சேவையாளராக, சைவத்தமிழ் அறிஞராக, செயல் வீரராக ஐயா விளங்கி வருகின்றார்.

வல்வெட்டித்துறையில் அமைந்துள்ள பொலிகண்டி எனும் கிராமத்தில் கந்தவனக் கடவையைப் பிறப்பிடமாகக் கொண்ட வல்லிபுரம் கந்தசாமி அவர்கள் யாழ் வண்ணை நாவலர் சைவப்பிரகாச வித்தியாசாலையிலும் நாவலர் காவிய பாடசாலையிலும் சைவத்தமிழ் உயர்நிலைக் கல்வியைக் கற்று சைவசித்தாந்தப் பண்டிதர் தேர்விலும் தொடர்ந்து சைவப்புலவர் தேர்விலும் தேறி ஆளுமை விருத்தி பெற்றார்.

நாவலர் சைவப்பிரகாச வித்தியாசாலையில் தனது ஆசிரியப் பணியினை ஆரம்பித்த கந்தசாமி ஐயா அவர்கள் இவ்வித்தியாலத்துடன் ஐம்பது வருட கால தொடர்புள்ளவர். நாவலர் அடியொற்றி வாழ்கின்ற ஐயா அவர்கள் சைவ விழுமியங்கள் ஆழப்பதிந்த ஒழுக்க உணர்வினை நாவலர் மகா வித்தியாலய மாணவர்கட்கு கல்வியுடன் ஊட்ட வேண்டும். ஆறுமுகநாவலர் பெருமான் அவர்கள் விரும்பிய, எதிர்நோக்கிய, குறிக் கோள்களை நிறைவு செய்யும் சமுதாயத்தினை

அமைக்க வேண்டும் என்பதில் தணியாத தாகம் கொண்டவர்.

சைவப்புலவர் கந்தசாமி ஐயாவிடம் கல்வி கற்றோர் சைவ சமய உணர்வும், வழுவிலா தமிழ் இலக்கண அறிவுமுடையோராகத் திகழ்கின்றனர். ஐயா அவர்கள் சைவ பரிபாலன சபையில் ஐம்பத்து இரண்டு வருடங்கள் அயராத சேவையி லீடுபட்டு வருகின்றார். சபை உறுப்பினராக, நிர்வாக சபை உறுப்பினராகத் சைவ நெறித் தேர்வுச் செயலாளராக, உபதலைவராக, மகாநாட்டு அமைப்பாளராக, தலைவராக அவர் ஆற்றிவரும் சேவை போற்றுதற்குரியது.

யாழ் வண்ணை நாவலர் மகா வித்தியாலயத்தின் நாவலர் தர்மகர்த்தா சபையின் மூத்த உறுப்பினராகத் திகழும் சைவப்புலவர் அவர்கள் புகழ், பொருள் எதனையும் பொருட்டெனக் கருதாது தன்னலமற்ற அர்ப்பணிப்பான சேவையினை ஆற்றி வருகின்றார்கள். காலையில் ஆதவன் உதிப்பதை மறந்தாலும் ஐயா அவர்கள் வித்தியாலய வாசலில் நாவலர் பெருமானுக்கு தினந்தோறும் வணக்கம் செலுத்தத் தவறுவதேயில்லை.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமானின் உயரிய நோக்கினைத் தனதாக்கி வித்தியாலய நால்வர் கோவிலில் பூசைகள் குருபூசைகள் ஆகியன ஆசார அனுட்டானங்கள் வழுவாது நடைபெற வேண்டுமென்னும் எண்ணம் கொண்டதன்றி, நடைபெற வேண்டி செயலாற்றியும் வருகின்றார்.

1995 ம் ஆண்டு போர் அனர்த்தத்தினால் சிதைவுற்ற நால்வர் கோவிலை புனருத்தாரணம் செய்து கும்பாபிஷேகம் செய்வதற்கு முன்னின்று உழைத்தவர் கந்தசாமி ஐயா அவர்கள். நாவலர் வித்தியாலய முன்றலில் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமான் அவர்களின் சிலையை நிறுவுவதுடன் நாவலர் பெருமான் நினைவுப் பேருரையினை (நிறுவுநர் நினைவு பேருரையினை) நடாத்த வேண்டும் என விரும்பினார்.

வித்தியாலத்தின் 150 வது ஆண்டு நிறைவு விழாவில் அவரது பேரவா நிறைவேறியது. வித்தியாலய முன்றலில் நாவலர் பெருமான் சிறு மணி மண்டபத்தினுள் அமர்ந்து ஆசி வழங்கி வருகின்றார். நினைவு பேருரை மட்டுமல்லாது புலமைப்பரிசில் வழங்கும் நிகழ்வும் வருடாந்த பரிசளிப்பு நிகழ்வில் சிறப்பாக நடந்தேறி வருகின்றது.

நாவலர் பெருமான் அவர்கள் கல்வி சைவமேம்பாட்டிற்காக ஒருங்கிணைத்த சொத்துக்கள் வீணாகிவிடாது என்றும் பாடசாலை நலனுக்காகப் பேணப்பட வேண்டும் என்பதற்காக 150 வது ஆண்டு விழா மலரில் அவற்றை ஆவணப்படுத்தி தெரியப்படுத்துவதில் கந்தசாமி ஐயா அவர்கள் பெரும் பங்காற்றியுள்ளார்.

**'ஒன்றா உலகத்து உயர்ந்த புகழல்லால்
பொன்றாது நிற்பதொன்று இல்.**

எனும் வள்ளுவப் பெருந்தகையார் கூற்றுக்கிணக்க தருணம் அறிந்து தேவை அறிந்து செயல்புரியும் ஐயா அவர்கள் சமூகத்தினரால் பெரிதும் விரும்பப்படுபவர், போற்றப்படுபவர், எச்செயலையும் நாளையென ஒத்திவைக்கும்

மனப்பாங்கு அற்றவர். தன்னைச் சாந்தவர் களையும் வேண்டிநிற்பவர்களையும் அரவ ணைப்பதிலும் ஆற்றுப்படுத்துவதிலும் நிகரற்றவர். பாடசாலை நிகழ்வுகளில் கந்தசாமி ஐயா அவர்களுடன் இணைந்து செயல்பட்டு வரும் வேளைகளில் தக்க ஆலோசனைகள் வழங்குவதிலும் பொருத் தமான வழிதவறா, வழிகாட்டல்களிலும் மனதைப் பண்படுத்தி ஆறுதலளிப்பதி லும், ஊக்கப்படுத்தி உற்சாக மூட்டுவதி லும், அவரது சிறந்த பெருமை பொருந் திய பண்பிற்கு நான் எத்தனையோ தடவை தலைவணங்கியிருக்கிறேன். அவருடன் சேர்ந்து கடமையாற்றக் கிடைத்த சந்தர்ப்பங் களை நான் பெரும் பேறாகக் கருதுகின்றேன். யாரையும் குறைகூறாத, பொறாமையுணர் வுடன் நோக்காத, அவரது குணவியல்பு அவரை இமயமென உயர்த்தி நிற்கின்றது.

பெருமை சேர் கந்தாமி ஐயா அவர்கள் பளவ விழாவினைக் கொண்டாடும் அகவை அடைந்துள்ளார். மண்ணில் நல்ல வண்ணம் வாழ்ந்து வரும் அன்னார், சிவத்தொண்டினைத் தொடர வேண்டுமென எல்லாம் வல்ல இறைவன் பதம் பணிகின்றேன்.

## பவளந் தழுவிய திருமுறைப்பாடல்

### திருநாவுக்கரசு நாயனார் தேவாரம்

**திருவிருத்தம்**

பவளத் தடவரை போலும் திண்தோள்கள்
அத்தோள் மிசையே
பவளக் குழை தழைத்தா லொக்கும் பல்சடை
அச்சடை மேல்
பவளக் கொழுந்தன்ன பைம்முக நாகம்
அந்நாகத் தொடும்
பவளக் கண் வாலமதியெந்தை சூடும்
பனி மலரே.

உ
சிவமயம்

# "மேன்மை கொள் சைவநீதி உலகமெல்லாம் விளங்க வைத்த தொண்டர்"

**வி. எஸ். இராமநாதர்**
*தலைவர்,*
*ஸ்ரீ பன்றிக்கோட்டுப் பிள்ளையார் கோயில்,*
*தர்மகர்த்தாசபை.*

மேன்மை கொள் சைவ பரம்பரையிலே வடமராட்சியில் உள்ள பொலிகண்டியில் பிறந்த திரு. வல்லிபுரம் கந்தசாமி அவர்கள் தனது 17 வது வயதினிலே, அவ்வூரைவிட்டு யாழ்ப்பாணத்திற்கு வந்தார். ஒரு பண்டிதராக வரவேண்டுமென்ற நோக்கோடு நாவலர் பாடசாலை அருகில் ஒரு வீட்டில் வசித்து வந்தார்.

தனது முயற்சியோடு சிறுபிள்ளை கட்கு கல்வி போதித்து வந்தார். அதைத் தொடர்ந்து நாவலர் பாடசாலையில் ஆசிரியராகக் கடமையாற்றுவதற்கு ஓர் வசதி கிடைத்தது. சமயப்பற்றுள்ள இவர், மிக சிறப்பாக சைவசமய பாடத்தை இப்பாடசாலையில், பக்தி சிரத்தையுடனும், சமயப்பற்றுடனும், ஆன்மிக நோக்குடனும் திறம்பட போதித்து வந்தார்.

நாவலர் பாடசாலை அக்காலத்திலே நாவலர் பரம்பரையிலே வந்த திரு. முத்துக்குமாரு என்பவரால் நடாத்தி வரப் பட்டது.

1960 ம் ஆண்டு அரசாங்கம் தனியார் பாடசாலைகளைக் கையேற்ற சமயத்தில், இப்பாடசாலையைக் கையளிப்பதற்கு திரு முத்துக்குமாரு அவர்கள் விரும்பவில்லை. இதை பெற்றோர் எதிர்த்தனர். பெற்றோர் ஆசிரியர் சங்கம் ஒன்று 1960 ம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்டு அதன் தலைவராக என்னை நியமித்து, பாடசாலையை அரசாங்கத்திடம் ஒப்படைக்க தீர்மானிக்கப்பட்டது. இப்பாடசாலையை களஞ்சியமாகப் பாவிப்பதற்கு சிலர் விரும்பிய போதிலும், ஈற்றில் பெரிய சிரமங்களுக்கிடையில் அருகில் வசித்த திரு. தியாகராஜா அவர்களின் உதவியுடனும் பாடசாலையை அரசாங்கத்திடம் கையளித்தோம்.

திருவாளர் கந்தசாமி அவர்கள் தொடர்ந்தும் இப்பாடசாலையிலேயே கடமையாற்றி வந்தார். அவருடைய விடாமுயற்சியின் பலனாக **'சைவசமயம்'** கற்பித்தல் இப் பாடசாலையில் முதன்மை ஸ்தானம் பெற்றது. அத்துடன் அன்னார் சமய போட்டிப் பரீட்சைகளை உருவாக்கி கொழும்பு விவேகானந்த சபைக்கு ஒப்ப சிறிதளவில் தொடங்கியது. இன்று ஆல விருட்ஷமாக பரந்து வடக்கு கிழக்கு மாகாணங்களில் சைவசமயத்தை வளர்ப்பதில் முதன்மை ஸ்தானம் வகிக்கின்றது. திரு. கந்தசாமி அவர்கள் பரீட்சா காரியதரிசியாக இருந்து ரொம்பவும் திறமையாக செயல்பட்டு வந்தார். பரீட்சையில் சித்தி பெற்றோர்க்கு விலையுயர்ந்த பரிசில்களைக் கொடுப்பதன் மூலம் பரீட்சார்த்திகளை இப் பரீட்சையில் ஆர்வம் கொள்ளவும், ஊக்கமெடுக்கவும் வழிசெய்தார். அதனால் பரீட்சார்த்தி

களின் தொகை வர, வரக் கூடிக்கொண்டே போயிற்று. அத்தோடு தானும் சைவப் புலவர் பரீட்சையில் சித்தி பெற்று. சைவப் புலவர், பாலபண்டிதர், பண்டிதர் வகுப்பு களை இவர் மேற்பார்வையில் திறம்பட நடாத்தி வந்துள்ளார். அன்னாரது அயராத உழைப்பின் காரணமாக பிற சமயத்தவர் ஊடுருவி முன்னேற தடையாக இருந்த காலமும் உள்ளது.

திரு கந்தசாமி அவர்கள் சிறந்த பக்தனும், விநாயக தொண்டனும் ஆவர். சாந்தையர் மடப்பிள்ளையார் கோவில் இவ்வளவு தூரம் முன்னேற பாடுபட்டவர் அவரே ஆவர். ஸ்ரீபன்றிக்கோட்டு பிள்ளையார் கோவிலில் 1972ம் ஆண்டு தொடக்கம் 2004 ம் ஆண்டு வரை கௌரவ காரியதரிசியாகப் பணியாற்றினார். இவ்விரு ஆலயங்களின் முன்னேற்றத்திற்கு அரும் பெரும் பங்கையாற்றியுள்ளார் என்றால் மிகை யாகாது. அவரது இறைபணிக்கு நாங்கள் ரொம்பவும் கடமைப்பட்டுள்ளோம். கௌரவ பட்டங்கள் எல்லாம் அவரைத் தேடி வந்தன. ஆனால் பெருமையை விரும்பாத திரு. கந்த சாமி அவர்கள் தொண்டரடியாராக, சமயத் தில் நாட்டமுடையவராக இறைபணிக்கே தன்னை அர்ப்பணித்தவர்.

அவரது இறைபணி தொடரவும், நோய்நொடியின்றி நூறாண்டு காலமும் வாழ வேண்டுமென எல்லாம்வல்ல சித்தி, புத்தி சமேத விநாயகப்பெருமானை வேண்டி வாழ்த்தி வணங்குகின்றோம்.

## பவளந் தழுவிய திருமுறைப்பாடல்

### திருவிசைப்பா

**பண் : பஞ்சமம்** **தலம் : திருவிடைக்கழி**

பரிந்தசெஞ் சுடரோ பரிதியோ மின்னோ
பவளத்தின் குழவியோ பசும்பொன்
சொரிந்தசிந் தூரமோ தூமணித் திரளோ
சுந்தரத் தரசிது வென்னக்
தெரிந்தவை திகர்வாழ் திருவிடைக் கழியிற்
திருக்குரா நிழற்கீழ் நின்ற
வரிந்தவெஞ் சிலைக்கை மைந்தனை யஞ்சொன்
மையல்கொண் டையுறும் வகையே.

உ
சிவமயம்

# நாவலர் வழி நின்ற சைவநெறிக் காவலன்

இ. விஜயரத்தினம்
தலைவர்,
வண்ணை சாந்தையர்மடம் ஸ்ரீகற்பக விநாயகர் கோவில்,
சைவசமய அபிவிருத்திக்கழகம்.

ஈழத்திருநாட்டின் வடபால் சைவமும் தமிழும் தழைத்துலாவும் யாழ்ப்பாணத்திலே ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமான் விட்டுச் சென்ற அடிச்சுவடுகளில் தன் பாதம் பதித்து முறைப்படி அவரது சமயக் கோட்பாடுகளைப் பின்பற்றி இன்றும் வாழ்ந்து வரும் மிகச் சில சைவ அபிமானிகளில் எமது கந்தசாமி ஐயா அவர்களும் ஒருவராவர்.

வண்ணை நாவலர் பாடசாலையின் முழு வளர்ச்சிக்கும் உறுதுணையாக இருந்து வரும் விநாயக பக்தனாகிய அன்னார் அருகிலுள்ள சாந்தையர்மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் கோவிலிலும், சமய கைங்கரியங்களில் ஈடுபடும்கால் அயலிலுள்ள சைவசமய பிள்ளைகளின் சமய வளர்ச்சி ஊக்கம் பெறுவதற்காக சைவ சமய அபிவிருத்திக் கழகமொன்றை 1954 ம் ஆண்டு உருவாக்கி அதன் அமைப்பாளராக இன்றும் திகழ்கின்றார்.

குருபூசைகள், வீதிபஜனைகள், நூல் நிலையம் ஆகியவற்றில் சிறுவர்களை ஈடுபடுத்திச் சமயக் கோட்பாடுகளை அறியுமாறு செய்தது மட்டுமன்றி முதன்முதலில் சமய பாடப் பரீட்சைகளையும் பரவலாக நடத்திய பெருமை சைவசமய அபிவிருத்திக் கழகத்தின் பரீட்சைச் செயலாளராக இன்றும் கடமையாற்றும் கந்தசாமி ஐயா அவர்களையே சாரும்.

அமைதியோடும் அதேவேளை ஆளுமையோடும் பேசும் அவரது தன்மை பல கல்விமான்களைக் கவர்ந்ததில் வியப்பேதுமில்லை. அவரோடு அளவளாவும் போது அவரது அனுபவ முதிர்ச்சியை எப்பொழுதும் காணமுடியும்.

தமிழ், சைவம், உலகியல், அரசியல் ஆகிய எல்லாத்துறைகளிலும் அவர் ஆழ்ந்த புலமையையும் கல்வி அறிவையையும் கொண்டுள்ளார். எந்தநேரமும் திருநீற்றுக் குறியுடனும் சந்தனப் பொட்டுடனும் திகழும் அவரது வதனம் ஆலயத்துக்கு வரும் அடியார்களைக் கவர்ந்திழுத்து தாமாகவே ஆலயப்பணிகளில் பங்கெடுக்கச் செய்வது நாம் நாளாந்தம் காணும் நிகழ்வுகளாகும்.

யாழ்ப்பாண மண்ணிலே உள்ள சகல ஆலயங்களிலும், சைவ அமைப்புக்களிலும் அவரது கைபடாத இடமேயில்லை எனலாம். தமிழ் நாட்டிலிருந்து சமயப் பெரியார்களை அழைத்து வந்து பெருமைப்படுத்தி எம்மையெல்லாம் அறிமுகப்படுத்தும் அவரது பணிகள்

பாராட்டுக்குரியது. இத்தகைய ஒருவர் இன்று பவளவிழா காண்பது எல்லாம் வல்ல இறைவனின் திருவருள் என்றே கொள்ள வேண்டும். அவரது அறிவுரைகளை நாம் பெற்று சைவநெறி தழைத்தோங்க எம்மால் ஆனவற்றைச் செய்வதே நாம் அவரோடு இணங்கியிருத்தலின் வெளிப்பாடாகும்.

கந்தசாமி ஐயா அவர்கள் மேலும் எம்மண்ணிலும், பிறதேசங்களில் வாழ்கின்ற எம்மவர்களுக்கும் மேலும் சகல வழிகளிலும் சைவக் கோட்பாடுகளை உணரச் செய்து நல்வழிப்படுத்துவதோடு மட்டுமன்றித் தனது மக்கள், மருமக்கள், பேரக்குழந்தைகளுடன் இணைந்து பலகாலம் நீடுழி வாழ எல்லாம் வல்ல கற்பக விநாயகர் பேரருள் புரிவாராக.

## பவளந் தழுவிய திருமுறைப்பாடல்

### திருநாவுக்கரசு நாயனார் தேவாரம்

**பண் - திருவிருத்தம்** **தலம் - கோயில்**

குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயில்
குமிண் சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போல் மேனியில்
பால் வெண்ணீறும்
இனித்தம் உடைய எடுத்த பொற்பாதமும்
காணப் பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவதே
இந்த மாநிலத்தே.

உ
சிவமயம்

# தொண்டிலே மகிழ்ச்சி காணும் தூயவர் கந்தசாமி

க. கனகசிங்கம்,
முதல்வர்,
யா/ பெரியபுலம் ம. வி
யாழ்ப்பாணம்.

எலுமிச்சங்கனி போன்ற நிறம். இலங்குகின்ற நெற்றியிலே திருநீறு. இளநகை சிந்துகின்ற முகம். கழுத்திலே உருத்திராட்ச மாலை. மென்மையாக உரையாடும் இயல்பு. இல்லறத்தை நல்லறமாய் நடத்திய மனிதன். காவியுடை அணியாத துறவி. பணி செய்வதிலே ஆழ்ந்த கவனம். **'சிறியன சிந்தியாத'** உள்ளம். சிறிய மதிவண்டியில் ஓடிப் பெரிய செயல்களை முடிக்கும் திறன்.

யார் இவர்? இவற்றுக்கெல்லாம் யார் உரிமையாளர்? இவர்தாம் பவள விழாக் கண்டும் பணிவுடன் பணி செய்யும் சிவச்செம்மல் வல்லிபுரம் கந்தசாமி அவர்கள்.

யா / பெரியபுலம் மகா வித்தியாலயத்திலே திரு. வ. கந்தசாமி அவர்கள் 1974.01.15 - 1991.01.17 வரை - தனது அறுபதாவது அகவையில் ஓய்வு பெறும் வரை பணியாற்றினார். யாழ்ப்பாணத்துக்கு மாற்றலாகி வந்தபோது இவர் பணியாற்ற விரும்பியது நாவலர் மகா வித்தியாலத்திலே, ஆனால் அப்போதைய கல்விப் பணிப்பாளர் திரு. மாணிக்கவாசகர் நாவலரிலே சைவம்வளரும், நீர் பெரியபுலத்திலே சைவம் வளரும்" எனக்கூறி அனுப்பி வைத்தார்.

மெ. மி. த. க பாடசாலை என அழைக்கப்பட்ட பள்ளியே இன்று யா/ பெரியபுலம் மகா வித்தியாலயம் என அழைக்கப்படுகின்றது. கிறிஸ்தவ நெறியைப் பின்பற்றுகின்றவர்களே இப்பள்ளியில் முதல்வர் பணியாற்றுவது வழமை. திரு. குணரத்தினம் பள்ளி முதல்வர் பணியாற்றியபோது தான் திரு. கந்தசாமி - சைவப்புலவர் கந்தசாமி வந்து சேர்ந்தார். நல்லாசிரியராகவும் நல்ல சிவத்தொண்டராகவும் விளங்கிய இளைஞன். கந்தசாமி தனது பண்பினாலும், பழகும் தன்மையினாலும் பள்ளி முதல்வர், ஆசிரியர், அயலவர் ஆகியோரின் அன்புக்கும், மதிப்புக்கும் உரியவரானர்.

பள்ளி மாணாக்கர் வெளியிலே - முற்றத்திலே படங்கள் வைத்து வழிபாடு செய்ததைக் கண்ணுற்ற இவர் "மில்க்வைற்" உரிமையாளர் கலாநிதி கனகராசா அவர்களின் உதவி கொண்டு பள்ளி மண்டபத்திலே சிறிய கோவில் அமைப்பித்தார். இன்றும் அக்கோவிலிலே தான் மாணாக்கர் வழிபாடு ஆற்றுகின்றனர்.

தரம் 10, 11, வகுப்புகளுக்கு தமிழ், சைவம் ஆகிய இரண்டு பாடங்களையும் கற்பித்தார். மாணாக்கர் சிறந்த பெறுபேறுகளை

இப்பாடங்களிலே பெற்றனர். க.பொ.த உயர்தர வகுப்பிலே இந்துநாகரிக பாடத்தைத் திறம்படக் கற்பித்து யாழ்ப்பாண மாவட்டத்திலே மிகச்சிறந்த பெறுபேறுகளைப் பெறுவதற்கு உதவினார்.

யாழ். பெரியபுலம் மகா வித்தியாலயத்திலே 18 ஆண்டுகள் கற்பித்த இவர் 18 ஆண்டுகள் பள்ளியின் அயலில் உள்ள காமாட்சி சனசமூக நிலையத்தின் சைவ நெறித் தேர்வாளராகப் பணியாற்றி உதவினார்.

திரு.குணரத்தினம், திரு. கிருஸ்ண பிள்ளை திரு. வே. சி. சிவபாலசிங்கம், திரு. கு. உதயகுமார், திரு. க. கனகசிங்கம் ஆகிய முதல்வர்களுடன் இவர் இணைந்து பணியாற்றினார். திரு. குணரத்தினம் முதல்வராப் பணியாற்றிய போது பிரிவுத் தலைவராகப் பணியாற்றிய இவர் திரு.கு. உதயகுமார் முதல்வராக இருந்த போது துணைமுதல்வராக நியமிக்கப் பட்டார். இக் கட்டுரையாளர் முதல்வராகப் பணியாற்றிய போது இவர் துணை முதல்வராக இருந்து முதல் தடவையாக முதல்வர் பணியேற்றிருந்த கட்டுரையாளருக்கு பணிகள் அனைத்திலும் கைகொடுத்துத் துணையாக நின்று உதவினார். வாய்மையும் பணியிலே பற்றும், விடாமுயற்சியும், நேர்மையும் தொண்டு மனப்பாங்கும் கொண்டிலங்கிய திரு. கந்தசாமி அவர்களின் தன்னலமற்ற பணி கட்டுரையாளரின் முதல்வர் பணியினை மேன்மைப்படுத்தியது. இவரது பட்டறிவும் படிப்பும் பண்புசார் நடத்தைகளும் பெரியபுலம் மகா வித்தியாலயத்தை மேம்பாடடைய வைத்தது என்பது வெறும் புகழ்ச்சியான சொற்கள் அல்ல.

உள்ளத்தால் பொய்யாது ஒழுகும் திரு. வ. கந்தசாமி அவர்கள் பவளவிழாக் காண்பதுடன் நூற்றாண்டு விழா காணும் வரை வாழ்ந்து தொண்டாற்ற வேண்டுமென யாழ். பெரியபுலம் பள்ளிக் குழுமத்தின் சார்பில் வாழ்த்துகின்றேன்.

வாழ்க நூற்றாண்டு!
வளர்க நின் தொண்டு.

## பவளந் தழுவிய திருமுறைப்பாடல்

### திருவாசகம்

மாடு நகைவாள் நிலாவெறிப்ப
வாய்திறந்து அம்பவளந் துடிப்பப்
பாடுமின் நந்தம்மை ஆண்டவாறும்
பணிகொண்ட வண்ணமும் பாடிப்பாடித்
தேடுமின் எம்பெருமானைத் தேடிச்
சித்தங் களிப்பத் திகைத்துத்தேறி
ஆடுமின் அம்பலத்து ஆடினானுக்கு
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே.

உ
சிவமயம்

# 'சமயி' யாக வாழ்ந்துவரும் புலமையாளர்

பண்டிதர் ம. ந. கடம்பேசுவரன்
செயலாளர்,
ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச்சங்கம்

சமயியாகத் தன்னை உயர்த்தியவர். ஏனையோரும் சமயியாக உயர ஆற்றுப்படை செய்தவர். ஆற்றுப்படைசெய்தும் வருபவர். ஒழுக்கத்தோடு சான்றாண்மையோடு வாழ்ந்து காட்டியும் வருபவரே எங்கள் சைவப்பெரியார் வ. கந்தசாமி அவர்கள்.

**'குற்றம் இலனாய்க் குடிசெய்து**
**வாழ்வானைச்**
**சுற்றமாய்ச் சுற்றும் உலகு'**

என்றாங்கு, அறநெறிகளைத் தழுவிக் கொண்டு பலரைச் சுற்றமாக ஈர்த்தும்-ஈர்த்துக்கொண்டும் இருப்பவர். அதனால், எம்மோடு அன்பறாச் சுற்றமாக அமைந்தவர். வட்டுக்கோட்டைத் தொகுதித் தமிழ்ச் சங்கப் பணிமனைக்கான அடிக்கல் நாட்டுவிழாவின் போது உரையாற்றி, எம்மைப் பிணித்தவர். அந்தக் கால் கோள்விழா இவரது உறவை நீடிக்கச் செய்தது. தொடர்புகள் வளர்ந்தன.

வட்டுக்கோட்டைத் தொகுதித் தமிழ்ச் சங்க வகுப்புக்களில் ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கப் பரீட்சைகளுக்காகப் படித்துக் கொண்டிருந்த மாணவர் சைவப்புலவர் பரீட்சைக்குத் தோற்ற வழிசெய்தவர். சைவப்புலவராகத் தேறிய மாணவர் சிலர் ஆ. தி. பா. வி சங்கப் பால பண்டித பரீட்சைக்குத் தோற்றவும் வழிசெய்தவர். இவ்வாறு சங்கங்களின் பாலமாகவும் இணைப்பாளராகவும் இருந்தவர். யாழ் மண்ணின் மூத்த அமைப்புக்கள் யாவும், ஏன் இலங்கையில் உள்ள தமிழ், சமய நிறுவனங்கள் யாவும் தம்முள் ஓர் இணைப்பை ஏற்படுத்திக்கொள்ள வேண்டுமென்ற என் உணர்வுகளோடு ஒன்றியவர். - இத்தகைய கனவுகள் நனவாகும் நாள் எந்நாளோ!

பிறர்க்குத் துன்பம் நினையாமல் வாழ்வாங்கு வாழ்வோரே சமயங்காப்போர். தம் வாழ்வு முறையால் உறவுகளைப் பெற்ற போதும் ஒருவரது முதுமைக் காலத்தில் அவை உதவுமா?

அல்லல் மிகுந்த இவ்வுலக வாழ்க்கையில் உடலோம்பும் முயற்சியினால் அவ்வப் போது நிலை தளர்ந்து போகும் மானிடர் தம்தம் கருத்துக்களிலே கருமங்களிலே கண்ணாயிருப்பரன்றோ! பயன் செய்து பெரும்பாலும் விலகிவிடும் சாமானிய உலகினரின் இயல்பான சில தன்மைகளை நன்குணர்ந்த இரத்த நல்லுறவுகள் உடல் தளர்வடையக் கூடிய முதுமையைப் பெற்ற அன்பானவரைத் தனித்து வாழ அநுமதிக்குமா? அதனால், இலங்கையில் தனித்து வாழ அநுமதிக்காமல், பிள்ளைகள் தம்மோடிருக்க

அழைக்கின்றனர் போலும். அது நலமானது தானே!

உண்மைச் சேவையாளர், மானிட நேயங்கொண்டோர் தன் நாட்டிலிருந்து தான் தொண்டாற்ற வேண்டுமென்பதில்லை. இப்புலமையாளர் தன் நாட்டில் நிறைவாகப் பல தொண்டுகள் புரிந்தவர். அவைபற்றி விபரிக்க வேண்டியதில்லை - சைவஉலகு நன்கறிந்ததொன்றன்றோ!

இத்தகைய இவரது சேவையுள்ளம் சைவ உலகைக் காண்பதிலும் சைவமரபினைப் பேணுவதிலும் நாட்டங் கொண்டுழைத்ததில் வியப்பேதுமில்லை. ஆகையினாலேதான், நாடு தழுவி இவரது சேவை விரிந்து நின்றது. இவரது சமயப்பணி தொடரட்டும்.

இவ்வாறான இவரது சேவையுள்ளத்தினையும் பணிகளையும் போற்றும் நாம் இவரது அகவையைப் பணியைக் கருத்துள்ளிருத்தி பவளவிழாவைக் காண்கின்றோம். சேவையுள்ளம் படைத்தோர் நலமாக வாழ்வர் என்பதற்கு இப்பெரியார் ஓரெடுத்துக்காட்டு. மனநலம் நன்குடைய பெரியாராதலால் உடல் நலத்துடன் விளங்கும் இப்புலமையாளர் பல்லாண்டு காலம் வாழ்ந்து தொண்டுகளாற்ற இயற்கையன்னை இனிய துணையாக உதவுவாளாக!

வாழ்க இனிதே.

## பவளந் தழுவிய திருமுறைப்பாடல்

### திருநாவுக்கரசு நாயனார் தேவாரம்

பண் - பழந்தக்கராகம் தலம் - திருவையாறு

செம்பவளத் திருவுருவர்
திகழ்சோதி குழைத்காதர்
கொம்பமருங் கொடிமருங்குல்
கோல்வளையாள் ஒருபாகர்
வம்பவிழும் மலர்க்கொன்றை
வளர்சடைமேல் வைத்துகந்த
அம்பவள ஐயாறர்க்கு
ஆளாய்நான் உய்ந்தேனே.

உ
சிவமயம்

# சாந்தமே உருவான சாதனை வீரர்

ஸ்ரீ காமாட்சி சனசமூகநிலைய நிர்வாகத்தினர்.

நெற்றியில் திருநீறு துலங்க, கண்களில் சாந்தம் விளங்க, முகத்திலே காந்தம் இழுக்க அமைதியே உருவாகத் தோற்றம் அளிப்பவர்தான் சைவ பூஷணம் வ.கந்தசாமி அவர்கள்.

எப்போதும் சிரித்த முகத்துடன் காட்சியளிக்கும் சாந்தமே உருவான சாதனை வீரர் இவர். சைவத்தையும் தமிழையும் வளர்க்கும் நோக்கில் அதற்காகவே தன்னை அர்ப்பணித்த பெருமை இவரையே சாரும். சிறுவர் முதல் பெரியார்வரை இவரை அறியாதார் இல்லையென்று சொல்லுமளவுக்கு, சமய சம்பந்தமான இடங்களில் இவரை நிச்சயம் காணலாம்.

பாடசாலை மாணவர்கள் பலர் இவரால் உயர்நிலையை அடைந்துள்ளனர். பள்ளியில் பயிற்றுவிக்கும் ஆசிரியராக இருந்த காலத்தில், மாணவர்கள் விளங்கிக் கொள்ளக்கூடிய வகையில் பாடங்களைச் சொல்லிக் கொடுப்பதில் இவருக்கு நிகர் இவரே. எங்கெல்லாம் சமய நிகழ்வுகள் நடைபெறுகின்றனவோ அங்கெல்லாம் இவரது சொற்பொழிவு நிகழும். சைவப்பழமாகத் தோற்றமளிக்கும் கந்தசாமி ஐயா அவர்கள் சைவ பரிபாலன சபைத் தேர்வுச் செயலாளராக இருந்து ஆற்றிய தொண்டுகள் அளப்பரியன. பரீட்சைக்கு நாள் வைத்தது முதல் பரீட்சை நடைபெறும் நாள்வரை இவரது பணி தொடர்ந்து கொண்டே இருக்கும்.

எமது நிலையம் நடத்துகின்ற சமய அறிவுப் போட்டிக்கான வினாப்பத்திரங்களைத் தயார் செய்வதோடு மட்டுமன்றி விடைத் தாள்களைப் பரிசீலித்துப் புள்ளியிட்டு பரிசுக்குரியவர்களைத் தேர்ந்தெடுத்து மற்றும் தேவைப் படுகின்ற உதவிகளையெல்லாம் செய்து பணியாற்றியதை நாங்கள் மறக்கமுடியாது. இவருக்கு விழாவெடுப்பதையறிந்து நாம் மட்டிலாமகிழ்ச்சி அடைகின்றோம்.

சைவத்தின் மேன்மையை உணர்த்தி, அதன் அருமையை நாடெங்கும் பரப்பி, எல்லோர் உள்ளங்களிலும் நீங்கா இடம்பெற்று விட்ட கந்தசாமிஐயா எமக்குக் கிடைத்தது நாம் செய்த அருந்தவப் பயனாகும்.

சைவத்தின் காவலனாகத் திகழ்ந்த இவர் ஆலய மகாகும்பாபிஷேகங்களிலும் மற்றும் மஹோற்சவ காலங்களிலும் தன்னாலான சேவையைத் தயங்காமல் செய்துவிட்டு இலைமறைகாயாக இருந்து விடுவார். இது இவரது தனிப்பண்பு.

எமது சனசமூக நிலைய சமய சம்பந்தமான நிகழ்வுகளில் எமக்கு என்ன விதத்தில் தேவையோ அந்த விதத்தில் வியக்கத்தக்க அளவில் உதவிகளைச் செய்வதில்

முகங்கோணாமல் முன்னின்றுழைத்தவர் கந்தசாமி ஐயா அவர்கள்.

எங்களுக்கு உரியமுறையில் உதவிகளைச் செய்து தமது உடல் நிலையையும் பாராமல் உரியநேரத்தில் அவற்றை எம்மிடம் ஒப்படைத்து எமது நிலையச் சேவைக்குப் பங்கம் ஏற்படாத வகையில் எமக்குதவிய பாங்கு பாராட்டப்பட வேண்டியதே. அந்த நேரத்தில் எப்படியான உதவி என்றாலும் அது சமயம் சம்பந்தமாக இருப்பதனால் கட்டாயமாக உதவுவார் என்ற எமது நம்பிக்கையை அவர் உரமூட்டி மலரச் செய்தார் என்று கூறின் சாலப்பொருந்தும்.

மனிதப்பிறவி எடுத்ததன் மாண்பினை அறிந்து செயற்பட்ட கந்தசாமி ஐயா ஒரு செயல் வீரர். ஏனெனில் இளம் சமுதாயத்தினர் பலர் இன்று நெற்றியில் திருநீறு துலங்க வலம் வருகின்றார்கள் என்றால் அது இவராலேயே தான்.

எப்போதும் புன்சிரிப்புத் தவழும் முகத்தினராய் வலம் வரும் திரு. வல்லிபுரம் கந்தசாமி ஐயா எமக்கு ஒரு நல்ல வழிகாட்டியாவார். சைவசமயக் கோட்பாடுகளையும் சமய சம்பிரதாயங்களையும் அருகிவிடாது காப்பாற்றிய பெருமை இவருக்கு உரியதாகும்.

மாணவ சமுதாயம் இவருக்கு நன்றிக்கடன் பட்டிருப்பது போல எமது காமாக்ஷி சனசமூக நிலையமும் இவருக்கு நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறது.

ஆகவே,

சைவத்தின் பிறப்பிடமாகவும் பக்தியின், பண்பின், பாசத்தின் உறைவிடமாகவும் திகழ்ந்து வருகின்ற கந்தசாமி ஐயா அவர்கள் இன்னும் பல்லாண்டு காலம் வாழ்ந்து சைவத்துக்குச் சேவைபுரிய வேண்டும் என்றும் -

அவர் நோயின்றி நீண்ட ஆயுளோடு வாழ்ந்து எதிர்காலத்தில் பல நற்பிரஜைகள் உருவாக வழிசமைக்க வேண்டும் என்றும் -

அவரது அயராத உழைப்பும் சலியாத மனமும் உரமான நினைப்பும் மேன்மேலும் வளர்ந்து நல்ல பல பணிகளை நமக்கும் நாட்டுக்கும் நல்க வேண்டும் என்றும் -

இத்தனையையும் இவர் வளமாக வாழ்ந்து நிறைவேற்றுவதற்கு எல்லாம் வல்ல விநாயகப் பெருமானதும் உலோகமாதாவான எமது அன்னை வண்ணை ஸ்ரீ காமாக்ஷி அம்பிகையினதும் கமலமலர்ப் பாதாரவிந்தங்களைப் பணிந்து போற்றுகின்றோம்.

வாழ்த்த வாயும் நினைக்க மட நெஞ்சும் தாழ்த்தச் சென்னியும் தந்த தலைவனாம் சிவபெருமானையும் உமையையும் வணங்கி வாழ்த்தி இறைஞ்சுகின்றோம்.

## மனமார வாழ்த்துகின்றோம்

கன்னிய வாழ்வு வாழும் காருண்ய சீலரே
காலமெல்லாம் பணிசெய்த கர்ம வீரரே
புண்ணிய உலகிலே புகழ்பெற்ற தலைவரே
பூத்துக் குலுங்கும் குடும்பமே குதூகலித்து
மண்ணிலே என்றுமே மாண்புடன் வாழவே
மனமார வாழ்த்துகின்றோம் மகிழ்ச்சியுடனே
எண்ணிய கருமத்தை எளிதாய் முடித்திடும்
ஏற்றமிகு கந்தசாமி ஏந்தலே நீடுவாழ்க!

உ
சிவமயம்

# பணிதனுக்கணிசெயும் ஒரு மணி

இராசையா குகதாசன்
பவளவிழாச் செயலர்.

நல்லைநகர் நாவலர் தமது சமயப் பணிகளை முன்னெடுக்க வண்ணார்பண்ணைப் பகுதியையே தளமாகக் கொண்டு செயற்பட்டார். இதே வண்ணைப் பகுதியின் சூழலில், அழகிய புன்முறுவல் பூத்த சிவந்த திருமுகம். நீறணிந்த நெற்றி, விபூதி உருத்திராக்கம் அணிந்த மேனிப் பொலிவு. தள்ளாத வயதின் மென்நடை. கையில் ஒரு பை. இத்தியாதி கோலத்துடன் நடமாடும் ஓர் புண்ணியாத்மாதான் சைவப் புலவர் வல்லிபுரம் கந்தசாமி ஐயா அவர்கள்.

அறிவிலும், ஆற்றலிலும் தாமே வல்லவர் என்று மேல்நாட்டு மக்கள் தாம் கண்டுபிடித்த பௌதீகப் பொருட்கள் மூலம் அன்பு நெறியின் அடிநாதத்தையே சிதைத்து, அறவாழ்வைப் புதைத்து, வன்நெறியே நன்நெறியாமென்று காட்டி வரும் இந்நவீன காலத்தில், மக்கள் நலமுடன் வாழ, நீடுலகில் நிறைந்த இன்பசுகங்களைக் காண அன்பே சிவமென்று பேணும் அன்புசால் நெறியைப்பரப்பும் ஆன்மீகவாதிகளின் தேவையை உணர்ந்தவர்.

சைவமெனும் நற்பயிரை புறச்சமயம் அழிக்காது பாதுகாத்த நாவலர் பெருமானின் நோக்கங்களுக்கு அமைவாக சைவசமய வளர்ச்சிக்குப் பாடுபட்டவர். சமயதீட்சை, பண்ணிசைவகுப்பு சைவசமய போதனை, சமயப்பரீட்சை, கூட்டுப் பிரார்த்தனை, நால்வர் குருபூசை, புராணப் படிப்பு, ஆலய உற்சவங்களை நெறிப்படுத்தல், புத்தகப்பதிப்புக்கள், நூலகம் அமைத்தல், புத்தகம் பேணல், சொற்பொழிவு, சமய பாடம் போதிக்கும் ஆசிரியர்கட்கான கருத்தரங்குகள், மாணவர்க்கான கருத்தரங்குகள் போன்ற செயற்பாடுகளினால் இளந்தலைமுறையினருக்குச் சைவசமய விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தியவர்.

தென்னிந்திய ஆதீனங்கள் உட்படப் பல சமய நிறுவனங்களினாலும் பெறுமதியான பட்டங்கள் வழங்கிக் கௌவிக்கப்பட்டவர். பார்வைக்கு எளிமையானவர். உறுதியான கொள்கைப்பிடிப்புள்ளவர். பாடத்திட்டத்தில் உள்ள சமயபாடப் புத்தகங்களில் உள்ள பல பிழைகளைச் சுட்டிக்காட்டி பிழைதிருத்தத்தை ஒரு நூலாக வெளியிட்டு உறைக்கும்படி உரிய இடங்களுக்கு எழுதியவர்.

இடரினும் தளரினும் மனம் தளராது சமய விழுமியங்களை மாணவர்களிடையே பரப்பியவர். போற்றுவார் ஏற்றவும் தூற்றுவார் சாற்றவும். என் கடண், பணி செய்து கிடப்பதே, இறைவா, உன் கடன் அடியேனையும் தாங்குதல் என்ற உறுதியோடு உழைத்தவர். பல இளைஞர்களைச் சிவநெறித் தொண்டர்களாக மாற்றியவர்.

இன்று பவளவிழாக் காணும் இச்சைவப் பெரியார் எல்லா நலமும் பெற்று ஏற்றமுடன் நூற்றாண்டு வாழ ஏரம்பன் பதம் பிரார்த்தித்து அமைகின்றேன்.

இன்பமே எந்நாளும் துன்பமில்லை.

சுபம்

உ
சிவமயம்

# சைவப் பழம்

வி. தயாபரன்
*பவளவிழாச் சபைப் பொருளாளர்,*
*சைவபரிபாலன சபை.*

வண்ணை நாவலர் பள்ளியிலே ஐந்தாம்தர மாணவனாக புலவர் ஐயாவிடம் கல்வி கற்ற காலம்முதல் இற்றைவரை என் இன்பதுன்பங்களில் பங்குகொண் டமை யான் பெற்ற இன்பமே. என் நினைவி லும், நிழலிலும் ஏன்? உயிரிலும்கூட ஊறி விட்ட அவரின் சிந்தனை முத்துக்கள் என் னைச் சிறந்தவனாக்கியது. சிறுவயது முதல் ஆலயம் தொழல், தேவாரம் ஓதல், பஜனை போன்ற ஆகமவழிகளிற் செல்ல வழிகாட்டிய பெருமைக்குரிய பெருமக னாரை என்றும் நினைவில் நிறுத்துகின் றேன்.

என் தொழில் வாழ்வில் அவர் ஓர் இமயம். தொழிலிட வசதியை ஏற்படுத்தித் தந்ததோடமையாது இங்கு இயங்கும் அத் தனை மன்றங்களிலும், கழகங்களிலும் என்னையும் பார்வையாளராக விடாது பங் காளியாக்கி வெளிச்சத்துக்குக் கொண்டு வந்த பெருமையை எண்ணிப் பார்க்கின் றேன், என்னென்று கூறுவேன்.

அவரால் என் மூன்று புத்திரர்க ளுக்கும் வித்தியாரம்பம் செய்யக் கிடைத் தமை கடவுள் கருணையே எனக் கருது கின்றேன். காலத்தை மதித்து எக் கருமத்தையும் தள்ளிவைத்துப் பிற்போடும் பழக்கம் அவரிடம் அறவேயில்லை. யாவரை யும் அரவணைத்து அன்பு காட்டி ஆக்கமும் ஊக்கமுமளித்து எடுத்த பணியைத் தொடர்ந்து முடிக்கும் ஆற்றல் அவரிடம் இயல்பாகவே யுண்டு. அவரின் ஆளுமையின் வெளிப்பாடு இதுவே.

நிமிர்ந்த நன்னடை, நேர்கொண்ட பார்வை எவர்க்கும் அஞ்சாத நெஞ்சம், தான் நினைத்ததை முடிக்கும் திறமை, உதட்டிலே புன்சிரிப்பு, வெள்ளை உள்ளம் அவரின் அணி கலன்கள். நாவலர் தொண்டிலே தனக்குப் பிறகு சைவத்தையும், தமிழையும் தழைத் தோங்கச் செய்ய நாவலரே உருவெடுத்து வந் துள்ளதாகவே யான் கருதுகின்றேன்.

வாழ்வியல் பயணத்தின் நீண்ட காலத்தை சைவமும் தமிழும் சிறந்தோங்கப் பாடுபட்டுள்ளார்கள். இப்பணியை அவரின் பின்தொடர இளைஞர்பரம் பரையொன்றை உருவாக்க பாடுபட்டுழைப்பதை உலகம் உணரும்.

என் குருநாதர் அவர்கள் சைவப்பழம். தள்ளாத வயதிலும் செய்யும் சேவைகள் தொடர்ந்தும் எம் மக்களுக்குக் கிடைக்க வேண்டும், பல்லாண்டு காலம் நீடுவாழ வேண் டும். நாமெல்லோரும் அவரின் நீண்ட ஆயு ளுக்கும் வளமான வாழ்வுக்கும் இறைவனை வேண்டுகின்றோம்.

**நீதி உயர்ந்த மதி கல்வி - அன்பு**
**நிறைய உடையவர்கள் மேலோர்.**

-பாரதி -

உ
சிவமயம்

# நாவலர் வழியில் நற்பணி செய்யும் நல்லோன்

**அகில இலங்கை சைவசித்தாந்த பண்டிதர் சங்கம்**

ஈழமணித் திருநாட்டில் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் எமது சைவமும் தமிழும் வளர வேண்டும் என பல்வேறு கோணங்களில் ஆற்றிய பணிகளை தமிழ் பேசும் நல்லுலகம் மறக்கமுடியாது. அந்த வழியிலேயே இந்துபோர்ட் இராஜரட்ணம், பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை, சைவப் பெரியார் சிவபாதசுந்தரனார், காசிவாசி செந்திநாதையர், சதாவதானி கதிரவேற்பிள்ளை போன்ற பல பெரியார்கள் சைவம் வளர்த்தார்கள். அவர்களது வழிகளையெல்லாம் கற்றறிந்த சைவப்புலவர் வ. கந்தசாமியவர்கள் முறையாக சைவத்தையும், தமிழையும் கற்றறிந்தவர். சைவப் பெரியார் சிவபாதசுந்தரம் அவர்களிடம் சைவசித்தாந்தத்தை துறைபோகக் கற்றவர். எமது சமயத்தையும் எமது மொழியாகிய தழிழையும் வளர்க்க வேண்டும், பாதுகாக்க வேண்டும் எனத் தன்னலம் கருதாது தொழிற்பட தொடங்கியவரே சைவ பூஷணம் வ. கந்தசாமியாவார்.

தன்னுடைய வாழ்வில் பெரும் பகுதியை சைவசமய நிறுவனங்களுக்காக அர்ப்பணித்து, அவற்றின் மூலமாகப் பணி புரிந்தார். ஆறுமுகநாவலர் வழியில் ஆரம்பித்த சைவபரிபாலன சபையில் இணைந்து 50 ஆண்டுகளுக்கு மேலாக அங்கத்துவம் வகித்து வருகின்றார். சிறப்பாக பரீட்சைச் செயலாளராக இருந்து அகில இலங்கை சைவநெறித் தேர்வுக்கு ஆற்றிய பணிகள் சொல்லிலடங்கா.

மேலும் க.பொ.த. உயர்தரத்தைக் கற்று முடித்தோர், பல்கலைக்கழகப் பட்டதாரிகள், ஆசிரியர்கள் போன்றோரை நிறைவான ஞானம் பெறவைக்க வேண்டும் என்ற சிந்தையோடு சைவசித்தாந்த பண்டிதர் என்கின்ற பட்டப்படிப்பையும் நடத்தி அவர்களுக்கு மூன்றாண்டுக் கல்வியாக பிரவேசபண்டிதர், சைவசித்தாந்த பாலபண்டிதர், சைவசித்தாந்த பண்டிதர் என மூன்று தேர்வுகளுக்கும் முறையே பாடத்திட்டத்தைத் தயாரித்து அவற்றுக்குரிய நூல்களைத் தெரிவுசெய்து தனியொருவராக நின்று ஆண்டுதோறும் நடாத்தி வருகின்றனர். ஒரு பரீட்சைத் திணைக்களம் ஆற்றும் பணியை தனியொருவராக நின்று விடைத்தாள் தயாரித்தல், அச்சடித்தல், பரீட்சையை நடாத்துதல், ஆய்வுக் கட்டுரை தலைப்பு வழங்கல், ஆலோசனை வழங்கல், விடைத்தாள்களை மதிப்பிடல், பெறுபேறுகளை அனுப்புதல், பட்டமளிப்பு விழாவை நடாத்த ஒழுங்குகள் செய்தல் என எல்லாப் பணிகளையும் சிறப்பான முறையில் செய்து வந்தமையால் ஆண்டுதோறும் பல சைவசித்தாந்த பண்டிதர்கள் உருவாக்கப்பட்டனர்.

பல்கலைக்கழகத்தில் படித்துப் பட்டம் பெற்ற பின்னரும் கூட பல புதிய நூல்களை மாணவர்கள் படித்துக்கொள்ள வழிகாட்டியது

*சைவசமய ஞான நூல்களைக் கற்பிக்கின்ற காலத்தில் கற்கத்தவறி வேறு துறைகளில் புகுந்து கற்று தொழிலாற்றி ஓய்வுபெற்று முதுமையடைந்த காலத்தில் கூட பலரை ஞானக்கல்வி கற்க வழிகாட்டி சைவசித் தாந்த பண்டிதர்கள் ஆக்கிய பெருமை சைவப்புலவர் வ. கந்தசாமியவர்களையே சாரும்.*

*மேலும் சனி, ஞாயிறு தினங்களில் நாவலர் மகா வித்தியாலயத்தின் மண்ட பத்தில் சைவசித்தாந்த பண்டிதர், சைவப் புலவர், பண்டிதர் தேர்வுகளில் தோற்றும் மாணவர்களுக்கு தமிழ் இலக்கணம், சைவ சித்தாந்தம், திருமுறைகள் என பல பாடங் களைக் கற்பிப்பதும் இவரது முக்கிய பண் பாகும். நோய்வாய்ப்பட்ட காலத்தில்கூட மாணவர் கல்விக்கு இடையூறுவராது பார்த்துக்கொள்வார்.*

*இவை எல்லாவற்றுக்கும் மகுடம் வைத்தாற்போல சைவசித்தாந்த பண்டி தர்கள் எல்லோரும் நல்ல சமயப்பணி ஆற்றவேண்டும் என்ற குறிக்கோளோடு சைவ சித்தாந்த பண்டிதர்களை ஒன்று சேர்த்து அகில இலங்கை சைவசித்தாந்த பண்டிதர் சங்கம் என்ற சங்கத்தை ஆரம்பித்துவைத்த பெருமை சைவப்புலவர் வ.கந்தசாமி அவர்களையே சாரும். மேலும் எம் சங்கத்தின் போசகராக இருந்து இப்போதும் நல்வழிகாட்டி வருகின் றார்.*

**'பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம் கருமமே கட்டளைக் கல் '**

என்ற வள்ளுவனாரின் வாக்கிற்கமைய இன்னா செய்தாரைக்கூட அவர் நாணும் வகையில் நன்மை செய்து பல முனைகளில் பணியாற்றும் ஒரு பெருமகான் என்றுதான் கூறவேண்டும். என்னதான் யார் கோபவார்த்தைகளைக் கூறி னாலும் மனவுறுதி தளராது அமைதியாக அவற்றை ஏற்று ஆராய்ந்து வழிகாட்டுவதைப் பார்க்கலாம்.

**நன்றி.**

## பவளந் தழுவிய திருமுறைப்பாடல்

### திருவாசகம்

**சீரார் பவளங்கால் முத்தந் கயிறாக**
**ஏராரும் பொற்பலகை ஏறி இனிதமர்ந்து**
**நாராயணன் அறியா நாள்மலர்த்தாள் நாயடியேற்கு**
**ஊராகத் தந்தருளும் உத்தரகோச மங்கை**
**ஆரா அமுதின் அருள் தாளிணைபாடிப்**
**போரார்வேல் கண்டமடவீர் பொன்னூசல் ஆடாமோ.**

உ
சிவமயம்

# வானோங்கு சதங்காண்பாய் வாழி வாழி

கலாபூஷணம், பண்டிதர் சி. அப்புத்துரை

வல்லவனெம் நாவலனார் பணியைப் பேசும்
வண்ணார்பண் ணையினிலே துணையைத் தேர்ந்த
வல்லுவெட்டித் துறைகந்த வனத்த தாய
பொலிகண்டி புகழொளிரத் தோற்றங் கண்ட
வல்லிபுரந் தவமைந்த கந்தசாமி
வாழ்வளிக்கும் ஆசானாய் அதிப ராகி
எல்லோரும் போற்றல்செய் பவளங் கண்டாய்
எழில்முத்து சதவிழவும் அயர்ந்து வாழி.

சைவத்தின் திருவுருவே கந்தசாமி
தண்ணளியன் பருளமைதி சாந்த மென்று
மொய்த்திலங்கு பண்புகளின் முதிர்வு காட்டும்
முதறிஞ சேவைக்கே முழுதா யுன்னை
மெய்த்தவுணர் வுடனாக அர்ப்ப ணித்து
மேலும் உன் பணிவழியில் தொடரு கின்றாய்
வையத்துப் பவளவிழா கண்டு நின்றாய்
வானோங்கு சதங்காண்பாய் வாழி வாழி.

கோலமயி லாடுபோ தழகு காண்போம்
கோகிலக்கூ வொலியினிலே குளிர்ந்து நிற்போம்
காலமெலாங் களித்திடினுங் கவினும் பச்சைக்
கழனிகளோ கட்பார்வைக் கினிமை நல்கும்
சாலவொளிர் சேவைதனிற் கந்தசாமி
தன்னிகரில் தனியழகைத் தந்து நிற்ப
மேலதென எதையினிநாம் பேச லாகும்
மென்மையுளத் தழகினையும் நினைய லாமே.

திகழ்கின்றாய் சிவசமய அறிவை ஊக்கிச்
சித்தாந்தச் செழுமையினை யணைய வைத்து
நிகழ்கின்ற தேர்வுகளின் தகுதி கண்டு
நின்னுளத்தின் உயர்வினையே நினைந்து போற்றிப்
புகழ்கின்றார் வல்லிபுரம் வள்ளிப்பிள்ளைப்
புனிதர்தரு புத்திரனின் புகழை மெச்சி
மகிழ்கின்றார் மாண்பாரும் விஜயராணி
மனைவிளக்கை மக்களினை வாழ்த்து கின்றார்.

முத்தமிழ்வித் தகர்சுவாமி விபுலானந்தர்
முற்றறிவி னுடனாகிப் போற்றல் செய்த
இத்தலத்துச் சோழவந்தான் மடத்தில் வாழ்ந்த
ஏந்தலற நெறிநின்ற கந்தசாமி
பத்திரமாய் எம்மனத்தும் பதிவை வைத்தான்
பதிவண்ணார் பண்ணையினிற் பணியை ஆண்ட
உத்தமனெம் வல்லிபுரம் கந்தசாமி
உயர்பணியும் எவர்மனத்தும் வாழி வாழி.

உ
சிவமயம்

# அழகுவிழா எடுத்து நன்றி அவர்க்குச் சொல்வோம்.

இராசையா குகதாசன்
*விழாச்சபைச் செயலர்*

கந்தவனக் கடவையுறை கடவு ளருளால்
கந்தையா வல்லிபுரம் வள்ளிப் பிள்ளை
நந்தவன இல்வாழ்வில் நயந்த செல்வா
நம்வண்ணை நாவலரை நாடி வந்தே
சந்தவனப் புடைதமிழும் சைவந் தானும்
தக்கவர்பால் கற்றுணர்ந்து சான்றோ னாகி
கந்தமனத் தொண்டுகா சினிக்கே யாற்றும்
கந்தசாமி ஐயாவே வாழி வாழி.

எழுத்தினொடு சொல்பொருள்கள் இலக்க ணங்கள்
எளிவந்த சிவபாத சுந்த ரனார்
விழுப்பமுள இளமுருகன் கார்த்தி கேசு
வியன் க. சி. நடராஜன் வேந்த னாரும்
பழுத்தபுல சுப்பையரும் பாடம் சொல்ல
பருகியதை மிகநுணுகிப் படித்துத் தேறி
வழுத்துமுறை பணிபுரிந்தாய் வாழ்த்து கின்றோம்.
வண்டமிழ்போல் வாழியநீர் பன்நூ றாண்டே.

ஆனைமுக னடிபணியு மன்ப ராகி
அருளொழுகு சிவநெறிச் செம்மல் ஆகி
வானனைய சிவநெறிக்கா வலரு மாகி
வணங்கு சிவ நெறிக்கலா நிதியும் ஆகி
தேனனைய சிவனடியார் மணியு மாகி
சித்தாந்த வித்தகராய்ச் சிறப்பும் பெற்றாய்
கோனனைய சைவபூ ஷணமே கைகள்
கூப்பியுனைத் தொழுகின்றோம் கொழித்தே வாழி.

தொன்மைமிகு நூல்கள்பல துலங்கப் புதிதாய்த்
தூய அதன் மரபுவழி தொய்யா வண்ணம்
பின்னவரும் தெரிந்திடவே புதுக்கித் தந்தாய்
பேரறிஞர் பலருக்கும் விழாவெ டுத்தே
அன்னவரின் புகழகிலம் அறிய வைத்தாய்
அறிவுரைகள் சிறையுளர்க்கும் அளித்து வந்தாய்
மன்னனென எல்லவரும் மதித்தே போற்ற
மாபுகழோ டென்நாளும் மகிழ்வாய் வாழி.

வண்ணைநகர்ப் பதியதனின் வீதி தோறும்
வாகனங்கள் இன்றியுடல் வருந்த நடந்தே
மண்ணதனில் பகலிரவு பனிபா ராது
மாவெய்யில் மழையென்று மனம்கோ ணாது
உண்ணுதலும் மறந்தா ரெங்கு மோடி
உத்தமநல் லறிஞர்களை ஒருங்கு கூட்டிக்
கண்டுபல அபிவிருத்திக் கழகம் வைத்தே
கனபணிகள் ஆற்றிசைவப் பெரியோய் வாழி.

மெய்ப்பொருளின் கும்பாபி ஷேகம் பூசை
முறைவழியே நடந்துவர முயன்று நின்றாய்
செப்பரிய பண்ணிசைத் தாந்தம் தீட்சை
தெய்வாசிரிய னாகியிவை சிறக்கும் வண்ணம்
கைப்பொருளை ஈந்துமிவை கருதிச் செய்தாய்
கவின்சைவ ஒளியிங்கு கால வேண்டி
ஒப்பரிய தொண்டுபல உலகுக் காற்றும்
உன்பெருமை இன்தமிழில் உரைக்கள் பாற்றோ.

நாவலரின் வழியொழுகி நடந்தே சைவ
நன்நெறியில் யாவரையும் நடத்தி வைத்த
காவலரெம் கந்தசாமி ஐயா சேவை
காலமெல்லாம் நிலைத்திருக்க கலைக ளெல்லாம்.
மேவுமணி மண்டபங்கள் மிகுசைவ மன்றங்கள்
மேதினியி லேதிலற்குதவு மறக்கொ டைகள்
ஆவலொடு நாம்வழங்கி ஆண்டு தோறும்
அழகுவிழா வெடுத்துநன்றி அவர்க்குச் செய்வோம்.

ஆவாழி மறைவழி மழையும் வாழி
அறமதுவும் வாழியா கமமும் வாழி
பாவாழி பசுவாழி பண்பும் வாழி
பார்வாழி நதிவாழி நிதியும் வாழி
கோவாழி கோல்வாழி கொடியும் வாழி
குலநலமும் வாழிதிரு முறையும் வாழி
நாவார நெஞ்சார நவிலும் வாழ்த்தால்
நம்கந்த சாமிஐ யாவும் வாழி.

உ
சிவமயம்

# கொழும்பு சிவத்திருமன்றம் உவந்தளிக்கும் பவள வாழ்த்துப்பா

புராண வித்தகர் மு. தியாகராசா
*தலைவர்*

செந்தமி ழோடு சிவமணங் கமழும்
சிந்தனை யாளர் திகழுநல் வண்ணை
நன்னகர் நடுவண் நலமிகு சூழலில்
தன்னிக ரில்லாச் சாந்தையர் மடத்துக்
கற்பக விநாயகர் கழலிணை தன்னை
அற்புடன் போற்றி அல்லும் பகலும்
அவன்பணி தானே ஆன்மாா டேறப்
பலவினை யாற்றும் பான்மைத் தாமென
ஆலயத் திருப்பணி அமைவுற வியற்றி
சாலவும் நித்திய நைமித் தியங்கள்
தவறா தொழுங்காய் நடைபெற வைத்தும்
சைவ சமய அபிவிருத் திக்காம்
செய்வினைக் கழகம் சிறப்புடன் நிறுவி
உய்வகை யுணர்ந்தோ ருடனே கூடி
கருத்துரை யரங்கு கவிதைக ளாய்வு
விரித்துரை விளக்கமோ டுளத்துறை புராணம்
பண்ணியற் றிருமுறைப் பாடற் பயிற்சி
உண்ணிகழ் உருக்கமோ டுஞற்றும் பிரார்த்தனை

நூலக அமைப்பு நுவலருஞ் சரியையின்
பாலதா யான பலபல நெறிகள்
இன்னன வல்லால் ஏனைய பலவும்
நன்னலம் பெருக நாளும் நடாத்திப்
பயின்றவர் மகிழப் பரீட்சை வைத்து
நயந்தரு சான்றிதழ் நற்பெரும் பரிசு
ஆயவை வழங்கி ஆர்வ மூட்டியும்
சைவ பரிபா லனசபை தன்னில்
சைவசித் தாந்த பண்டித ராதிய
மெய்வகை யாய்ந்த முதியோர்க் காகவும்
தெய்வத ஒளிகொடு சிறந்து விளங்க
ஈழச் சிறாரும் இயல்சிவ நெறியில்
ஆழ வைக்கும் அரும்பணி யாக
அவர்களுக் கேற்ற ஆன்மிக வழியில்
தவறாது தேர்வுகள் தனித்தனி நடத்தியும்
நாவல ராச்சிரம நன்மணி மண்டபம்
நாவல்லோர் பயன்பெறும் நல்லிட மாக்கியும்
வண்ணைச் சிவனார் கோயிலின் வளங்கள்
திண்மையொடு மீளத் திகழ வேண்டி
உரிய நிவந்த உறுதிகள் யாவும்
அரிய முயற்சியால் ஆய்ந்து தொகுத்தும்
- சைவப் புலவர் சங்கம் அமைத்து
சைவப் புலமைசார் தகுதியை நம்மனோர்
பெற்று மகிழும் பெருமை கண்டும்
உற்ற விவையே யல்லா தநேக
செயற்றிற மெல்லாம் செப்புதற் கடங்கா
நயத்தகு மிவற்றின் நன்மையி னாலே
சைவபரி பாலன சபைத்தலைமை பெற்று
எவ்வெவர் தமக்கு மினிய னாகியும்
வாய்ந்தநற் சீலம் மாண்புகழ் தெளிவு

சாந்தம் வாய்மை சாரு மன்பு
கருணை அடக்கம் காண்டகு நீதி
உரைசால் கலைபயி லுணர்ச்சி யோடு
எளிய தோற்றம் இனிய இதயம்
களிகொள் சுரும்பெனக் கறங்கெனப் பகலில்
துவிசக் கரத்தின் துணையுடன் சூழன்று
தவிரா தொவ்வொரு துறையிலுந் தானே
நேரே நின்று நிறைவுற வாற்றி
ஆரா விருப்புடன் அமைதி கண்டும்
ஆயிரக் கணக்கில் மாணாக் கர்களின்
சேயிதழ்க் கமலச் சிந்தை மலர்த்திய
சீரிய தாகு மாசிரி யப்பணி
நேரிய நெறியில் நிகழ்த்திய மேலோன்
பவள விழாவயர் பான்மைத்த வயதால்
துவளும் உடல்நிலை தோன்றிய போதும்
அவநிலை யகற்றி அருளொளி பெருக்கும்
சிவசின் னங்கொடு திகழ்திரு மேனிபோல்
உளமும் உணர்வால் ஒளிபெற ஊக்கத்
தளர்விலா துழைக்குந் தகைசால் பெருந்தகை
நல்லியல் பமைதரு வல்லி புரத்தார்
செல்வ மகனார் தெரிதர நம்மால்
சைவப் புலவர் கந்த சாமி
என்னப் பழகும் இயல்புடை ஏந்தல்
கொழும்பு சிவத்திரு மன்றம் நின்னை
விழுத்தகு சிறப்பொடு மென்மே லோங்கிச்
சுற்றந் தழீஇச் சுகத்துடன் மலர்ந்து
நற்றவப் பெரியோய் நன்கு வாழ்கென
வாழ்த்தும் வாய்ப்பால் மகிழும்
வாழ்க வாழ்க வாழ்கபல் லாண்டே.

உ
சிவமயம்

# பொற்கோவே

கவிஞர் துரையர்
சு. துரைசிங்கம்.

கந்தவனக் கடவையிலே உதித்துநின்றாய்
காவலுக்கு கந்தனவன் நாமமேற்றாய்
சுந்தரமாய் தமிழ்மணக்கும் வாயுங்கொண்டாய்
தூவனாய் வாழ்ந்திடவே தொழிலுமேற்றாய்
பந்தமெலாம் கந்தர்மட ஊரில் வைத்தாய்
பாசமெலாம் தமிழ்சைவத் தோழனானாய்
சிந்தையினில் தெய்வநெறி ஒன்றேயென்ற
சீராளர் கந்தசாமி ஐயா வாழி.

குறிமூன்று சைவமெனக் கோலமிடும்
குறுந்தொகை வாயினிலே தாளமிடும்
குறிவேட்டி நாவலரைக் காட்டிநிற்க
குறட்பாவே நெறியாகக் கொண்டமகான்
அறிவறிந்து அறிவிக்கும் ஆசானாகி
ஆட்கொண்ட கந்தசாமி வாழி வாழி
பொறி நின்று போனோர்க்கும் போதித்த
பொற்கோவே கந்தசாமி வாழியவே.

உ
சிவமயம்

# சக்தி தரும் விநாயகரின் அருள் பெருக வாழ்க! வாழ்க!

உமா சூரியகுமாரன்.
ஆசிரியர்,
யா / பெரியபுலம் ம.வி

சாந்த முகத்தினிலே வெண்ணீறு திகழ்ந்திருக்க
சந்தன மையத்திலே குங்கும திலகமுடன்
அந்தண வடிவெடுத்த சுந்தரக் கந்தனையே
கந்தசாமி ஆசிரியராகப் பெற்றவர் வளர்த்தெடுத்தார்.

தம்மை அர்ப்பணித்து பள்ளியிலே பணிபுரிந்து
எம்மை அறிவூட்டி பணிபுரிய வாய்ப்பளித்து
என்றும் என்கண்கள் காணுகின்ற தெய்வமானார்
அன்பின் திருவுருவாய் உள்ளம் நிறைகின்றார்.

கந்தர் மடமிருந்து சைவபரிபாலனம் செய்தார்
சிந்தையிலே நிறைந்த சைவசமய குரவர்போல்
முந்தைநல் வினைபெருக சைவப்புலவர் என
சிந்தையிலே திகழுகின்றார் பவளவிழா காணுகின்றார்.

கற்றநல்ல அறிவழகு கண்கவரும் தெய்வீகம்
பெற்றநல்ல ஆசிரியர் மாணவர்க்குத் தட்சணாமூர்த்தி
நற்றவமாய் பணிபுரிந்த விநாயகரின் தாசமூர்த்தி.
பெற்றவரும் மற்றவரும் போற்றிடுவார் அவர் கீர்த்தி.


உள்ள மகிழ்வோடு உலகம் சுற்றிவர
தெள்ளுதமிழும் சைவமும் உலகமெலாம் விளங்க
வெள்ளைக் கொம்பன் விநாயகர் திருவருளால்
பிள்ளைகளுடன் வாழ வெளிநாடு செல்கின்றார்.

முக்திபெறும் இனியவழி இறைபணி செய்வதென
பக்தியுடன் எந்நாளும் பண்புடனே வாழுகின்றார்
பக்தியினால் தெய்வஆசி பெற்றவரே வாழ்கவாழ்க.
சக்திதரும் விநாயகரின் அருள்பெருக வாழ்க வாழ்க.

## பவளந் தழுவிய திருமுறைப்பாடல்

### திருவாலியமுதனார் திருவிசைப்பா

**பவள**மால் வரையைப் பனிபடர்ந் தனையதோர்
படரொளி தருதிருநீறும்
குவளை மாமலர்க் கண்ணியும் கொன்றையும்
துன்றுபொற்குழல் திருச்சடையும்
திவள மாளிகை சூழ்திரு தில்லையுள்
திருநடம் புரிகின்ற
தவள வண்ணனை நினைதொறும் என்மனம்
தழல்மெழுகு ஒக்கின்றதே.



அகில இலங்கைச் சைவப்புலவர் சங்க நிர்வாகிகளுடன் அமர்ந்திருக்கின்றார்



யாழ். சைவபரிபாலனசபைக்கு திருப்பேரூர் ஆதீனம் சாந்தலிங்க இராமசாமி அடிகளும்
தருமபுர ஆதீன இளவரசு அவர்களும் வருகைதந்த போது (2004) வரவேற்று அழைத்து வரும் காட்சி



தமிழ்நாடு சேக்கிழார் அடிப்பொடி தில்லை ஸ்தானம் இராமச்சந்திரன் தம்பதிகள்
நாவலர் மகா வித்தியாலயத்தைத் தரிசித்த வேளையில்,
சேக்கிழார் அடிப்பொடி தம்பதியுடன் மலராசிரியர்,
பேராசிரியர் நாவலர் ம. வி. முதல்வரும் காணப்படுகின்றார்.



விழா நாயகர் துணைவியாருடன் தமதில்லத்தில் நவராத்திரி கொலுவுடன்

உ
சிவமயம்

# நன்றே நினைக்கும் நன்மனத்தோன்

சைவப்புலவர் ச.முகுந்தன்
*இறுவில் கிழக்கு*

தான் பிறந்த நாட்டிற்குத் தாராளமாய் பயன் செய்து
தேன் தமிழ் சைவம் செழிக்க சேவை பல செய்து
வான் புகழாய் வையகம் போற்ற அதிபராய் அமைந்து
சான் றோர் பலரை சகத்தில் சரளமாய் உருவாக்கி.

ஒப்பிலா திறத்தால் உயர் பதவிகள் பல வகித்து,
இப்புவியில் நாவலர் வழியில் நயம்படவாழும்
செப்பரிய இவர் திறத்தை சொல்லில் செதுக்கலாமோ!
அப்பு அவனியிற் பரந்திருப்பாற் போல் அனைவர் மனதிலும் இவர்.

அன்பின் ஊற்றாய் அறிவின் ஆழியாய் பண்பின் சிகரமாய்
கன்னல் சுவை பேச்சாய் கனிந்த பழரசச்சிரிப்பாய்
இன்மை இலாத இப்புவி போற்றும் அறக்கொடையாளியாய்
என்குரு எம் வழிகாட்டி என எல்லோரும் போற்றும் ஏகனிவர்.

தண்டமிழ் மொழியில் கொண்ட தோர் விருப்பை!
கண்டம் கறுத்த சிவன் சமய சித்தாந்த அறிவு உகப்பை!
தண்மைக் குணத்தை தெளிந்த ஆர்வநற் சேவைச் சிறப்பை!
விண்ணுயர் உங்கள் திறத்தை உலகில் விஞ்சயாருண்டு?

அன்பு, சத்தியம், காருணியம், தர்மம், சாந்தி, அகிம்சை
என்னும் ஆறு பண்புகளையும் ஓர் முகத்தில் கொண்டு
குன்றின் விளக்கென குலாவிடும் கந்தசாமி எனும்.
என்றும் அறிவொளி செய்யும் என்குருவே! நன்றே நினைக்கும்.
நன் மனத்தோய் பவள விழாக் கண்டு பல்லாண்டு வாழியவே!

உ
சிவமயம்

# பவளவிழா காணும் சைவப்புலவர் வ. கந்தசாமி அவர்களின் சேவைநலன் பாராட்டுவிழாவில் (20.03.2005) விழாச்சபையினர் வாழ்த்தி வழங்கிய வாழ்த்துப்பா

சைவப்புலவர் மணி இ. செல்லத்துரை

## காப்பு

முற்றுதலில் சார்ந்திருந்து மூலவராய் முன்னருளுங்
கற்பக 'வி' நாயகரே 'காவலன்' ~ 'சற்சமயன்'
நாவலன்றன் நல்வழிக்கு, 'நற்கந்த சாமிபணி'
'நர்'வுரைக்க நல்கும் நயந்து,

## குரு வணக்கம்

வண் டமிழ் மன்னிய
பண் டித மாமணித்
தண் ணார் திருவடி
நண் ணி வணங்குவோம்.

"எனக்குப்பின் சைவநெறி குன்றிப்போம்; என்று,
எதிரான பாதிரிமார் சொல்லுகிறார்" அதனால்,
எனதுயிரோ டிருக்கும்போ துங்களுக்குச் சைவம்
ஏற்றதொரு பிரசார(க)ர் ஒருவரைநீர் தெரிப்பீர்!
எனதுநிலை போலேதான் படித்தவரும், ஆங்கே
எவரேனும் சன்மார்க்கர் பலருந்தாம் வருவர்!
எனினுமுங்கள் 'வை' வைத்தான் கேட்டுக்கேட் டிருந்தும்
என்னைப்போல் போதிக்க எவர்தானும் வரார்' காண்!

என்றகுரு ~ நாவலரின் இறுதிப்பிர சங்கம்
ஏக்கமும்தம் ஆதங்கத் தோற்றமும் அறிந்த
மன்கந்த சாமியுளம், அவைநீக்கத் துணிந்தே,
மனதாரத் தம்பணியே அவர்பணியாய் நின்றார்;
தன்பணியிற் பிறர் 'வை' வைக் கண்டிருந்தும் காணார்;
தான் செய்த பணியையும்தான் 'தம்பட்டம்' அறியார்;
துன்பகலும் சைவநெறி தூய்மைபெறப் பரவித்
துய்யபயன் பெறுதற்கே தொடங்குதலைக் கொண்டார்.

**அவர் தாம்:**

முருகர்தம் அண்ணனையே முன்வைத்துப், பின்னர்
மும்மலத்தை நீக்குவள்ளிக் கருள்தருதல் போல,
திருகற்ப(க) விநாயகரைத் துதிசெய்த பின்னே
திருப்பணிகள் யாவையுந்தாம் திருப்திபெறத் தொடர்ந்தும்,
கருமங்கள் முற்றுறவே நிறைபெறலும், காப்பும்
தருவித்துப் பின்மகிழ்ந்து தங்குடியின் நிலையைக்
கருதியங்குப் போவதனைக் காண்பார்கள் அன்றிக்
கேட்பாரும் களிகொண்டு வியப்புறுவர் பலரே!

செந்தமிழும் செழிசைவத் திருநெறியும் வளரச்
சேர்பணிகள் தருகின்ற நாவலரின் குறிக்கோள்
தந்த அவர் தாபனங்கள், ஆலயங்கள் மேலும்
தொடர்புள்ள மன்றங்கள் சங்கங்கள் பலவும்
விந்தைமிகுந் தேர்வுகளும், வழங்கு பட்டம், பரிசும்
விளங்குயரப் பணிகின்ற 'நாயகரின்' சிறப்பை
எந்தமுறை எழுத்துரைக்க எவரால்தான் முடியும்?
எந்தைபிரான் கந்தசாமி எந்நாளும் வாழி!

நாவலர் கொண்ட ஏக்கம்,
நயமுறத் தணித்தார்; வாழ்க!
பாவலர் புலவர் மேலும்
பண்டிதர் உயர்ந்து வாழக்
'காவலம்' கொண்டார்; வாழ்க!
கருதுநாற் பொருள்கள் எல்லாம்
மேவுறத் தங்கள் வாழ்வும்
மெச்சுற வாழி! வாழி!

# உளமார வாழ்த்துகின்றோம்

சைவப்புலவர் — இராசையா ஸ்ரீதரன்

சிந்தனையில் எந்நாளும் சிறப்பான எண்ணங்களுடன்
சீரான வாழ்வு வாழும் எங்கள் சிந்தனைச் சிற்பியே!
உந்தனை வாழ்த்திட உவகையுடன் முன்வந்தோம்
உத்தமரே ! அறிவுப் பெட்டகமே! வாழ்க நீடூழி!
கந்தனைக் கரங்குவித்தே காலமெல்லாம் களிப்புடனே
ஒளிபெற்று வாழ்ந்திடவே உளமார வாழ்த்துகிறோம்!
வந்தனை செய்தோம் உம்வாழ்வு வளம் பெறவே
கணபதியும் கந்தனும் கருணையே தரவேண்டும்!

உ
சிவமயம்

## அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கத்தின் அரும்பணி ஆக்கிய சைவப்புலவர் வ. கந்தசாமி அவர்களுக்கு

# சைவபூஷணம்

## எனும் கௌரவப்பட்டமளித்து வழங்கிய வாழ்த்துப்பா 22.07.2001

கந்தவேள் மூத்தோன் கருதுகந்த சாமிசீர்
தந்தே முனைந்தருள்வார் தான்.

**சை**வமே ஊட்டுந் தெய்வத் தருநெறி
பூணும் பூட்கையர் ; பூசல் ஒட்டாதவர்
**சணம்** எலாம் புண்ணியச் சார்பிலே நிற்பவர்
**புலவர்** குழாத்தின் புரவலர்; புராதனத்
**திரு** நெறி மன்றுகள் திகழ்ந்துதிடம் கொள
**வளர்**முறை வைத்தவர் ; வழங்கு நாற் பொருள்
**கந்த**ழி யாவும் காட்டும் கருத்தவை
**தந்**திடு சைவசித் தாந்தம் நிலைபெற
**சா**தனை தேர்வினால் சலமொடு வண்களும்
**மி**ளிர்தரச் செய்தவர்; மீளியர், - ஆகிய
பலன்தரு கந்த சாமிதம் பாதம்
ஆண்டும் ஈண்டும் அனுதினம் பரவுவம்;

வாழ்கநின் கௌரவ வண்செயல்; வாழ்க்கையும்
வேலவர் அருளால் விளங்குக உயர்ந்தே.

உ
சிவமயம்

# சைவ நலங்காக்கும் நல்லார்

சைவப்புலவர் ஏ. அனுசாந்தன்

1. திருவாரும் பெருநல்லைப் பதிவாழ்வின்
திகழடிகள் மனத்துட் கொண்டு
ஒருவாத பெருஞ்சைவப் புகழ்நீதி
புகலாறு முகநாவல
தருவீன்ற விதைகோடி யதிலேயும்
சகமீதிலுயர்ந் தோங்கிக்
கருமாளக் கதிகாட்டு கந்தசாமிப்பேர்க்
கனியொன்று சாலநன்றே!

2. நாவலர் வழிச்சைவ நலங்காக்கும் நல்லாரும்
நீரயாவர் நம்முணவுப் பழக்கத்தைத் தடுக்கவெனும்
நீசர்களும் சங்கமிக்கும் சைவபரிபாலனப்பேர்
நாலறிஞர் சபையினிலே நுண்ணறிவால் மிக்கதாலே
நேர்வழியில் நெருக்குற்றும் நிலைதழும்பா நீரரானீர்
நீடுநாள் நீர்வாழ்ந்து நீற்றுநெறி போற்றுகுழாம்
நீளுலக மெங்கணுமே தோற்றிடுக எம்ஐயா
நூலுணர்வாலறியா நுண்ணுணர்வு புகட்டுமையா.

3. செஞ்சந்தனஞ் சாந்தின் இயன்றதிரு வுருவமோ
இயன்றதிரு மறைத்து மிகவுடுத்ததுகில் நீதியோ
வஞ்சனையை யெஞ்சாது கொன்ற புன்முறுவலோ
வாது கோதறச் சிலவே புகல்கின்ற வாண்மையோ
எஞ்சாதியல்கின்ற இறைபணியின் இமயமோ
ஏதுக்கும் உருவாகும் பேராழியாரையா?
பஞ்சாகப் பாவங்கள் ஓட்டுபஞ்சாக்ஷரம்
பாவித்துப் பரவுதிரு கந்தசாமிஐயா.

உ
சிவமயம்

# கிருத கிருத்தியச் சித்தன் வாழ்க

மறவன்புலவு க. சச்சிதானந்தன்
காந்தளகம்,
சென்னை.

போர்ச் சூழலில் தொடர்ந்து யாழ்ப் பாணத்தில் தங்குவதற்குக் கடுமையான மனஉறுதி வேண்டும்.

அசையாத நாட்டுப்பற்று, துன்பங் களைத் தாங்கும் வலிமை, இழப்புகளைப் பொருளெனக் கொள்ளா உள்ளக் கிடக்கை, உடல்வதையை ஏற்கும் இயல்பு, வளர்ச்சியை நீங்கிய வாழ்வு, வசதிகளைத் துறந்த வன்மம், இடுக்கட் பட்டிருக்கினும் இரந்து யாரையும் விடுக் கற் பிரான் என்று வினவா அருள்நெறி, இவை தாங்கிய திருக்கூட்டமே யாழ்ப் பாணத்துத் தமிழ்க் கூட்டம்.

மண்ணின் மெய்மை இதுதான், அந்த நிலத்தில் நடப்பது நாம்தான் என்ற இயல் பூக்கம் கொண்டவர் யாழ்ப்பாணத்தவர். அதனாலன்றோ, கொடுமைகள் விடாது சொரிந்தபோதும் அடையாளம் கெடாது அவர்கள் வாழ்ந்து வருகின்றனர்.

அடிமை வாழ்வுக்குள்ளும் அடை யாள உணர்வைப் பேண இந்தத் திருக் கூட்டத்துக்கு வலிமையே வாழ்வாயிருக் கிறது. போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங் கிலேயர், சிங்களவர் எனத் தொடர்ச்சி யாக அடிமைகொள்ள வந்தோரால் யாழ்ப்பாணத்தை மாற்றமுடியவில்லை.

இத்தகைய மாற்றமுடியா இயல்புகள், வண்ணார்பண்ணையைச் சுற்றிய ஒரு திருக் கூட்டத்திற்குத் தொடர்ந்து இருந்து வருகிறது.

சமூகப் பார்வை கொண்டதே சமயம் என்பதற்கு வண்ணார்பண்ணையில் அமைந்த யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையின் தோற்றமும் வளர்ச்சியும் செயற்பாடுகளும் சிறந்த எடுத்துக்காட்டு.

அதன் இன்றைய தலைவர் புலவர் வ. கந்தசாமி அவர்கள். செயல் மறவரான அவ ருக்கு பவளவிழா ; கேட்கக் காதுகள் இனிக் கின்றன. செய்யவேண்டியதைச் செய்து முடிப்பவன் கிருதகிருத்தியன் என்பார் அடி யார்க்குநல்லார். சிலப்பதிகாரத்தின் நாடு காண்காதையில் வரும் சித்தன் என்ற சொல் லுக்கு இதுவே பொருள் என்கிறார் அவர். அத்தகைய கிருதகிருத்தியனே புலவர் வ. கந்த சாமி.

தமிழ்ப் பண்பாட்டுக்கு இனிய விளக்கம் புலவர் வ. கந்தசாமி. சைவநெறிக்கு உரிய ஒழுக்கசீலரும் அவரே. அத்தகைய நெறி யாளர், பண்பாளர், வாழ்வாங்கு வாழ்ந்து வரு வதால் அனைவருக்கும் எடுத்துக்காட்டாகவும் இருக்கிறார்.

பல்லாண்டு பல்லாண்டு வாழ்ந்து, யாழ்ப்பாணத்தவரின் தளர்வறியா மனத் துக்கும் இடையறா உழைப்புக்கும், கடும் முயற்சிக்கும் ஆதரவாகப் பயனுறுத்த வாழ்த்தி அமைகிறேன்.

உ
சிவமயம்

# கேட்டதும் சொன்னதும்

மலராசிரியரும் - விழாநாயகரும்

**வணக்கம் ஐயா,**

**வாழ்க்கையில் வெற்றிபெற்ற சில ருக்கே பவளவிழாக் காணும் வாய்ப்புக் கிடைப்பதுண்டு. அந்த வாய்ப்பை பெற்ற தங்கள் வாழ்க்கை வரலாற்றை அறிய விரும்புகின்றோம். தங்கள் பிறப்பு வளர்ப்புப் பற்றிக் கூறுங்கள்.**

*நான் வடமராட்சி பொலிகண்டியைச் சேர்ந்த கந்தவனக் கடவையில் பிறந்தேன். தந்தை கந்தையா வல்லிபுரம். தாய் வள்ளிப்பிள்ளை. நாங்கள் சகோதரர்கள் நான்கு ஆணும் ஒரு பெண்ணுமாக ஐந்து பேர். நான் மூன்றாவது பிள்ளையாக 18.01. 1931 இல் பிறந்தேன்.*

**நீங்கள் ஆசிரிய சேவையில் புகழ்பெற்ற வராக விளங்குகிறீர்கள். உங்கள் சகோதரர்கள்?**

*மூத்த அண்ணர் கிருஷ்ணசாமி சிறைச்சாலை அதிகாரியாக இருந்தவர். இளைய அண்ணர் வடிவேலு கொழும்பு சுப்றீம் கோட்டில் மொழிபெயர்ப்பாளராக இருந்தவர். இப்போது ரிஷிகேசம் சிவானந்த ஆச்சிரமத்தில் சங்கரானந்தர் எனும் தீட்சா நாமத்துடன் துறவியாகத் தொண்டு செய்கின்றார். தம்பி சண்முகராசா வைத்திய கலாநிதியாகச் சேவைசெய்து கனடாவில் வாழ்ந்து அமரராகிவிட்டார். தங்கை பார்வதி சந்திரசேகரன் அமரராகிவிட்டார். ஈழப்போருக்கு மூர்த்தி மாஸ்ரர் எனும் ஆயுதத் தொழில்நுட்பவல்லுநனைப் பெற்றுத்தந்த பெருமைக்குரியவர்.*

**உங்களுடைய ஆரம்பக்கல்வி பற்றிச் சொல்லுங்கள்.**

*எனக்கு ஏடு தொடக்கியவர் பண்டிதர் சி. கந்தவனம் ஆசிரியர் ஆவார். ஐந்தாம் வகுப்புவரை உப்புக் கிணற்றடிப் பிள்ளையார் கோவிலடியில் உள்ள பொலிகண்டி அ.மி.பாட சாலையிலும், ஒன்பதாம் வகுப்புவரை அப்பா பள்ளிக்கூடம் என்னும் கரணவாய் தாமோதர வித்தியாலயத்திலும் கற்றேன். வண்ணார் பண்ணை நாவலர் சைவப்பிரகாச வித்தியா சாலையில் S.S.C சித்தியடைந்தேன்.*

**கந்தவனக் கடவையில் பிறந்த தாங்கள் வண்ணார்பண்ணையில் வந்து படிக்கக் காரணம் என்ன?**

*எனது மூத்த அண்ணர் கிருஷ்ணசாமி அவர்கள் யாழ்ப்பாணத்தில் சிறைச்சாலை அதி காரியாக உத்தியோகம் பார்த்ததால் அவரு டன் 1949 இல் யாழ். வைத்தியசாலை வீதி யிலுள்ள சிவன் கோயிலுக்குப் பக்கத்தில் வீட்டில் இருந்து படித்தேன்.*

**நீங்கள் ஒரு சைவப் பழமாகக் காட்சி தருகிறீர்கள். இதற்கு இளமையில் எவ்வித வழிகாட்டல் கிடைத்தது?**

கந்தவனக்கடவை முருகன்தான் எங்கள் குலதெய்வம். எனது பெற்றார் சைவவாழ்வு வாழ்ந்ததாலும் கந்தவனக் கடவையில் சைவப்பெரியார் சிவபாத சுந்தரம் அவர்களுடைய தொடர்பினாலும் இளமையிலேயே சைவவாழ்வுப் பயிற்சி கிடைத்தது. யாழ்ப்பாணத்திலும் இருந்த வீட்டுக்குப் பக்கத்தில் சிவன் கோயில் இருந்ததால் ஆலய வழிபாடும் தொண்டும் செய்யும் வாய்ப்புக்கிடைத்தது.

**நாவலர் மகா வித்தியாலயத்தின் புகழ் பூத்த பழைய மாணவனாக விளங்கும் நீங்கள் அங்கு எவ்வித கல்வி வாய்ப்பைப் பெற்றீர்கள்?**

நான் நாவலர் மகா வித்தியாலயத்தில் கல்விகற்கும் காலத்தில் அங்கு காவிய பாடசாலையும் நடைபெற்றது. பண்டிதர் வகுப்பு, சங்கீதம், நடனம், நாடகம், வாத்தியங்கள், தையல் முதலான கலைகள் எல்லாம் கற்பிக்கப்பட்டன. முகாமையாளர் எம். ஏ. முத்துக்குமாரு அவர்கள் என்னை 1951 அளவில் இந்த வகுப்புகளுக்கு உதவியாளராக நியமித்தார். அதனால் அவ் வகுப்புகளில் பயிலும் வாய்ப்பும் கிடைத்தது.

**அங்கு கற்பித்த கல்விமான்களைக் குறிப்பிட முடியுமா?**

புகழ்பூத்த கல்விமான்களான வித்துவான்கள் க.கி. நடராசன், சுப்பைய பிள்ளை, கார்த்திகேசு, இளமுருகனார், வ. மு. இரத்தினேஸ்வர ஐயர் முதலானோர் பண்டிதர் வகுப்பில் கற்பித்தார்கள். சி. நாகையா ஆசிரியர் அவர்கள் சைவ சித்தாந்தம் கற்பித்தார். சங்கீதவகுப்பை பி. சந்திரசேகரம் அவர்களும், நடனவகுப்பை தையல்நாயகி அச்சக முதல்வர் சரவணமுத்துவும், தேவார வகுப்பை வித்துவான் கார்த்திகேசுவும், சமஸ்கிருத வகுப்பை வியாகரண சிரோமணி சீதாராமசாஸ்திரிகளும் நடத்தினார்கள். இவர்களிடம் கற்கின்றபேறு பெற்றேன்.

**இப்பொழுதும் இவ்வகுப்புக்கள் நடைபெறுகின்றனவா?**

1960 இல் அரசாங்கம் பாடசாலையைக் கையேற்ற பின்னும் வகுப்புக்கள் தொடர்ந்தன. இப்போது நாவலர் தர்மகர்த்தா சபையும், சைவப்புலவர் சங்கமும் இணைந்து பண்ணிசை, இலக்கணம், சைவசித்தாந்தம், பண்டிதர் வகுப்புக்களை நடத்திவருகின்றன.

**நீங்கள் சிவபூசை நியமம் தவறாதவராக இருக்கிறீர்கள். உங்களுக்குச் சிவபூசை எழுந்தருளச் செய்தவர் யார்?**

நாவலர் மகா வித்தியாலயத்தில் கற்றதால் தினமும் பக்கத்திலுள்ள கற்பக விநாயகர் கோயிலில் தொண்டு செய்யும் வாய்ப்புக் கிடைத்தது. அங்கு ஒவ்வொருநாளும் மாலையில் சீதாராமசாஸ்திரிகள் வருவார். அவரே என்னைப் பக்குவப்படுத்தினார். திருமுறைச் சிவபூசை செய்யும் முறையையும் எனக்கு உபதேசித்தார்.

**அவரிடமிருந்து நீங்கள் வேறு என்ன நன்மைகளைப் பெற்றீர்கள்?**

சைவாலய நிர்வாகம் பற்றி எனக்குப் பழக்கியவர் அவரே. அத்துடன் பேராசிரியர் கைலாசநாதக் குருக்கள் போன்றோருடன் தொடர்புகள் கிடைத்ததும் அவராலேதான்.

**பெரியாரைத் துணைக்கோடல் எனும் இந்தப் பேறு எல்லார்க்கும் கிடைப்ப தரிது. இது பூர்வ புண்ணியபலன். இனி உங்கள் ஆசிரியப் பணியைப் பற்றிச் சொல்லுங்கள்?**

நான் 1953 இல் நாவலர் மகா வித்தியாலயத்தில் உதவியாசிரியராக நியமனம் பெற்றேன். 1966, 1967 இல் நல்லூர் ஆசிரிய கலாசாலையில் பயிற்சி பெற்றேன். 1968 தொடக்கம் கொறவப்பொத்தானை மகா வித்தியாலயத் தமிழ்ப்பிரிவிலும், 1974 முதல் மிகிந்தலை றோ. க பாடசாலையிலும், 15.01.1974 தொடக்கம் யாழ். பெரியபுலம் மகா வித்தியாலயத்திலும் கற்பித்துப் பிரதி அதிபராகப் பணியாற்றி 17. 01. 1991 இல் ஓய்வு பெற்றேன்.

**தினமும் திருமுறைச்சிவபூசை செய்யும் நியமம் உள்ள உங்களுக்கு வெளிமாவட்டங்கள் சிரமமாயிருந்திருக்குமே?**

இல்லை. அங்கெல்லாம் எனது சைவக்கோலத்துக்கு போதிய கௌரவம் தந்து எனக்கு விசேடவசதிகள் செய்து தந்தார்கள். கொறவப்பொத்தானையில் அதிபராயிருந்த பௌத்தகுருவும் மிகிந்தலையில் அதிபராயிருந்த கிறிஸ்தவரும் எனது சைவப் பண்பாட்டு வாழ்வுக்கு அளித்த மதிப்பை என்னால் எக்காலமும் மறக்கமுடியாது.

**கந்தவனக் கடவையில் பிறந்து, வண்ணார்பண்ணையில் மலர்ந்த உங்கள் சைவவாழ்வியலில் இல்லற வாழ்வு எப்படி அமைந்தது?**

1959 இல் கந்தர்மடம் துரையப்பா விஜயராணி அவர்களை மணம்புரிந்தேன். என் பூர்வ புண்ணியபலனாக எனது சைவத் தொண்டு வாழ்வுக்குத்தக்க உறுதுணையான வாழ்க்கைத் துணையாக அவர் கிடைத்தார். எனக்கு இரு ஆண்களும், இரு பெண்களுமாக நான்கு பிள்ளைகள். மூத்த மகன் பாலேந்திரன் எஞ்சினியர் நோர்வேயில் வாழ்கிறார். அடுத்த மகன் உயர்கல்வி பெற்று பிரான்சில் வாழ்கிறார். மகள் சிவகிருபா வரதராசா யாழ். பல்கலைக்கழகக் கலைப்பட்டதாரி லண்டனில் வாழ்கிறார். இளையமகள் கிருபாகரி கைலாசகிரி வவுனியாவளாக வர்த்தகப் பட்டதாரி லண்டனில் வாழ்கிறார். நான்கு பிள்ளைகளுமே மணம் முடித்துப் பிள்ளைகளுடன் சீரும் சிறப்புமாக வாழ்கிறார்கள்.

**உங்கள் வாழ்வில் சிவயோக சுவாமிகளின் சந்திப்புக்கள் ஏற்பட்டதுண்டோ?**

1954 இல் ஒருநாள் சிவன்கோவிலில் வழிபாடு முடித்துவிட்டு வெளியில் வந்தபோது முன்னால் கிடந்த கருங்கல்லில் யோகர் சுவாமிகள் இருந்தார். நான் அவரைக் கவனிக்காமல் போனேன். அவர் என்னைப் பார்த்து "உங்களுக்கு எங்களைத் தேவையில்லையோ" என்று கேட்டார். நான் அவரைபணிந்து வணங்கி விட்டுச் சென்றேன். இன்னொரு நாள் நான் சாந்தையர் மடம் கற்பக விநாயகரை வழமை போல் வெளியில் நின்று வணங்கினேன் அங்கு வந்த யோகர்சுவாமிகள் **'உள்ளே போ'** என்று கூறிவிட்டுப் போனார். அன்றுமுதல் தான் நான் கற்பக விநாயகரை உள்ளேசென்று வணங்கவும், அங்கு பலவித தொண்டுகள் செய்யவும் தொடங்கினேன். இன்னொரு நாள் சுவாமிகள் அந்த வழியால் வரும்போது என்னைக் கண்டதும் **'இப்போ பிள்ளையாரைப் பிடித்துக் கொண்டாயோ'** எனக் கேட்டுவிட்டுப் போனார். அவரது அருள்வாக்குத்தான் என்னை இந்த நிலைக்கு ஆக்கியதென்பதைப் பின்னர் உணர்ந்து மகிழ்ந்தேன்.

**உங்கள் சமயசேவை சைவாலயங்களினூடாகவும், சமய நிறுவனங்களினூடாகவும் செழித்தோங்கி இருப்பதைக் காண்கின்றோம். எந்த ஆலயங்களினூடாகப் பணி செய்திருக்கிறீர்கள்.**

*சாந்தையர் மடம் கற்பக விநாயகரைத் தினமும் வழிபட்டுத் தொண்டு செய்து வருகின்றேன். என்னை ஆலய நிர்வாகப்பணிக்கு வழிபடுத்திய சீதாராம சாஸ்திரிகள் கற்பித்தபடி இவ்வாலய தர்ம பரிபாலனசபைத் தலைவராயிருந்து பணி செய்தேன். திருப்பணிகள், பூசைவிழாக்களின் ஒழுங்கமைப்பு, புராணப்படிப்பு, பிரசங்க ஒழுங்கு, சமய வகுப்புகள் முதலான பணிகள் மேற்கொள்ளப்பட்டன. 1974 இல் கந்தபுராண மூலத்தைப் 18 முறை படித்து முடித்தோம். அதைத் தொடர்ந்து ஆண்டுதோறும் கந்தபுராணப் படிப்பு தைப்பூசத்தில் தொடங்கி வைகாசி விசாகத்தில் நிறைவுறும். புராணப்படிப்புத் தொடரக் கோயிலும் வளர்ந்தது.*

**வண்ணார்பண்ணைச் சிவன் கோயிலில் உங்கள் பணி எவ்வகையில் அமைந்தது?**

*இங்கும் எனது நித்தியவழிபாடும், தொண்டுகளும் இடம்பெற்றுவந்தன. கோயில் நிர்வாகத்தில் ஏற்பட்ட குழப்பங்கள் காரணமாக அவற்றைச் சீர்செய்வதற்காக நான் பரிபாலனசபைத் தலைவராக 1991 மார்ச் இல் நியமிக்கப்பட்டேன். 1993 நவம்பர் வரை தலைவராக இருந்து எல்லாச் செயற்பாடுகளையும் ஒழுங்கமைத்துக் கொடுத்தமையும், கோயிற் காணிகளைக் கோயிலுக்கே மீட்டுக் கொடுத்தமையும் எனக்கு மன நிறைவைத் தருகின்றது.*

**பன்றிக்கோட்டுப் பிள்ளையார் கோயில் எனும் ஸ்ரீ விஸ்வலிங்க மகா கணபதிப் பிள்ளையார் கோயிலுடன் உங்கள் தொடர்பு எப்படி?**

*1972 இல் தர்மகர்த்தா சபைச் செயலாளரானேன். 2004 இல் மகா கும்பாபிஷேகம் நடைபெறும் வரை எனது பணி தொடர்ந்தது.*

**வேறு கோயில்களிலும் பணி செய்ததுண்டோ?**

*பருத்தித்துறை விநாயக முதலியார் தெரு சித்திவிநாயகர் கோயில் பரிபாலகராயிருந்து 1981 இல் திருப்பணி நிறைவாகி மகாகும்பாபிஷேகம் நடைபெற உழைத்தேன்.*

**எந்தெந்தச் சபைகளினூடாக உங்கள் சமயப்பணிகள் நிகழ்ந்துள்ளன.**

*வண்ணை சாந்தையர் மடம் சைவசமய அபிவிருத்திக்கழகம் - அமைப்பாளர் (50 ஆண்டு சேவை) ஆரம்பிக்கப்பட்ட காலம்: 1953*

*சைவ இளைஞர்களை சமய ஈடுபாட்டில் பங்குபெறச் செய்வதற்காக சாந்தையர் மடம் ஸ்ரீகற்பக விநாயகர் கோவில் சைவசமய அபிவிருத்திக் கழகத்தினை உருவாக்கி அவர்களைச் சமயக்கல்வி, ஒழுக்கநெறி, சமூகப் பணி என்பவற்றில் பங்குகொள்ளச் செய்தேன். இன்று அக்கழகம் வெள்ளிவிழாவையும் பொன் விழாவையும் நடத்தியுள்ளது. சமயப் பரீட்சை, மாலை கட்டுதல், தோரணம் அமைத்தல், கோலம் போடுதல் ஆகிய போட்டிகளை நடாத்தி வருகின்றது.*

*சைவபரிபாலன சபை - தேர்வுச் செயலாளர், பிரசாரஅமைச்சர் தலைவர் (50 ஆண்டு சேவை)*

*கந்தபுராணசபை - செயலாளர் 1960 களில்*

வடமாநிலச் சைவஇளைஞர் மன்றம் - செயலாளர் 1950 களில் ,

நாவலர் தர்மகர்த்தா சபை - உறுப்பினர் 15 வருடங்கள்

நாவலர் ம.வித். பழைய மாணவர் சங்கம் தலைவர், செயலாளர்,

சைவப்புலவர்சங்கம் - தலைவர், செயலாளர், தேர்வுச்செயலாளர்,

சைவசித்தாந்த பண்டிதர் சங்கம் - அமைப்பாளர்,

வில்லூன்றிப் புனித தீர்த்தச்சபை - ஆரம்பகாலப் பொருளாளர் இப்போ உறுப்பினர்,

நாச்சிமார் கோயில் ச. ச. நிலைய சமயபாடப் பரீட்சகர்,

கோண்டாவில் தில்லைப்பதி - சமய அறிவுப் போட்டிப் பொறுப்பாளர்.

**யாழ். சைவபரிபாலன சபை மூலம் செய்த பணிகளில் எந்தெந்தப் பதவிகளில் இருந்து செய்தீர்கள்?**

1953 இல் உறுப்பினராகச் சேர்ந்தேன்.
1954 இல் நிர்வாகசபை உறுப்பினரானேன்.
1972 இல் உதவிப்பரீட்சைச் செயலாளரானேன்.
1978 இல் பரீட்சைச் செயலாளரானேன்.
1993 இல் சமயப்பிரசார அமைச்சரானேன். உபதலைவரானேன்
1993, 1999, 2004 ஆம் ஆண்டுகளில் நடத்த சைவமாநாட்டு அமைப்பாளராகவும், நூற்றாண்டுவிழா அமைப்பாளராயும் பணி புரிந்தேன்.
2003 இல் தலைவரானேன். அத்துடன் அறநெறிப் பாடசாலை அதிபராயும், நூலகப் பொறுப்பாளராயும் பணிபுரிகிறேன்.

**சைவபரிபாலன சபை மூலம் நீங்கள் செய்த பணிகளில் இளைய தலைமுறையினர்க்காகச் செய்தவைகளைக் குறிப்பிடுவீர்களா?**

ஆண்டுதோறும் நடாத்தப்படும் சைவ சமயத்தேர்வுகள், நாவலர் நாவன்மைப் போட்டிகள், பண்ணிசைப்போட்டிகள் என்பவற்றுடன் வலயாரீதியாகச் சைவசமய பாட ஆசிரியர்களுக்கு நடத்தப்படும் கருத்தரங்குகளையும் குறிப்பிடலாம். நூல்வெளியீடுகளையும் குறிப்பிடலாம்.

**உங்கள் முயற்சியால் சபை மூலம் வெளியிட்ட நூல்களைக் குறிப்பிடுவீர்களா?**

1. சைவக் கிரியை விளக்கம்
   *சைவப்பெரியார் சு. சிவபாதசுந்தரம்*
2. சைவசமய சாரம்
   *சைவப்பெரியார் சு. சிவபாதசுந்தரம்*
3. முதலாம் சைவ வினாவிடை
   *ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்*
4. திருவருட்பயன்
   *சைவப்பெரியார் சு. சிவபாதசுந்தரம் அவர்கள் உரையுடன்.*
5. நீதிவாக்கியங்கள்
   *ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்*
6. ஆத்திசூடி, கொன்றைவேந்தன்
   *மூலமும் உரையும்*
7. சிவாலய தரிசனவிதி
8. திருக்கேதீஸ்வரப் பதிகம்
9. அரசினரால் வெளியிடப்பட்ட சைவநெறிப் பாடநூல்களின் பிழைதிருத்தம்.

முதலிலானவற்றைக் குறிப்பிடலாம்.

**நாவலர்வழி நின்று சைவப்பிரசங்கங்கள் செய்துவருகிறீர்கள். கோயில்கள், விழாக் களில் அன்றி வேறு இடங்களிலும் இப் பணி செய்வதுண்டா?**

கோப்பாய் திறந்தவெளிச் சிறைச் சாலையில் கோயிலமைத்தும், யாழ்ப் பாணச் சிறைச்சாலையிலும் ஞாயிறு தோறும் சமய போதனை செய்தேன். கைதடி வயோதிபர் விடுதியில் வெள்ளி தோறும் நற்சிந்தனை வழங்கினேன்.

**பலநிறுவனங்கள் தங்களை முதன்மை விருந்தினராக அழைத்துக் கௌரவிப் பதில் பெருமை பெற்றன. சில நிறுவ னங்கள் கௌரவப்பட்டங்களையும் வழங்கி மரியாதை செய்துள்ளன. அப் படி உங்களுக்கு வழங்கப்பட்ட பட் டங்கள் பற்றிச் சொல்லுங்கள்.**

நல்லையாதீனம் "சித்தாந்தவித்தகர்" - (1966)
சைவப்பாதுகாப்புச்சபை - சிவனடியார்மணி
மதுரை திருஞானசம்பந்தர் ஆதீனம் - "சிவநெறிச் செம்மல்" (1971.8.5)
ஆத்ம நாதசர்மா ஞாபகார்த்தசபை - சிவ நெறிக்காவலர்(200.8.6)
சைவப்புலவர் சங்கம் - "சைவபூஷணம்" (2001.7.22)
சர்வதேச இந்துமத குருபீடம் - "சிவ நெறிக்கலாநிதி" (2002.4.10)
கொட்டடி கி.அபிவிருத்திச் சங்கம் - "சமூக திலகம்" (2002.4.14)

**பல்வேறு அரசியல் சமூக, நிர்வாகப் போராட்டச் சிக்கல்கள் நிறைந்த சூழ்நிலை யிலும், முரண்பட்ட மனப்பாங்குடையோர் மத்தியிலும் தாங்கள் எவ்வித சலனமு மின்றி உங்கள் பணியைச் செய்துவரு கின்றீர்களே, இது எப்படி உங்களால் முடிகின்றது?**

**'என்கடன்பணி செய்து கிடப்பதே'** எனும் அப்பர் பெருமான் வாக்கை உறுதியாகக் கடைப்பிடிக்கிறேன், பணிகளைப் பணிவுடன் செய்கிறேன். யார் எது சொன்னாலும் என் கடமையை செய்கிறேன். **"நன்றும் தீதும் பிறர்தர வாரா'** என்பதில் எனக்குப் பூரண நம்பிக்கை யுண்டு. பணி செய்தலே எனது கர்மயோகம்.

**75 வயதாகிறது. உடல் தளர்ந்தநிலை யிலும் உற்சாகமாகச் செயற்படுகிறீர்களே வீட்டில் பிரச்சனைகள் இல்லையா.?**

எனது மனையறத்தின் வேராக இருந்த என் துணைவியாரே வீட்டுத் தேவைகள் அனைத்தையும் கவனித்துக் கொண்டு என்னை இப்பணிகளுக்கு அர்ப்பணித்தார். அவர் மறைந்தபின் (1998) எனது மருமகள் (சகோதரியின் மகள்) பிரியதர்சினி தன் மாமி யைப் போன்று என்னைப் பிரியமாகத் தரி சித்துப் பராமரிக்கின்றார். எனக்கு ஒரு குறையு மில்லை.

**இவ்வையகம் பயனுற வாழ்வதற்கே வரம் பெற்று வந்தவர் தாங்கள். தங்களை வாழ்த்தி வணங்கி விடைபெறுகிறேன்.**

தவமும் தவமுடையார்க்கு ஆகும் அவம்அதனை
அஃதிலார் மேற்கொள் வது.

உ
சிவமயம்

# வள்ளுவர் காட்டும் அறநெறியொழுக்கம்

சைவப்புலவர் வ. கந்தசாமி

மனிதனின் வாழ்வு தொடக்கத்தி னின்றே அறவழியொழுகி இறுதியில் அறத் தின் ஆழியான இறைவன் திருவடியிற் கலக்க வேண்டும். குழந்தைப் பருவத்தி னின்றே நல்லொழுக்கம் பிடிபட வேண் டும், இல்லறம் புகுமுன் ஆண் பெண் இரு வருக்கும் நல்ல நடையுடை பாவனை களும், போதிய கல்வியும் இருக்க வேண் டும். அத்தகைய நல்லொழுக்கமும், கல்வி யறிவும், ஆற்றலும் நன்கு வளர்ச்சி பெறு வதற்கே ஆன்றோர் பிரமச்சரிய ஆச்சிர மத்தை முன் வகுத்தனர். கல்வி கண்; ஒழுக்கம் கை போலும். என்று பிறந் தோமோ அன்றே ஒழுக்கமும் பிறக்கிறது. பெற்றோர், ஆசிரியர், நண்பர் கூட்டுறவா லும், கல்விப்பயிற்சியாலும் அந்த ஒழுக் கம் மென்மேலும் வளருகிறது. குழந்தை யின் இயல்பைப் பெற்றோர் கண்ணுங் கருத்துமாகக் கவனிக்க வேண்டும்; தாமும் நல்லொழுக்கமுடையவராய் நடந்து கொள்ளவேண்டும். வாய்மை, நாண், பண்பு, அடக்கம், நன்றி, நடுநிலை, சான் றாண்மை முதலிய ஒழுக்கங்கள் இளமை யிலே நன்கு பிடிபட்டு இயல்பில் அமைய வேண்டும்.

ஒழுக்கத்தைப் பார்த்தே மனிதனை அறியலாம். ஒழுக்கம் உயர்வு, இழுக்கம் இழிவு, ஒழுக்கமே ஒருவனுக்கு மேன்மை யும் புகழும்தரும். ஒழுக்கத்தையே உயிரினும் பெரிதாகக் காக்க வேண்டும்.

**'ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்**
**உயிரினும் ஓம்பப் படும்'**

ஒழுக்கமானது மனிதப்பிறவியில் மேன் மையைக் கொடுக்கிறது. மனிதப்பிறவியே மற்றைய பிறவியிலும் சிறந்தது. அந்த மனி தப் பிறவியை எடுத்த உயிர் அம்மக்களுட் சிறந்தவராக வாழக் கருதுவது இயல்பு. அந் தச் சிறப்பினை இந்த ஒழுக்கம் கொடுப்ப தால் அந்த ஒழுக்கத்தையே உயிரைவிடச் சிறப்பாகப் போற்றவேண்டும்.

ஒருவனுக்கு உண்மையான குடிப் பிறப்பு என்பது எது? ஒருவனுக்கு உண்மை யான செல்வம் என்பது எது? என்றால், எந்த ஒன்று உண்மையான உயர்வளிக்கின்றதோ அதுவே குடிமையும் செல்வமுமாகும். அத னைத்தான்

**'ஒழுக்கம் உடைமை குடிமை இழுக்கம்**
**இழிந்த பிறப்பாய் விடும்'**

என்றும்,

**'பரிந்தோம்பிக் காக்க ஒழுக்கம் தெரிந்தோம்பித்**
**தேரினும் அஃதே துணை'**

என்றும் கூறினார்.

அழுக்காறுடையானுக்கு ஆக்க மில்லை. ஒழுக்கமில்லானுக்கு உயர்வில்லை. உறுதியுள்ளவன் ஒழுக்கங்குன்றான். ஒழுக்க

முள்ளவன் மேன்மை பெறுவான். ஒழுக் கங் கெட்டவன் பெரும்பழி சுமப்பான். நன்மைக்கு வித்து நல்லொழுக்கம். தீயொ ழுக்கம் என்றும் துன்பமாம்.

**'நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கந்**
**தீயொழுக்கம்**
**என்றும் இடும்பை தரும்'**

**வாய்மையே அறத்தின் தாயகமாகும்:**

மனமொழி மெய்யால் பொய்யா தொழுகினால் வேறு அறம் செய்யவேண் டிய தேவையில்லை. உண்மையைக் காட்டிலும் உயர் அறம் இல்லை.

**'பொய்யாமை பொய்யாமை ஆற்றின் அறம்பிற**
**செய்யாமை செய்யாமை நன்று'**

நெஞ்சார அறிந்ததை மறைத்துப் பொய் சொல்லற்க. அப்படிப் பொய்த் தால் தனது மனச்சாட்சியே தன்னைச் சுடும்.

**'தன்நெஞ் சறிவது பொய்யற்க பொய்த்தபின்**
**தன்நெஞ்சே தன்னைச் சுடும்'**

உண்மையைக் கூட ஆராய்ந்து பேசவேண்டும். பிறருக்கு தீமை நேரிடு மானால் அதையும் பேசாமல் இருக்க வேண்டும். யாதும், யார்க்கும் தீமையில் லாது பேசுதலே வாய்மை.

**'வாய்மை எனப்படுவது யாதெனில்**
**யாதொன்றும்**
**தீமை இலாத சொலல்'**

**நல்ல ஒழுக்கத்துக்கு நாணமே வேலி:**

பழிபாவத்திற்கு அஞ்சி நடக்க வேண் டும். செய்யத்தகாத காரியத்தைச் செய்ய நாண வேண்டும். இத்தகைய நாணத்தால் தீமை குறையும். நாணமே மாந்தர் சிறப்பு. சான்றோருக்கு நல்ல அணியாயுள்ளது நாணமே. நாணமில்லாத செருக்கு நடை கொடிய பிணியைப் போல நலத்தை யெல்லாம் தேய்க்கும்.

**'அணிஅன்றோ நாணுடைமை சான்றோர்க்**
**கஃதின்றேல்**
**பிணிஅன்றோ பீடு நடை'**

நாணமற்றவர் உயிர்கொண்டு நடமாடு வது கயிறுகட்டி ஆடும் பொம்மல் ஆட்டம் போல வெறும் போலி நாட்டமாகும்.

**'நாணகத் தில்லார் இயக்கம் மரப்பாவை**
**நாணால் உயிர்மருட்டி யற்று'**

**பண்போடு நடந்தால் அன்போடு மதிப்பர்:**

மனிதரை மனிதர் மதித்து மரியாதை யுடன் அன்பும் ஆதரவுங்காட்டி யொழுகுதலே பணிவு. நம்மை நாடி வந்தோரை அகமகிழ்ந்து முகமலர்ந்து சிறப்பாக வரவேற்க வேண்டும். அத்தகையோருக்கு பண்பு மிகும். பண்பு எத் தகையதோ அவ்வளவிற்குத்தான் குலமாண்பு வளர்ச்சியடையும். நீதியும் அறமும் புரிந்து பலர்க்குப் பயன்பட வாழ்வோரின் பண்பை உலகம் பாராட்டும்.

**'நயனொடு நன்றி புரிந்த பயனுடையார்**
**பண்புபா ராட்டும் உலகு'**

பிறர்க்குதவும் பண்பில்லாத உலோபி யினுடைய மிகுந்த செல்வம் தீயகலத்தில் வைக்கப்பட்ட பசும்பாலைப் போலத் திரிந்து கெடும்.

**'பண்பிலான் பெற்ற பெருஞ்செல்வம் நன்பால்**
**கலந்தீமை யால்திரிந் தற்று.**

ஆகவே அறிஞர் செல்வர், பொது நலம் படைத்தோர். யாவரும் பிறரை நன்கு மதித்துப் பண்புடன் நடக்க வேண்டியது கடனாகும்.

முதலிடமாக யாவருக்கும் நாவடக்கம் அவசியம் வேண்டும். அடங்காத நாக்கு கரும்பாம்புக்கு ஒப்பாகும். ஒரு வன் எதைக் காக்காவிட்டாலும் நாவைக் காக்க வேண்டும் அங்ஙனம் காவாதொழியின் சொல்லிழுக்குப் பட்டுத் துன்பம் அடைவான்.

**'யாகாவா ராயினும் நாகாக்க காவாக்கால்**
**சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு'**

ஆகையால் ஐந்தடக்கி, தன்னிலைதிரியாது உள்ளடக்கி நிலைத்தவன் காட்சி, மலையிலும் மிகப்பெரிதாகும்.

**'நிலையில் திரியாது அடங்கியான் தோற்றம்**
**மலையினும் மாணப் பெரிது'**

**நன்றி செய்தாரை என்றும் மறவேல்:**

நாம் உதவியொன்றும் செய்யாமலிருக்க, நமக்குத் தக்கசமயத்தில் ஒருவன் உதவினால், அவ்வுதவிக்கு உலகையும் - வானத்தையும் கொடுத்தாற்கூட ஈடாகாது.

**'செய்யாமற் செய்த உதவிக்கு வையகமும்**
**வானகமும் ஆற்ற லரிது'**

வேண்டிய காலத்து எதிர்பாராது செய்த உதவி உலகினும் மிகப்பெரிது.

**'காலத்தினாற் செய்த நன்றி சிறிதெனினும்**
**ஞாலத்தின் மாணப் பெரிது'**

தனக்கு ஏற்பட்ட துன்பத்தைத் துடைத்தவர் நட்பை ஏழுபிறப்பிலும் நன்றியுடன் நினைப்பர். எவ்வளவு தீமை செய்தாலும் ஒருவர் செய்த நன்றியை நினைக்க வேண்டும். நன்றி மறவேல் தீமையை உடனே மறக்கவேண்டும்:

**'நன்றி மறப்பது நன்றன்று நன்றல்லது**
**அன்றே மறப்பது நன்று'**

செய்ந்நன்றி கொன்ற மனிதனுக்கு ஒரு காலத்தும் உய்வில்லை; என்பதனை

**'எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம்**
**உய்வில்லை**
**செய்ந்நன்றி கொன்ற மகற்கு'**

என்று வள்ளுவர் மிக நயமாக எடுத்துக் கூறியுள்ளார்.

கேடு இல்லாமல் வாழ வேண்டுமானால்; சந்ததி வழுங்க வேண்டுமானால், வஞ்சனையை ஒழித்து நடுவு நிலைமைப்படி நடக்கவேண்டும்.

**'சமன்செய்து சீர்தூக்குங் கோல்போல்**
**அமைத்தொருபால்**
**கோடாமை சான்றோர்க் கணி'**

நடுவுநிலைமையான செல்வம், சிதையாது சந்ததிகளுக்கு உறுதியாகவிருக்கும். மக்களைப் பார்த்தால், அவரவர் பெற்றார் தக்கவர். தகாதவர் என்பது தெரியும், நடுவு நிலைமையாளருக்கு நல்ல சந்ததி எய்தும்

**'தக்கார் தகவிலர் என்ப தவரவர்**
**எச்சத்தாற் காணப் படும்.**

வாணிகத்திலும் நடுவுநிலைமையைக் காக்க வேண்டும். தனக்கு ஊதியம் கருதுவது போலப் பிறர்க்கும் நல்ல பொருள்களைத் தரவேண்டும். தன்னலம் போலப் பிறர் நலமும் கருதும் வாணிகனுக்கு நல்ல வியாபாரமாகும்.

**'வாணிகஞ் செய்வார்க்கு வாணிகம்**
**பேணிப்**
**பிறவுந் தம்போற் செயின்'**

இவ்வாறு நடுவுநிலைமையை மேற்கொண்டு நடப்பதே பகுத்தறிவுடைய மக்களின் கடமையாகும்.

**சான்றோன் எனவே தக்கார் சொல வாழ்:**

ஒவ்வொரு நாளும் சிறுமை போக்கிப் பெருங்குண மேலோனாக வேண்டும். குணமே சான்றோர் நலம். பிறப்பு, கல்வி, பட்டம், பதவி முதலிய நலமெல்லாம் பொருளல்ல; நல்லவெல்லாம் சான்றோர் கடமையாம். நல்லவை எவை? அன்பு, நாண், ஒப்புரவு, கண்ணோட்டம், வாய்மை, இவையைந்தும் சான்றாண்மை (சால்பு) என்னும் மாளிகையைத் தாங்கும் ஐந்து தூண்களாகும்.

**'அன்புநாண் ஒப்பரவு கண்ணோட்டம் வாய்மையோடு**
**ஐந்துசால்பு ஊன்றிய தூண்'**

தவத்திற்கழகு கொல்லாமை; சான்றாண்மைக் கழகு பிறர் கெடுதலைச் சொல்லாமை.

**'கொல்லா நலத்தது நோன்மை பிறர்தீமை**
**சொல்லா நலத்தது சால்பு.**

ஒரு காரிய சாதனைக்குப் பணிவு பேராற்றலைத் தரும். அதையே படையாகக் கொண்டு சான்றோர் பகைவர் பகைமையை மாற்றுவர்.

**'ஆற்றுவார் ஆற்றல் பணிதல் அதுசான்றோர்**
**மாற்றாரை மாற்றும் படை.**

தம்மைவிடத் தாழ்ந்தோரிடமும் சான்றோர் தோல்வியை ஒப்புக் கொள்வர். தீமை செய்தவருக்கும் நன்மையே செய்வது சான்றோரியல்பு. அப்படிச் செய்யாத சால்பு பயனில்லை.

**'இன்னா செய்தார்க்கும் இனியவே செய்யாக்கால்**
**என்ன பயத்ததோ சால்பு'**

சான்றோர் வறியராயினும் இழிவன்று. உலகில் வரும் எத்தகைத் துன்பத்திற்கும் சான்றோர் அஞ்சார். ஊழி பெயர்ந்தாலும் தமது ஒழுக்கத்திற் சிதையாதவர் சான்றாண்மைக்கு ஆழியாவர்.

**'ஊழி பெயரினும் தாம்பெயரார் சான்றாண்மைக்கு**
**ஆழி எனப்படு வார்.**

சான்றவர் சான்றாண்மையிற் குன்றினால் உலகம் தாங்காது. இவ்வாறு அன்பு, நாண் பரோபகாரம், பழைய நண்பரை மதித்தல், உண்மையுரைத்தல், கோள் பொய் உரையாமை, குண்டுணித்தனம் செய்யாமை, சிறுமை - பொறாமையின்மை, பணிவு, இனிமை, கனிவு, ஒழுக்கத்தில் உறுதி இவையெல்லாம் சான்றோர் தன்மை. இவற்றைச் சிறுவயதினின்றே வாழ்வில் அமையச் செய்க!

ஆகவே வள்ளுவர் காட்டிய அறநெறி ஒழுக்கங்களை மேற்கொண்டு வாழ்ந்து பயனடைவோமாக. இதுவே நாம் வள்ளுவருக்குச் செய்யும் மரியாதையுமாகும். வெறும் விழாக்கள் பல கொண்டாடினால் மட்டும் போதாது. சொல்லளவில் மாத்திரம் நின்றுவிடாது இயன்றவரை செயலளவில் காட்டுவதே மிகமேலானது. வள்ளுவர் தந்த திருமறையைப் போற்றிப் படிப்போமாக.

# பவளவிழா காணும்
# சைவப்புலவர் வ. கந்தசாமி அவர்களின்
# சேவைநலன் பாராட்டுவிழா

இடம்: **யாழ் / வண்ணை நாவலர் மகா வித்தியாலயம்**

காலம்: **20. 03. 2005 ஞாயிற்றுக்கிழமை**

**தலைமை:**

***திரு. செ. சுப்பிரமணியம்***

(தலைவர். வண்ணை சாந்தையர்மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் கோவில். தர்மபரிபாலனசபை)

நேரம்: **மாலை 3.30 மணி**

***அன்பர்கள், ஆதரவாளர்கள், அறங்காவலர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், அபிமானிகள் யாவரும் கலந்து விழாவைச் சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.***

*செ. சுப்பிரமணியம்*
*தலைவர்*

*இ. குகதாசன்*
*செயலர்*

## நிகழ்ச்சிகள்

**3.30** வழிபாடு (வண்ணை வைத்தீஸ்வரன் கோவில்)

**3.40** பவளவிழா நாயகரை மங்கல வாத்தியங்கள் சகிதம் விழா மண்டபத்துக்கு அழைத்துவரல்.

**4.00** மங்கல விளக்கேற்றல்

**4. 05** திருமுறை ஓதுதல்
(தேவார இசைமணி தாவடியூர் கே. எஸ். ஆர். திருஞானசம்பந்தன்)

**4.10** ஆசியுரை : ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரதேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்.
(குருமகா சந்நிதானம். நல்லை ஆதீனம்)

**4.15** சிவஸ்ரீ ச. மகேஸ்வரக்குருக்கள் (அகில உலக இந்துமத குருபீடாதிபதி)

**4.25** சிவஸ்ரீ கை. திருஞானசம்பந்தக்குருக்கள்
(வரணி கரணவாய் ஆதீனம். போசகர் சைவக்குருமார் அர்ச்சகர் சபை)

| | |
|---|---|
| 4.35 | சிவஸ்ரீ. கா. சதானந்தசர்மா<br>(வண்ணை சாந்தையர்மடம் ஸ்ரீகற்பக விநாயகர் தேவஸ்தானம்) |
| 4.40 | வரவேற்புரை : அதிபர். ந. சிவராசா<br>(செயலர். நாவலர் தர்மகர்த்தா சபை) |
| 4.50 | தலைமை உரை: |
| 5.00 | வாழ்த்துரை : பேராசிரியர் சி. க. சிற்றம்பலம்<br>(பீடாதிபதி. பட்டப்பின்படிப்புகள் பீடம். யாழ். பல்கலைக்கழகம்) |
| 5.10 | திருமதி. நாச்சியார் செல்வநாயகம்<br>(தலைவர். இந்துநாகரிகத்துறை. யாழ். பல்கலைக்கழகம்) |
| 5.20 | கந்த பவளமலர் - வெளியீட்டுரை : பேராசிரியர் ப. கோபாலகிருஷ்ணஐயர் |
| 5.30 | விழா நாயகருக்கு பவளவிழா மலர் வழங்கல். |
| 5.35 | பவளவிழா மலர் பிரதிகள் வழங்கல்<br>முதற்பிரதி: திரு. சு. பாஸ்கரன் ஆச்சாரி (பாஸ்கரன் சிற்பாலயம்)<br>(சிறப்புப் பிரதி பெறுநர் பட்டியல் இணைக்கப்பட்டுள்ளது) |
| 5.40 | நயப்புரை : செற்சொற்செல்வர் ஆறு திருமுருகன் அவர்கள் |
| 5.50 | விழா நாயகரைக் கௌரவித்தல் |
| 6.00 | சபையோர் கௌரவம் |
| 6.10 | அறக்கொடை நிதியம் வழங்கல் |
| 6.20 | பாராட்டுரை:<br>1) திரு. ப. விக்னேஸ்வரன் (கல்விப் பணிப்பாளர். யாழ். வலயம்) |
| 6.30 | 2) திரு. இ. விஜயரட்ணம் (தலைவர். சைவசமய அபிவிருத்திக் கழகம்) |
| 6.40 | 3) சிவனருட் செல்வர் இரா செல்வவடிவேல் |
| 6.50 | 4) சைவப்புலவர் கந்த. சத்தியதாசன் (சைவப்புலவர் சங்கம்) |
| 7.00 | சிறப்புரை : பேராசிரியர் இ. குமாரவடிவேல்<br>(பீடாதிபதி விஞ்ஞானபீடம். யாழ். பல்கலைக்கழகம்) |
| 7.15 | மலராசிரியருரை: சைவப்புலவர் சு. செல்லத்துரை |
| 7.25 | விழாநாயகர் உரை : சைவப்புலவர் வ. கந்தசாமி |
| 7.35 | நன்றியுரை: செயலர் அவர்கள் |
| 7.45 | திருமுறை ஓதுதல் |
| 8.00 | விழா இனிது நிறைவுறும் |

# பாராட்டுவிழாச் சபையினரின் பங்களிப்பு

| | | | |
|---|---|---|---|
| 01. | சாந்தையர்மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் தர்மபரிபாலன சபை | ரூபா | 7000.00 |
| 02. | சாந்தையர் மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் சைவசமய அபிவிருத்திக் கழகம் | ரூபா | 7000.00 |
| 03. | வில்லூன்றிப் புனித தீர்த்தப் பரிபாலனசபை | ரூபா | 7000.00 |
| 04. | ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் தர்மகர்த்தா சபை | ரூபா | 7000.00 |
| 05. | அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கம் | ரூபா | 7000.00 |
| 06. | பன்றிக் கோட்டுப் பிள்ளையார் ஆலயம் | ரூபா | 5000.00 |
| 07. | யாழ். சைவ பரிபாலன சபை | ரூபா | 5000.00 |
| 08. | ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கம் | ரூபா | 3000.00 |
| 09. | பெரியபுலம் மகா வித்தியாலயம் | ரூபா | 2000.00 |
| 10. | அகில இலங்கைச் சைவசித்தாந்த பண்டிதர் சங்கம் | ரூபா | 2000.00 |
| 11. | அங்குசகாச விநாயகர் ஆலயம் | ரூபா | 1000.00 |
| 12. | வண்ணை காமாட்ஷியம்பாள் சனசமூக நிலையம் | ரூபா | |



39183



## பவளவிழா நாயகன்

# வல்லிபுரம் கந்தசாமி

கந்தவனக் கடவைபுகழ் வல்லிபுரம் மைந்தன்
கந்தனருள் நல்லறிஞன் கந்தசாமிப் பெயரோன்

கந்தர்மடம் வாழ்வுதந்து வாழ்வாங்கு வாழ்வோன்
கற்பகலி நாயகரின் கலைஞானம் பெற்றோன்

சிந்தைநிறை சித்தாந்த சைவநெறிச் செம்மல்
திருமுறை நற் சிவபூசை தினம் தினமும் செய்வோன்

சொந்தமெனச் சைவத்தமிழ்ப் பண்பாடு காப்போன்
தூயதிரு நீற்றொளிபோல் சுடர்விடுநல் உளத்தோன்

பணிவுடைமை இன்சொல்லே அணியான சான்றோன்
பணிசெய்யும் பக்குவத்தில் பழுத்தசைவத் தொண்டன்

பணியெல்லாம் நாவலரின் வழிநின்று செய்வோன்
பாதமலர் பணிந்து நாம் பவளவிழா எடுப்போம்

சைவப்புலவர் க. செல்லத்துரை

பாரதி பதிப்பகம், 430, காங்கேசந்துறை வீதி, யாழ்ப்பாணம்.